# நீதி மயக்கம்

## சிரஞ்சீவி




Comics PDF Times
HSC

# நீதி மயக்கம்

(ராமதுரை கொலைவழக்கு)

COMICSPDFTIMES
HSC

சிரஞ்சீவி

எழுதிய மர்ம நாவல்

மர்ம நாவல்

(வயது வந்தவர்களுக்கு)

பிரேமா
பிரசுரம்

35 (புதிய எண்) ஆற்காடு ரோடு : : சென்னை-600 024

பதிப்புரிமை வாய்ந்தது

விலை ரூ. 1-00

பிரேமா பிரசுரம்—2
ஐந்தாம் பதிப்பு : ஜனவரி, 1979
சகல உரிமைகளும் பெற்றது.

இந்நாவலில் வரும் பெயர்கள், சம்பவங்கள், சூழ்நிலைகள் அனைத்தும் கற்பனையே. இறந்தோர், இருப்போர் எவரையும் குறிப்பிடுவன ஆகா.

NOT FOR SALE
FAN MADE ONLY

---

## கொலை என்று கருதுவானேன் ?

---

இந்தக் கொலையின் மர்மங்கள்—

இள வயதுக் காதல்...
கூடா நட்பு...
கைக்குக் கிடைத்த கடிதம்...
கத்தியின் மீது கைரேகை...
இடி பட்ட மோட்டார்...
பூட்ஸ் பதிந்த தடம்...
கலந்திருந்த வர்ணம்...
ஓடிப்போன செய்கை...
அகப்பட்ட பத்தாயிரம்...

இத்தனையும் சாட்சி சொன்னால் ?

குற்றவாளிதான் நிரபராதியாகி விடுவானா; அல்லது நிரபராதி தான் குற்றவாளியாகாமல் தப்ப முடியுமா?

---

அச்சிட்டோர் : லீப்ஸிக் பிரிண்டர்ஸ், சென்னை—600 014

அத்தியாயம் : 1

## ஆலை முதலாளியின் அகோர மரணம்!

கம்பீரமாக விளங்கிய அந்த விசாலமான பங்களா, பார்ப்பவர்கள் கண்களுக்குக் கூனிக் குறுகிப்போய் அசைந்தாடுவது போலத் தோற்றமளித்தது. ஆலைகளினின்றும் எழுந்துவரும் அலறல் சப்தங்களை எதிர் கொண்டு தடுத்துத் துரத்தியடித்துவிட்டு 'ஜில்'லென வீசுகிற இளந் தென்றலுக்கு மட்டிலும் வழி நீக்கித் தரும் அடர்த்தியான மாமரங்கள்கூட தூங்கு மூஞ்சி மரம் போல் சமாதி நிலை அடைந்திருந்தது.

'கோன் ஹை?' என்று உறுமி அதட்டிச, காக்காய் கூட அந்த மாளிகைக்குள் நுழையாதபடி முன் வாசலில் ஈட்டிக் கம்புடன் காவல் புரிந்துவந்த கூர்க்காவிற்குப் பதில் இரண்டொரு போலீஸ் ஜவான்கள் 'பாராக்' கொடுத்து நின்று கொண்டிருந்தனர். பங்களா உள்ளே பஞ்சாலை முதலாளி ராமதுரை கொலையுண்டு கிடந்தார். தூரத்திலிருந்து பஞ்சாலையில் வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளிகள் 'நிஜமாகவா?' என்று பதை பதைத்துக் கேட்டபடி அந்த இடம் நோக்கி ஓடி வந்து கொண்டிருந்தார்கள். "எங்களை அனுமதியுங்கள். கடைசித் தரமாகவாவது எங்கள் முதலாளியை ஒரு தரம் பார்த்துவிடுகிறோம்" என்று பல தொழிலாளிகள் ஓலமிட்டுக் கொண்டிருந்தார்கள்.

அங்கே கூடியிருந்த ஜனக்கூட்டம் "இப்படியும் நடக்குமா?" என்று பரிதபித்து ஸ்தம்பித்தது. 'என்ன அக்ரமம்!" என்று வருத்தப்பட்டுக் கொண்டனர் சிலர். 'மனதாலும் தீங்கு நினைக்காத ராமதுரைக்கா இந்தக் கதி?' என்று மலைத்தனர் அனைவரும்.

ஆனால், உள்ளே நடுஹாலில் அங்குமிங்கும் உலாவிக் கொண்டிருந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் அருணகிரி அழவில்லை, துக்கப்படவில்லை, பரிதாபப்படவில்லை; பதைபதைக்கவில்லை; ஏனென்றால் அவர் அதற்காக அங்கு வரவில்லை!

"ஓய், வாஞ்சிநாதன்! உள்ளதைச் சொல்லும்" என்று கர்ஜித்துக் கொண்டிருந்தார் அவர். "காலையில் இந்தப் பங்களாவிற்கு

நீங்கள் வந்தபோது யார் யார் இங்கிருந்தார்கள்? அதைச் சொல்லும் முதலில்!'' என்றார்.

''வேறு யாருமில்லை, முதலாளியும், மில் மானேஜர் கண்ணனும் தான் நடு ஹாலில் பேசிக் கொண்டிருந்தார்கள்,'' என்றான் மில் கணக்கப்பிள்ளை வாஞ்சிநாதன். அவனது கையும் மெய்யும் பயத்தால் உதறலெடுத்துக் கொண்டிருந்தது.

''நீங்கள் கண்ணால் பார்த்தீர்கள் இல்லையா!''

''ஆமாம்!''

''என்ன ஆமாம்?''—பூட்ஸ் காலைத் தரையில் ஓங்கி உதைந்து கொடுத்தார் இன்ஸ்பெக்டர்.

''நான் நிஜத்தைத்தான் சொல்லுகிறேன் ஸார்! நான் பங்களா வராந்தாவிற்கு வந்தபோது, உள்ளே ஹாலில் யாரோ பேசிக் கொண்டிருக்கும் குரல் கேட்டது. முதலாளி யாருடனோ பேசிக் கொண்டிருக்கிறார் என்ற எண்ணத்தால் வெளியே நின்று விட்டேன். ஆனால், அவர்களிடையே நடந்த பேச்சு காரசாரமாக இருந்ததால் என்னவாக இருக்கும் என்று காது கொடுத்துக் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். என் முதலாளி ராமதுரை உரத்த குரலில், 'சண்டாளா! உண்ட வீட்டுக்கே உலை வைத்து என் குடும்பத்தையே சர்வ நாசம் செய்து விட்டாயேடா பாவி!' என்று கோபத்தோடு கத்திக் கொண்டிருந்ததைக் கேட்டு வராந்தாவில் நின்று கொண்டிருந்த நான் உள்ளே ஓடினேன். முகம் கருத்துப் போய் மானேஜர் கண்ணன் தலைகுனிந்தபடி நின்று கொண்டிருந்தார். பதில் ஏதும் பேசாமல் அவர் நின்று கொண்டிருந்தாலும், அவரது தாடைகள் அசைவதிலிருந்து அவருக்கு ஆத்திரமும் கோபமும் அதிகரித்துக் கொண்டு வருகிறது என்பதைத் தெரிந்து கொண்டேன். வார்த்தை தடித்தால் என்ன ஆகுமோ என்று நான் திகைத்துக் கொண்டிருந்தபோது என்னை என் முதலாளி பார்த்து விட்டார். அப்போது அவர் என்னைப் பார்த்த பார்வையில் பயந்து வெளி வாசலுக்கு வந்து நின்று கொண்டேன்'' என்று தனக்குத் தெரிந்ததையெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தான், மில் கணக்கப்பிள்ளை வாஞ்சிநாதன்.

இன்ஸ்பெக்டர் அருணகிரியின் முகம் சிறிது மலர்ந்தது. ஆனால் சப்-இன்ஸ்பெக்டர் ஆர்தரோ, தன் காதை மட்டும் அந்தச் சம்பாஷணையில் விட்டு விட்டு, அறையைச் சுற்றித் தன் கண்களைச் சுழலவிட்டுக் கொண்டிருந்தார்.

குத்துண்டு, கொலைப்பட்டு, ரத்த வெள்ளத்தில் மிதந்து கிடக்கும் ராமதுரையின் பிரேதத்தைப் பார்க்கச் சகியாமல் 'ஏட்டய்யா' ஒரு போர்வையை எடுத்து மூடிக்கொண்டிருந்தார்.

''அட்பறய்?'' என்றார் அருணகிரி தன் கெபடுக்கு மீசையைத் திருகி விட்டுக் கொண்டே.

"பிறகு, தொடர்ந்து உள்ளே இருந்து இரைந்து பேசுவது என் காதில் விழுந்து கொண்டேதான் இருந்தது. என் எஜமானர் கத்தித் தீர்ந்ததும், மானேஜர் கண்ணன் ஆத்திரத்தோடு பேசும் பேச்சு என் காதில் பட்டது!' என்றான் கணக்கப்பிள்ளை.

"விஷயத்தை விட்டு எங்கோ சுற்றி வளைத்துப் பேசுகிறீரே எதைப்பற்றி அவர்களுக்குள் வாக்குவாதம் நடந்தது? அதைச் சொல்லும்!" என்று அதட்டினார் இன்ஸ்பெக்டர்!

பரம ரகஸ்யத்தை மூடிமறைத்துப் பேசுபவன் போல, இன்ஸ்பெக்டர் அருணகிரியின் காதுகளுக்குமட்டிலும் விழக்கூடிய அளவு தன் குரலைத் தாழ்த்திக் கொண்டு ஒரு குட்டிக்கதை சொல்லி முடித்தான் வாஞ்சி.

அருணகிரியின் முகம் தெளிவடைந்துவிட்டது போல பிரகாசமடைந்தது. தன் வேலையும் சுலபத்தில் முடிந்தது போல பெருமூச்சு விட்டுக் கொண்டார். "கிளியர் கேஸ்" என்று குதூகலத்தோடு சொல்லிக் கொண்டே, "ஆர்தர்! என்னென்ன தடையங்கள் இதுவரை உமக்கு அகப்பட்டிருக்கிறது?" என்று முடுக்காகக் கேட்டார் தன் சப்-இன்ஸ்பெக்டரிடம்.

ஒவ்வொரு பொருளையும், அறையின் அமைப்பையும், அவைகள் இருந்த நிலைகளையும் தமது நோட்டுப் புத்தகத்தில் குறித்துக் கொண்டிருந்த ஆர்தர், "எஸ், ஸார்!" என்று தலை நிமிர்ந்தார்.

"உனக்கு என்ன தோன்றுகிறது ஆர்தர்?" என்று கேட்டுவிட்டு, "தோன்றுகிறது என்னஇருக்கிறது? கிளியர் கேஸ்!" என்று தாமே பதிலையும் சொல்லிக் கொண்டார் அருணகிரி.

"அப்படித்தான் தோன்றுகிறது" என்று ஆர்தரின் வாய் முணு முணுத்ததே தவிர, அவரது கால்களும் கண்களும் அறையைச் சுற்றித் துருதுருத்துத் துழாவிக் கொண்டிருந்தன. அலங்காரமாக விளங்க வேண்டிய அந்த அறையில் கிடந்த சோபா, நாற்காலிகள் அலங்கோலமாகக் கிடப்பதைத் தன் கைக் காமிராவில் ஒரு போட்டோப் படம் பிடித்துக் கொண்டார்.

"கண்ணாடி போல் தெரிகிறது ஆர்தர். முதலில் கொலைப் பட்ட உடலைப் பிரேதப் பரிசோதனைக்கு அனுப்ப ஏற்பாடு செய். நான் ஸ்டேஷனுக்குப் போகிறேன்" என்ற உத்தரவிட்டு விட்டு, வலது கையில் பிடித்திருந்த பிரம்பால் இடது கையில் தட்டியபடி, "எனக்கு இது சர்வசகஜமான விஷயம்' என்பது போல வெளியேறினார் இன்ஸ்பெக்டர். அவரது கடமையில் கொலையும், கொள்ளையும் சலித்துப்போன விஷயமாக இருந்ததால் சாதாரண ஒரு மனுஷனுக்கு இருக்கக்கூடிய இளகிய மனசும் இரக்க சுபாவமும் அவரிடமிருந்து பறந்தோடி விட்டன!

வெளியே ஜனக்கூட்டத்தில் முன் வரிசையில் நின்றுகொண்டிருந்த பெரிய மனிதர்கள் என்று சொல்லிக் கொள்ளப்பட்ட சிலர், 'ஏதாவது கிரஹிக்கலாம்' என்ற ஆர்வத்தோடு வெளியே வந்து கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் அருணகிரியை நெருங்கினர். "கிளியர்கேஸ்! கொலையேதான்!" என்று ரத்னச் சுருக்கமாகச் சொல்லிவிட்டு, 'ஜீப்' காரில் ஏறிக்கொண்டார். "யாருக்குத்தான் இது தெரியாதாம்!" என்று சலித்துக்கொண்டார்கள் கேட்டவர்கள்.

பென்சில் அடிக்கட்டையால் தன் நெற்றியில் தட்டிக் கொண்டே நீண்ட யோசனையில் ஆழ்ந்துவிட்ட சப்-இன்ஸ்பெக்டர் ஆர்தரை ஏட்டய்யா கலைத்து, "இதோ பாருங்கள்!" என்று சுட்டிக் காட்டினுன் கதவை,

ஆர்தர் அதை ஆவலோடு பார்த்தார். அந்தக் கதவிற்கு அடிக்கப்பட்டிருந்த வர்ணம் காயாமல் இன்னும் ஈரமாகவே இருந்தது: அதில் யாரோ சாய்ந்திருக்கிறார்கள். அந்தத் தடம் அதில் பதிந்திருக்கிறது.புலன் விசாரணைக்குப்பேஷான தடையம்!

டைரியைப் பிரித்து மேலும் குறிப்பெழுதிக் கொண்டார் ஆர்தர்.

'கதவிற்கு மூன்றடி தூரத்தில் பிணம் மல்லாந்து கிடந்தது. குத்து மார்பில் விழுந்திருக்கிறது. "கதவில் அடிக்கப்பட்டிருக்கும் 'பெயிண்ட்' காயவில்லை. யாரோ சாய்ந்திருப்பதால் வர்ணம் கலைந்திருக்கிறது. அது யார்மீது ஒட்டியிருக்கிறது என்பதை ஆராயவேண்டும்.

எழுதிக்கொண்ட ஆர்தர், "ஓய் வாஞ்சிநாதன்! இப்படி வாரும்." என்று மில் கணக்கரை அழைத்தார். கால்கள் வெடவெடக்க அருகே வந்து நின்றுன் அவன்.

"சப்தம் கேட்டு நீங்கள் உள்ளே நுழைந்தபோது மானேஜர் கண்ணன் எங்கே நின்று கொண்டிருந்தார்?" என்றார் ஆர்தர்.

தரையில் கிடந்த பிரேதத்தின் காலடியைச் சுட்டிக் காண்பித்தான் வாஞ்சிநாதன்.

"உங்கள் முதலாளி ராமதுரையும் மானேஜர் கண்ணனும் இரைந்த குரலில் கத்திக்கொண்டிருந்தார்கள் என்று சொன்னீர்களே, பிறகு என்ன நடந்தது?"

"முதலாளி ஓய்ந்து விட்டார். மானேஜர் கண்ணன் மட்டிலும் ஆத்திரத்தோடு மேலும் கத்திக் கொண்டிருந்தது என் காதில் விழுந்தது!"

"அந்தப் பேச்சு என்ன என்றுதான் கேட்கிறேன்."

"சப்தம்தான் காதில் விழுந்ததே தவிர, வார்த்தைகள் சரிவரக் கேட்கவில்லை,"

"என்னய்யா வேடிக்கையாக இருக்கிறது, ஒரு வார்த்தை கூடவா உம் காதில் விழவில்லை? ஞாபகப்படுத்திப் பார்த்துச் சொல்லும் ஹூம்..." என்ருர் சப்-இன்ஸ்பெக்டர் ஆர்தர்.

சிறிது யோசித்தபிறகு, "கடைசியாகக் கண்ணன் ஆத்திரத் தோடு கூப்பாடு போட்டுப் பேசிய இரண்டொரு வார்த்தைகள் என் காதில் விழுந்தன. 'நீங்கள் சாகத்தான் போகிறீர்கள்' என்று மானேஜர் கண்ணன் கத்தினது பயங்கர மாகத் த்வனித்தது."

"அப்புறம்?" என்ருர் ஆர்தர்.

"கொஞ்சநேரம் எதுவும் சப்தத்தைக் காணோம். பிறகு மானேஜர் கண்ணன் கண்கள் சிவக்க வெளியே வந்தார். கார் நிறுத்தப்பட்டிருந்த ஷெட்டிற்குள் போனுர். அப்பொழுது அவர் முகம் குரூரமாய் இருந்தது, காரை வெளியே எடுத்துக்கொண்டு என் பக்கம் திரும்பி, "கார் ரயில்வே ஸ்டேஷனில் நிற்கும்; ஆளை னுப்பித் திரும்ப எடுத்து வரச்சொல்லும்." என்று கடுமை யாகச் சொல்லிவிட்டு 'விர்' என்று படுவேகமாய்க் காரை ஓட்டிக் கொண்டு போய்விட்டார்."

"இத்தனை நாழியாக இதைச் சொல்ல உமக்கு வாயில்லாமலா போய்விட்டது?" என்று கேட்ட ஆர்தர், கார் ஷெட்டை நோக்கி நடந்தார்.

கார் ஷெட்டில் நுழைவதற்கு முன் அதன் வாசலைக் கவனித் தார் டிரைவர் காரை கழுவி விட்டிருக்கிருன்; அந்தத் தண்ணீர் வெளியே வழிந்தோடி வந்து தரையை ஈரமாக்கியிருக்கிறது. அதில் கால் தடங்கள்—உள்நோக்கிப் போனவரின் சுவடு, கார் வெளியே புறப்பட்ட சக்கரத்தடங்கள்—அதையும் ஒரு புகைப் படம் எடுத்துக்கொண்டார்.

கார் ஷெட்டின் உள் சுவர்களைக் கவனித்தார். அதில் சில கீரல்கள். காரைப் பின்புறமாக ஷெட்டைவிட்டு எடுக்கும்போது கார் நிலை தவறிச் சுவற்றில் உராய்ந்திருக்க வேண்டும்—பதட்டம் காரணமாயிருக்கலாம்- இந்த யூகம் சரிதானு என்பதற்குக் காரைப் பார்த்தால் தெரிந்துவிடும்.

ஆர்தர் ஏறிட்டுக் கணக்குப்பிள்ளை வாஞ்சிநாதனைப் பார்த் தார். அவனைப் பிடித்துக்கொண்ட பயம் இன்னும் நீங்காம லேயே இருப்பதைக் கண்ட ஆர்தருக்குச் சந்தேக வியப்பு. இவன் ஏன் இப்படிப் பதற வேண்டும்?

"என்னய்யா?" என்று ஆர்தர் அதட்டிய அதட்டலில் வாஞ்சி நாதனுக்குத் தலைசுற்ற ஆரம்பித்துவிட்டது. "நீ எத்தனை மணிக்கு வந்தாய்?" என்று கேட்டார்.

"காலை எட்டரை மணி இருக்கும்!" பயந்துபோய் பதிலளித் தான்,

"அதிகாலையில் உனக்கு உன் முதலாளியிடம் என்ன வேலை?"

"வரச்சொல்லியிருந்தார்."

"எதற்கு? கொலை செய்வதற்கா!" என்று ஆர்தர் கேட்டுக் கொண்டிருக்கும்போதே, உள்ளிருந்து அவரைநோக்கி வந்த 'ஏட் டய்யா'வீட்டில் சோதனை போட்டதில் மேலும் தன் கைக்கு அகப் பட்டதாக இரண்டு கடிதங்களைக் கொண்டுவந்து ஆர்தரிடம் கொடுத்தான்.

அதைப்பிரித்துப் படித்துப் பார்த்தார் சப்-இன்ஸ்பெக்டர். ஒன்று காதல் கடிதம். மற்றொன்று களவாடல் கடிதம்.

முன்னது கொலையுண்ட மில் முதலாளியான ராமதுரையின் மனைவி ராதைக்கு' அதே மில்லில் மானேஜராக வேலைக்கிருந்த கண்ணன் எழுதிய காதல் கடிதம், பின்னது, மில் கணக்குப்படி ரொக்க இருப்பில் ரூபாய் பத்தாயிரம் குறைவதாகவும், கணக்கப் பிள்ளை வாஞ்சிநாதனே அதற்குப்பொறுப்பாளிஎன்றும் முதலாளி யான ராமதுரைக்கு, மானேஜர் என்ற ஹோதாவில் கண்ணன் முந்திய தினம் அனுப்பியுள்ள அந்தரங்கக்குறிப்பு.

மானேஜர் கண்ணன் முதலாளி ராமதுரையின் மனைவிக்கு எழுதியுள்ள காதல் கடிதத்தை மடித்துத் தன் பைக்குள் வைத் துக்கொண்டு, கணக்கன் வாஞ்சி பற்றிய குறிப்பை விரித்துக் கையில் பிடித்தபடி, அவனைக் கர்ண கடூரமாகப் பார்த்துக் கொண்டு கிட்ட நெருங்கின ஆர்தர், அவன் முகத்தைச் சேர்த்துப் 'பளார்' என்று ஒரு அறை கொடுத்தார். 'ஐயோ' என்று அலறி பின்னால் போய் விழுந்தவனை, சட்டையைப் பிடித்துத் தூக்கி நிறுத்தினார். இது என்ன? நீயே பார்!" என்று அந்தக் கடிதக் குறிப்பை அவன் முகத்துக்கு முன்னால் நீட்டினார்.

"ஐயோ! நான் எதுவுமே அறியேன்!" என்று கத்தி அழுதான் கணக்கப்பிள்ளை வாஞ்சி.

"ஸ்டேஷனுக்குக் கொண்டுபோ இவனை!" என்று ஆர்தர் போட்ட சப்தம் அந்த பங்களாவையே கிடுகிடுக்க வைத்தது.

இளமை ததும்பி, கருணை வழியும் ஆர்தரின் கண்களில் இத்தனை நாள் காணாத கோபக் கலக்கத்தை இன்றுதான் ஏட்டய்யா கண்டான். அந்த இரு கடிதங்களில் எது ஆர்தருக்கு இவ்வளவு ரௌத்ரத்தைக் கொடுத்திருக்க வேண்டும் என்று அறிய ஆர்வம் கொண்டான். ஆனால் அதுவரை ஆர்தர் அங்கே காத்திருக்கவில்லை!

கண் இமைக்கும் நேரத்தில் கனவேகத்தில் மோட்டார் சைக்கிளுடன் மறைந்து ரயில்வே ஸ்டேஷன் வந்தடைந்தார் அவர்,

## கார் இருந்தது; கயவனைக் காணோம்!

அங்கே ஸ்டேஷன் வாசலில் கொலையுண்ட ராமதுரையின் கார் நின்றுகொண்டிருந்தது. அதைச் சுற்றி வந்து பார்த்தார் ஆர்தர். நன்றாகச் சுவற்றில் கார் உராய்ந்திருந்ததால் 'மட்கார்டி'ல் பெயிண்ட் போயிருந்தது. ரயில்வே மணிக் கூண்டையும் சேர்த்துப் போட்டோவில் விழக்கூடிய தினுசில் ஒரு புகைப்படம் எடுத்துக்கொண்டார்.

மணிக்கூண்டுக் கடிகாரம் மணி பதினொன்று என்பதைக் காட்டியது. ராமதுரையின் கார் அந்தநேரம் வரையில் ஸ்டேஷன் வாசலில் இருந்தது என்பதற்கு அந்தச் சாக்ஷியம் போதும்.

போலீஸ் ஸ்டேஷனுக்கு டெலிபோன் செய்தார் ஆர்தர்.

''இன்ஸ்பெக்டர் பேசுகிறேன்'' என்ற அருணகிரியின் கம்பீர மான குரல் அறைவதுபோல ஆர்தரின் காதுகளில் விழுந்தது.

''சந்தேகப்பேர்வழி ரயில் ஏறிவிட்டான் ஸார்!'' என்றார் ஆர்தர்.

''தெரியும் ஆர்தர், அவனை எதிர்கொண்டு அழைக்க ஜோலார்பேட்டைக்குத் தந்தி பறந்துவிட்டது. அநேகமாக அங்கேயே ரயிலில் பிடிபட்டுவிடலாம்'' என்ற அருணகிரியின் பதிலைக் கேட்டபோது, ஆர்தர் அசந்துபோய்விட்டார். 'தான் ஒரு அடி பாய்வதற்குள் ஒன்பது அடி பாய்ந்து இன்ஸ்பெக்டர் அருணகிரி எந்தக் கேஸிலும் சாமர்த்தியத்தை சாதுர்யமாகத் தட்டிக்கொண்டு போய்விடுகிறாரே!'' என்ற ஆச்சரியத்துடன் டெலிபோனைக்கீழே வைத்துவிட்டு போலீஸ் ஸ்டேஷனைநோக்கிக் கிளம்பினார்.

ஸ்டேஷன் வாசலிலே காலடி வைத்தபோது இன்ஸ்பெக்டர் அருணகிரி இடியும்புயலுமாய் மாறிக்கணக்கன்வாஞ்சிநாதனிடம் உண்மையைக் கிரகிக்கப் பாடுபட்டுக் கொண்டிருந்தார். சித்திர வதைப்பட்டுக் கொண்டுகூட கடைசிவரை குற்றம் யாவையும் மானேஜர் கண்ணன்மீதே சுமத்திக் கொண்டிருந்தான் அவன்.

கொலையுண்ட ராமதுரைக்கு மானேஜர் கண்ணன் எழுதியதாகச் சொல்லப்படுகிற குறிப்பை இன்ஸ்பெக்டர் அருணகிரியிடம் கொடுத்தார் ஆர்தர். தான் கொடுத்த இரண்டு கடிதங்களில் ஏன் ஒன்றை மறைத்து மற்றொன்றை மட்டும் இன்ஸ்பெக்டர் அருணகிரியிடம் ஆர்தர் கொடுத்தார் என்று மனதிற்குள் எண்ணிக்கொண்டான் 'ஏட்டய்யா.'

COMICS PDF TIMES

"ஆர்தர்!" என்றார் அருணகிரி. கடிதத்தைப் படித்தபின் கணக்கப்பிள்ளை வாஞ்சிநாதன்மீது மேலும் கனல் கக்குவார் என்று எதிர்பார்த்த ஆர்தருக்கு, அருணகிரி நடந்துகொண்ட விதம் ஆச்சரியமாயிருந்தது. விசாரணைக் கடுமையில் தன் உடல் வெந்து வெளித் தள்ளிய வியர்வைத் துளிகளைக் கைக்குட்டையால் துடைத்துவிட்டுக் கொண்டிருந்தார். ஆர்தரின் பார்வை மற்றொரு மூலைக்குத் திரும்பியது. அங்கே மணிப் பிரம்பொன்று நான்கைந்து துண்டுகளாக ஒடிந்து வேலை தீர்ந்து கிடந்தது.

"இது கிளியர் கேஸ் ஆர்தர்! அதிக அலைச்சலுக்கும் சிரமத்திற்கும் இதில் நமக்கு இடமில்லை. கொலை செய்தவன் மானேஜர் கண்ணனே தான். உடந்தையாக இருந்தவன் கணக்கப்பிள்ளை வாஞ்சிநாதன். இதைச் சட்ட ரீதியில் ருசுப்பிக்க சாக்ஷிய ஜோடனைதான் இனிப்பாக்கி!" என்றார் தீர்மானமான முடிவிற்கு வந்துவிட்டவர்போல.

"முடிவு செய்து விட்டீர்களா?" என்று கேட்ட ஆர்தர், "சாக்ஷியத்தின் ஊர்ஜிதத்தைக் கொண்டல்லவா குற்றவாளியைத் தேர்ந்தெடுக்க வேண்டும்" என்றார்—'நீங்கள் அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வந்துவிடுகிறீர்கள்' என்று குத்திக் காட்டுவதுபோல.

ஒரு பார்வை பார்த்தார் இன்ஸ்பெக்டர். "அது எனக்குத் தெரியும் ஆர்தர். நியாயத்தைத் தர்மம் கேட்கும், தர்மத்தை நியாயம் குடையும். சட்டம் சாக்ஷியத்தைத் தேடும். இதுவரை இவைகள்கூட என் தீர்மானத்தை மறுத்ததில்லை. ஏதோ எல்லாம் தெரிந்தவன்போல என்னையே நீ மடக்குகிறாய். இந்தத் தினுசு வழக்குகளுக்கு நீ சிறுபிள்ளை ஆர்தர்!" என்றார் அருணகிரி கம்பீரமான குரலில் தான் இட்டதே சட்டம் என்பது போல.

சப்-இன்ஸ்பெக்டர் ஆர்தரிடம் இன்ஸ்பெக்டர் அருணகிரி இப்படிக் கடுமையாகப் பேசியது இதுதான் முதல் தடவை. ஆர்தரின் திறமையிலும் நேர்மையிலும் அபார நம்பிக்கை கொண்ட அருணகிரி இதற்கு முன்னால் பலரிடம், 'அந்த ஆர்தர் இல்லாவிட்டால் இந்த அருணகிரிக்கும் புகழில்லை' என்று பெருமையோடு பேசி வந்ததையும் நினைவுபடுத்திக் கொண்டார். எல்லாவற்றிற்கும் மேலாக இப்போது 'சிறுபிள்ளை' என்று சொல்லியது முன்பு நடந்த ஒரு சம்பவத்தை ஆர்தருக்கு நினைவுபடுத்தியது.

இரண்டு வருஷங்களுக்கு முன் வெளியூர் ஒன்றில் ஆர்தர் சப்-இன்ஸ்பெக்டராக இருந்தார். வழக்கம்போல ஜில்லா உதவி சூப்பரின்டெண்டண்டு அங்கு 'காம்ப்' போட்டிருந்தார். மேல் அதிகாரி 'காம்ப்' வந்து விட்டால், அவரைக் காக்காய் பிடிக்கும் நோக்கத்தில் கீழுள்ளவர்கள் சாமானும் செட்டுமாய் அவரது காலடியில் கொண்டு வந்து கொட்டுவார்கள். சிலருக்குக் கேட்காமலேயே கிடைக்கும். ஒரு கிலர் விடாக்கண்டர் போல வாய்

விட்டே கேட்டு வாங்கிக்கொள்வார்கள். அந்த வகையில் இரண்டாவது ரகத்தைச் சேர்ந்தவராக இருந்தார் அந்த அதிகாரி.

ஆர்தர், போலீஸ் பள்ளிக்கூடத்திலிருந்து தேறி நேராக சப்-இன்ஸ்பெக்டராகி அந்த ஸ்டேஷனுக்குக் கடமையாற்ற வந்திருந்தார். அவர் பணக்காரக் குடும்பத்தில் பிறக்கா விட்டாலும் சிறந்த மனோபாவம் கொண்ட வம்சத்தில் பிறந்தவர். தன் கீழ் உள்ள போலீஸ்காரர்கள், வந்த அதிகாரியின் மனைவி குதிரைக் கொம்பு கேட்டால் கூட 'இதோ' என்று கொண்டு வந்து கொட்டுவது அவருக்குக் கட்டோடு பிடிக்க வில்லை. கொடுப்பவர்கள் அதை அன்புக் காணிக்கையாகத் தன் செலவில் அந்த அதிகாரியின் பெயரைச் சொல்லி ஊர் ஜனங்களிடமிருந்து தண்டிக் கொண்டு வரும் பொருள்களல்லவா அவை என்று நினைக்கும் போது. சப்-இன்ஸ்பெக்டர் ஆர்தர் மிகவும் சங்கடப்பட்டுக் கொள்வார்.

இந்த மனப்போக்குக் கொண்ட அவர், தன் மனதில் பட்டதை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளாமல் இருந்து விட்டார்! தன்வரையிலும் ஒழுங்காக இருக்கலாம் என்று நினைத்து. ஆனால் சோதனை யாரைத்தான் விட்டு வைக்கிறது?

ஒரு குடியானவன் தூக்க முடியாத ஒரு சுமையை ஸ்டேஷன் வாசலில் வந்து இறக்கி வைத்து விட்டு, ஏட்டய்யாவைத் தேடிக் கொண்டிருந்தான். எதேச்சையாகத் தன் அறையை விட்டு வெளியே வந்த ஆர்தர், "என்ன அது?" என்று விசாரித்தார். வந்திருக்கும் பெரிய அதிகாரிக்காக ஏட்டய்யா சொல்லியிருந்தார் என்று கூறிஒதுங்கி நின்றான் வந்தவன்.

கூடையைத் திறந்து பார்த்தார் ஆர்தர். இருபது தேங்காய்; இருநூறு வாழைப்பழங்கள்! கொண்டுவந்தவனை ஏறெடுத்து உச்சி முதல் உள்ளங்கால்வரை பார்த்தார். அவனை உடலும் உடையும் அவனை ஒரு தரித்திர புருஷனாகக் காட்டியது. அவர் அவனைக் கோபிக்க வில்லை: அதட்டவில்லை, அவைகளை உடனடியாகத் திரும்ப எடுத்துச் செல்லும்படி உத்தரவிட்டு உள்ளே போய் உட்கார்ந்து கொண்டார்.

பிறகு அங்கு வந்த 'ஏட்டய்யா'வுக்கு ஸ்டேஷனில்நடந்ததை மற்ற ஜவான்கள் சொன்னபோது திகிலாகி விட்டது. சப்- இன்ஸ்பெக்டர் என்னமாகக் கோபிக்கப் போகிறாரோ என்று பயந்து கொண்டிருந்தான். கடைசி வரைஆர்தர் அவனிடம் ஒன்றுமே கேட்டுக் கொள்ளவில்லை.

அன்று மாலை அந்த உயர்தர அதிகாரி ஸ்டேஷனுக்குவந்தார். 'காம்ப்' முடிந்து திரும்பவேண்டிய சமயம். சுபாவமாகப் பேசிக் கொண்டவர் போல 'ஏட்டய்யா'வை அழைத்தார். "அம்மா ஏதோ கேட்டார்களாமே, மறந்து விட்டாயா மேன்?" என்றார் அதிகாரத் தோடு.

COMICSPDF TIMES

கேட்பது பிச்சை! அதைப் பணிவோடு, முறையோடு கேட்டிருந்தாலும் பரவாயில்லை; அதிகாரம் வேறேயா?

சப்-இன்ஸ்பெக்டர் ஆர்தர் எண்ணக்கடலில் மூழ்கி மூக்குளித்துத் திணறிக் குமுறிக் கொண்டிருந்தார். நடந்ததைச் சொல்லமாட்டாமல் தவித்துக் கொண்டிருந்தான். ஏட்,

"பொறுப்பில்லாதவன்!" என்று கடிந்து கொண்டு அவனை முறைத்துப் பார்த்தார் அதிகாரி.

"ஸார்!" என்றார் ஆர்தர்.

அதிகாரி ஏறிட்டு ஆர்தரைப் பார்த்தார்.

அவரது கவனத்தைத் தன் பக்கம் திருப்பிக்கொண்ட ஆர்தர், "நீங்கள் கேட்டது கிடைக்கவில்லை என்று முன்பே என்னிடம் 'ஏட், சொல்லிக் கொண்டிருந்தான்" என்றார்.

"நான்ஸென்ஸ்!". என்று முகத்தைச் சுளித்துக் கொண்டு வேறு புறம் திரும்பினார் அந்த அதிகாரி.

சொல் பொறுக்காதவரல்லவா? வெகுண்டு முன் வந்தார் ஆர்தர். அவர் சொல்லிய அந்த வார்த்தை—நான் சென்ஸ்—யாருக்கு?

'ஸார்!' என்றார் சப்-இன்ஸ்பெக்டர் ஆர்தர். குரலில் கடுமை கண்ட அதிகாரி திடுக்கிட்டுத் திரும்பினார்.

"சட்டத்தையும் அமைதியையும் காப்பது பொது மக்களிடையே மட்டுமல்ல: நமக்குள்ளேயும் தான். கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்கூட அவைகளைச் சீராக வைத்துக் கொள்வதற்கே ஒழிய சீரழிப்பதற்கில்லை. இந்தப் போலீஸ் இலாகாவில் கடுமையையும் திறமையையும் சரியான வழியில் கொண்டு செலுத்தும் சிறிய ஊழியன் கூட யாருக்கும் தலைகுனிய வேண்டியதில்லை. அந்த வகையில்தான் என் கீழுள்ளவர்களைப் பழக்கி வருகிறேன், மன்னிக்க வேண்டும்" என்றார் ஆர்தர்.

ஆர்தர் முரண்டுவிட்டதைக்கண்ட அதிகாரி சாந்தமடைந்தார். உள்ளூர அல்ல, வெளிப் பாவனைக்கு அவர் இப்போது சிரித்த சிரிப்பு ஏனைய போலீஸ் ஜவான்களின் மனத்தில் குழப்ப அலைகளை எழுப்பி விட்டுவிட்டது.

"ஆர்தர், நீ இப்பொழுதுதான் இந்த உத்தியோகத்துக்கு வந்திருக்கிறாய், சிறு பிள்ளை நீ!" என்று மேலும் சிரித்தார் அந்த அதிகாரி. தன் கோபத்தை அடக்கிக்கொள்ள சப்-இன்ஸ்பெக்டர் ஆர்தர் வெளிப்பக்கம் போய் நின்று கொண்டார்.

உள்ளே, ஸ்டேஷன் டைரியில் 'காம்ப்' ரிப்போர்ட் எழுதிக் கொண்டிருந்தார் அந்த அதிகாரி. பிறகு கடுமையான முகத்தோடு

வெளியே வந்து காரில் ஏறிக்கொண்டார். ஆனால் மரியாதையை விட்டுக் கொடுக்கவில்லை ஆர்தர். நிமிர்ந்து நின்று அவருக்கு 'சல்யூட்' அடித்து வழியனுப்பினார்.

உள்ளே, டைரியில், "மரியாதையும், ஒழுங்கும், பணிவும் இல்லாத முரட்டு சுபாவம் கொண்டவராக ஆர்தர் இருக்கிறார்" என்று 'ரிமார்க்' இருந்தது. அதன் நகல் ஒன்றும் ஜில்லாத் தலைமை அதிகாரிக்கு அனுப்பப்பட்டிருக்கும் என்பதை ஆர்தர் அறியாமல் இல்லை.

அந்த அதிகாரி திரும்பிச் சென்ற ஒரு வாரத்திற்கெல்லாம் ஜில்லா சூப்ரண்டெண்ட் முன்னறிவுப்புக்கூட இல்லாமல் அங்கு 'காம்ப்' வந்தார். அது அந்த ஸ்டேஷனிலிருந்த யாவருக்குமே ஒரு திகிலைத் தந்தது. ஏதாவது விசாரணை நடக்கும் என்று கூட சப்-இன்ஸ்பெக்டர் ஆர்தர் எதிர்பார்த்தார். மாறாக யாவுமே சுமுகமாய் நடை பெற்றது. ஆனால் அதே சமயம் அந்த அதிகாரியின் தீக்ஷண்யமான கண்கள் ஆர்தரையும், போலீஸ் ஸ்டேஷனையும். அவர்கள் கடைப் பிடிக்கும் நடைமுறைகளையும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டேதான் இருந்தன.

அவரது, காம்ப் கிளார்க், ஊராரிடையேயும், போலீஸ்காரர்களிடையேயும் பேச்சோடு பேச்சாக ஆர்தரைப்பற்றிய அபிப்பிராயங்களை அந்தரங்கமாகச் சேர்த்துக் கொண்டுதான் இருந்தார்.

'காம்ப்' முடிந்தது. அன்று 'துரை' ஊர் திரும்புவதாக அறிவிக்கப்பட்டது; அந்த அதிகாரி ஒரு வெள்ளைக்காரர். வழியனுப்ப வந்த சப்-இன்ஸ்பெக்டர் ஆர்தர், அன்பிலே மலர்ந்து அழகாகச் சேர்க்கப்பட்ட பூச்செண்டு ஒன்றை அதிகாரியின் கையில் கொடுத்து 'சல்யூட்' அடித்து நின்றார். அதிகாரியின் முகம் திருப்தியோடு விளங்கிக் கொண்டிருந்தது.

அவர் போன பிறகு ஸ்டேஷன் டைரியைப் பிரித்துப் பார்த்தார் ஆர்தர். முன்பு வந்துபோன அதிகாரியின் ரிப்போர்ட்டின் கீழே அந்தப் பெரிய அதிகாரியால் சில வார்த்தைகள் எழுதப்பட்டிருந்தன.

"டெபுடியின் குறிப்பு குரோதத்தை அஸ்திவாரமாகக் கொண்டதாகவே கருத வேண்டியிருக்கிறது. சப்-இன்ஸ்பெக்டர் ஆர்தரின் ஸ்டேஷனும், கடமையில் அவர் காட்டும் பொறுப்பும், ஜவான்களின் ஒழுங்கும், ஏனைய போலீஸ் ஸ்டேஷனுக்கு உயர்வான ஒரு எடுத்துக் காட்டாக இருக்கிறது!"

நேர்மை தலை நிமிர்ந்து நிற்கத்தான் செய்யும் என்று பூரித்தார். ஆர்தர். அந்த நேர்மையின் எதிரொலியால் அந்த 'டெபுடி' வேறு பிராந்தியத்திற்கு மாற்றப்பட்டார்,

இந்தப் பழைய நாளைய சம்பவத்தை நினைத்துப் பார்த்துக் கொண்ட சப்-இன்ஸ்பெக்டர் ஆர்தருக்கு தன்னம்பிக்கை தலை

தூக்கியது. "ஸார்!" என்றார் துடிக்குடன். இன்ஸ்பெக்டர் அருணகிரி திடுக்கிட்டு நிமிர்ந்தார்.

"நானும் ஒரு அதிகாரி, சட்டத்தின் மீதும் அமைதியின் மீதும் உங்களுக்கு உள்ள கடமை உணர்ச்சி எனக்கும் உண்டு. குற்றவாளியைக் குறிவைத்து சாக்ஷியங்களைத் தொடுக்க என்னால் முடியாது. சாக்ஷியத்தை வைத்து, அதோடு மனித மனங்களையும் ஆராய்ந்து, அது காட்டிக் கொடுக்கும் முடிவுதான் என் புத்திக்குக் குற்றமாகும். நியாயம் வழங்குவதற்கு முன் நிதானத்தைக் கைக்கொள்ளுவதுதான் நான் அறிந்த தர்மம்" என்று வேகத்தோடு பேசிய ஆர்தர், இன்ஸ்பெக்டர் அருணகிரியையே பார்த்துக் கொண்டு நின்றார்.

கனிவு ததும்பப் பார்த்தார் அருணகிரி. "உன்னை நான் அறியாதவனில்லை ஆர்தர்" என்று அவர் கூறியபோது, வயது முற்றிய அவரது கண்கள் கடுமையை மறைத்துக் கருணையைக் கொட்டியது. அதுவரை விழுங்கி விடுவதுபோல அவரையே பார்த்துக் கொண்டிருந்த ஆர்தர், அதில் வசியப்பட்டுத் தலை குனிந்து கொண்டார்.

அருணகிரி மேலும் தொடர்ந்தார்: "அனுபவத்தைக் கொண்டு சொல்கிறேன் ஆர்தர். குற்றம் செய்தவன்தான் குற்றவாளி எனச் சொல்லலாம்; அவன் மனச்சாக்ஷியும் அதை ஒப்புக் கொள்ளும்; சம்பந்தப்பட்டவர்களும் அனுசரணையாகச் சொல்வார்கள்; நானும் நீயும் கூடச் 'சத்தியம் செய்து சொல்லுவோம். சட்டம் இதையெல்லாம் ஏற்காது. சாக்ஷியத்தைத்தான் அது கேட்கும். அது காட்டுகிற வழியைத்தான் நியாயம் பின்பற்றும். இந்தக் கொலைச் சம்பவத்தையே நமக்குள் ஆராய்ந்து பார்ப்போம். கொலை செய்யப்பட்ட ராமதுரையின் மனைவிக்கும் மானேஜர் கண்ணனுக்கும் மணமாவதற்கு முன்னமேயே தொடர்பு இருந்திருக்கிறது. சந்தர்ப்பம் சமைத்திய பாவத்தாலோ என்னவோ, அவள் ராமதுரைக்கு வாழ்க்கைப் பட்டுவிட்டாள். காதல் இனிப்பு கணப்பொழுதில் கசந்து விடாதாகையால் மணமான பின்பும் அந்தத் தொடர்பு இருந்திருக்கிறது. அந்த ஒரு விட்டகுறை தொட்ட குறையால்தான், ராதை தன் கணவர் ராமதுரையிடம் சிபாரிசுசெய்து கண்ணனுக்கு மில்லில் ஒரு வேலையும் வாங்கிக் கொடுத்திருக்கிறாள். 'முன்பு ஆதிநாளில் இவர்கள் இருவரிடையே இருந்த தொடர்பு ராமதுரைக்குத் தெரியாவிட்டாலும் யாரோ சூசகமாகச் சொல்லியிருக்க வேண்டும். மனிதன் எதையும் பறி கொடுத்து விடுவான் ஆர்தர்; மனைவியின் மனம் மாற்றானிடம் மருகிவிட்டால் நிலைகொள்ளாமல் நினைத்து உருகும் அந்த நெஞ்சு. சித்திரவதையையும் விடக் கொடுமை தரும் அந்த நினைப்புத் தவிப்பு. அப்படிப்பட்டதொரு வேகத்தில் ராமதுரை உண்மையை அறிந்து கொள்ள மானேஜர் கண்ணனிடம் கேட்டிருக்கிறார். இளமைத் துடிப்பு மாறாத கண்ணன் ரகசியம் அம்பல

மாகி விட்டதே என்று பயந்து அதனால் வெகுண்டு ராமதுரையைக் குத்திவிட்டான்.

“கொலைக்குப் பின், பிடிபடுவதற்கு முன்னால், கடைசி ஆசையில் ஆவலோடு அள்ளி வாரியணைத்துக் கொள்ள ராதையை தேடி பெங்களூர் ஓடியிருக்கிறான் அவன். அதற்கேற்றபடி அவளும் தற்போது அங்குதான் இருக்கிறாள். இது நம்பத்தகாத கற்பனையா ஆர்தர்? காதல் காட்டும் நெறி தவறிய வழி சாவில்தானே முடிகிறது! எத்தனையோ சம்பவங்களை நாம் பார்த்ததில்லையா?” என்று இன்ஸ்பெக்டர் அருணகிரி சொல்லி முடிந்தபோது, ஆர்தரின் கைகள் அவரையும் அறியாமல் சட்டைப் பைக்குள்ளே துழாவி, முன்பு ஏட்டய்யா தந்த—அந்த மறைத்து வைத்துக் கொண்ட—காதல் கடிதத்தைத் தொட்டுப் பார்த்துக் கொண்டிருந்தது.

அருணகிரி அதோடு நிறுத்தவில்லை. “யூகத்தை ஒரு புறம் ஒதுக்கி நமக்குக் கிடைத்துள்ள சாக்ஷியங்களை அனுசரித்துப் பார். காலையில் ராமதுரையும் மானேஜர் கண்ணனும் கோபதாபங்களில் கனல் கக்கிக் கொண்டதாகக் கணக்கப்பிள்ளை கூறுகிறான். அறையிலே சாமான்கள் அலங்கோலமாய் இருப்பதைப் பார்த்தாய, ஷெட்டில் கார் உராய்ந்து சென்றிருக்கிறது. ஈரமண்ணில் அடிச் சுவடுகள் பதிந்து கிடந்தன. வர்ணமடிக்கப்பட்ட கதவில் வர்ணம் கலைந்திருக்கிறது. கொலை செய்ய உபயோகப்படுத்தப்பட்ட கத்தியில் குத்தியவனின் கைரேகை படிந்திருக்கிறது. இதையெல்லாம் வைத்துக் கொண்டு மானேஜர் கண்ணன் பிடிபட்டு வந்ததும் ஒத்துப் பார். யூகம் சொல்லும் கதையும், சாக்ஷியம் பின்னித் தரும் கற்பனையும் குற்றவாளியைப் பரிபூரணமாகக் காட்டிக் கொடுக்கிறதா இல்லையா என்று பார்.

அப்பொழுதும் சமாதானப்படாத ஆர்தர், “மானேஜர் கண்ணனுக்கும் கொலையுண்ட ராமதுரையின் மனைவிக்கும் கள்ள நட்பு உண்டு என்பதற்குப் பிறர் சொல்லுகிற கதையை ஆதாரமாகக் கொண்டுவிட முடியுமா?” என்றார்.

“காதோடு காது வைத்ததுபோல் நடக்கக்கூடிய ஒரு காரியத்தைக் கண்கொண்டு பார்த்துவிட முடியாது, ஆனால் அதன் எதிரொலி, அந்த ரகசியத்தைப் பகிரங்கப் படுத்திவிடும். இதைப் பார். மானேஜர் கண்ணன் வீட்டைச் சோதனை போட்டபோது கிடைத்த கடிதம்” என்று கூறி ஆர்தரிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்துவிட்டு பின்னுக்குச் சாய்ந்தார் அருணகிரி. ஆர்தர் வாசித்துப் பார்த்தார். கண்ணனுக்கு எழுதியிருந்த அந்தக் கடிதத்தில் தன் ஆசைத் துடிப்புகளை அள்ளிக் கொட்டியிருந்தாள் ராதை.

படித்து முடித்துக் கடிதத்தை அருணகிரியிடம் கொடுக்கும்போது ஆர்தரின் பற்கள் ஒன்றையொன்று நெறித்துக்கொண்டன. ‘அப்பாடா...நாம் தப்பித்தோம்!’ என்பதுபோலப் பெரு

COMICS PDF TIMES

மூச்சுவிட்டான் கணக்கன் வாஞ்சிநாதன். அவன் பக்கம் திரும்பிய ஆர்தர், "இவன் கையாடிய பத்தாயிரம் ரூபாய்?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டரிடம்.

"அதுவும் தெரிந்து விடுகிறது!" என்று இன்ஸ்பெக்டர் சொல்லிக்கொண்டிருக்கும்போதே, டெலிபோன் அலறியது. மானேஜர் கண்ணன் ஈரோட்டில் கைது செய்யப்பட்டு விட்டதையும், அவனிடம் ஏறத்தாழ ரூபாய் பத்தாயிரம் இருந்ததென்றும், மறு ரயிலிலேயே போதிய பந்தோபஸ்துடன் அனுப்பி வைப்பதாகவும் தகவல் வந்தது.

"பார்த்தாயா ஆர்தர்! இது க்ளியர் கேஸ்" என்று சொல்லி மேலும் ஏதோ பேச வாய் திறந்தார். விரிந்த உதடுகள் அப்படியே திறந்தது திறந்தபடி நின்றுவிட்டது. அவர் பார்வையும் வாசல் பக்கமே நிலைகுத்தி நிலைத்தது.

இன்ஸ்பெக்டர் திகைப்பைக் கண்ட ஆர்தரும் வாசல் பக்க திரும்பிப் பார்த்தார்.

'என்னதான் அதிசயம்?' என்று ஒதுங்கி நின்றுகொண்டிருந்த 'ஏட்' தலை நீட்டி வெளி வாசல் பக்கம் பார்த்தான்.

## அத்தியாயம்: 3

---

## திகைக்க வைத்த எழிலரசி!

யாவரையும் திகைப்படையச் செய்த அந்த உருவம் எது? ராமதுரையின் ஆவியா? அல்லது அவனைக் கொலை செய்த கிராதகன்தான் சரணடைய வந்துவிட்டானா? ராமதுரையின் ஆவியாக இருந்துவிட்டால் சிக்கல்கள் எளிதாகத் தீர்ந்துவிடும். தன்னைக் கொலை செய்தது யார், எப்படி, எதற்காக என்ற விபரங்களைத் தீர்க்கமாகச் சொல்லியிருக்கும்; அல்லது கொலை செய்தவனே வந்திருந்தால்கூட இன்ஸ்பெக்டர் அருணகிரிக்கோ, ஆர்தருக்கோ வேறு யாருக்குமோ சிரமம் இருந்திருக்காது.

எழிலரசி போல வந்து கொண்டிருந்தாள் ஒருத்தி. மாந்தளிர் போன்று இளஞ்சிகப்புடன் விளங்கவேண்டிய அவளது முகம் வெளுத்து வெளிறிப் போயிருந்தது. அவளது முகத்திலே துக்கத்தின் சாயை இல்லை. வேதனையின் விகாரமில்லை. வாழ்க்கைப் பந்தங்களை அறுத்தெறிந்து மனோ விகாரங்களை மடியச் செய்து மோனநிலையை எய்திவிட்ட சாந்தினி போலத் தோன்றினாள்.

"யாரம்மா நீ?" என்றார் இன்ஸ்பெக்டர்.

"தெரிந்திருக்கும் என்று நினைத்தேன். நான்தான் ராதை!" என்றாள் வந்தவள், குனிந்த தலை நிமிராமல்.

இன்ஸ்பெக்டர் அருணகிரியின் முகம் 'ஜிவ்'வென்று சிவந்தது. கண்கள் ரத்தப் பூச்சடைந்தது, சுட்டு எரித்து விடுவது போலச் சுடர் விட்டுக் கனல் கக்கியது. அவளைப் பார்க்கக்கூட வெறுப்பவர்போல வேறுபுறம் திரும்பிக் கொண்டார் அவர்.

"கணவனைப் பறிகொடுத்த இந்து ஸ்திரீ போலவா இவள் இருக்கிறாள்? வஞ்சனையில் வார்த்தெடுத்த சதைப் பிண்டத்திலே காமம் மெருகு கொடுத்திருக்கும் ராக்ஷஸ அழகியாக அல்லவா இருக்கிறாள்!" என்று மனதிலே நினைத்துப் பார்த்த ஆர்தர், "உங்கள் கணவர் ராமதுரைக்கு நேர்ந்த கதி உங்களுக்குத் தெரியுமல்லவா?" என்றார்

மௌனமாகத் தலை அசைத்தாள் ராதை.

"நேராக பெங்களூரிலிருந்துதான் வருகிறீர்களாக்கும்?" என்றார் இன்ஸ்பெக்டர் அருணகிரி, குறுக்கே பாய்ந்து

"ஆமாம்!" என்பதுபோல அவள் தலையை அசைத்துக் காட்டினாள்.

மௌனமாக அவள் பதில் கொடுத்ததைக்கண்ட அருணகிரிக்கு ஆத்திரம் மூண்டது. "வாய் திறந்துதான் பதில் சொல்லுங்களேன்! மெயில் ரயில் அதிகாலையிலேயே இங்கு வந்து விடுகிறதல்லவா? அதில்தானே நீங்கள் வந்திருக்க வேண்டும்?"

"ஆமாம்!" என்றாள் ஹீனக்குரலில்.

"இப்பொழுது மணி என்ன தெரியுமா? ஒரு மணி ஆகப் போகிறது. இவ்வளவு நேரம் நீங்கள் எங்கு இருந்தீர்கள்?"

பதில் சொல்லமாட்டாதவள்போல, குனிந்த தலை குனிந்த படி நின்றுகொண்டிருந்தவள், அவர் கேட்ட அந்தக் கேள்வியின் விபரீதத்தைக்கண்டு தலை சுழன்று தள்ளாடி மயக்கமுற்றவள் போல இன்ஸ்பெக்டரின் எதிரே இருந்த நாற்காலியில்உட்கார்ந்து கொண்டாள்.

"ராதை! நான் கேட்பதற்கு முதலில் பதில் சொல்லுங்கள். ரயிலை விட்டு இறங்கியதும் நேராக நீங்கள் வீடு போகவில்லை அப்படித்தானே?" என்று கேட்டார், பற்களை நெற நெற வென்று கடித்துக்கொண்டே.

'சொல்லித்தான் ஆகவேண்டுமா?'—ஏறிட்டு அருணகிரியின் முகத்தைப் பரிதாபமாகப் பார்த்தாள் ராதை. 'ஆமாம்' என்பது போலப் பலமாகத் தலை அசைத்தார் அருணகிரி, கொடுக்கு மீசையைத் திருகிவிட்டுக்கொண்டே.

"நேராக மானேஜர் கண்ணன் வீட்டிற்குத்தான் போனேன்" என்றாள் ராதை.

"என்ன?" என்றார் ஆத்திரத்தோடு, அவர் எழுப்பிய கடுமை ஒலி ராதையின் குலையைப் பிடுங்கிப்போடுவது போலிருந்தது. "மானேஜர் கண்ணன்மேல் நீ கொண்ட ஆசை வெறியில் உன் கணவனைக் கொன்று விட்டு வரும்படி நீ தூண்டி விட்டுவிட்டு, காரியம் முடிந்ததும் இங்கு வந்துவிட்டாய்! இல்லையா?"— அருணகிரியின் குரல் உச்சத்திற்கு ஓடியது. நெற்றி நரம்புகள் புடைத்தெழுந்தன,

அதுவரை சாந்தினிபோல அமைதியாக இருந்த ராதை ஏறிட்டு அருணகிரியைப் பார்த்தாள். அவள் கண்கள் கலங்கிச் சிவந்துவர ஆரம்பித்தன ''இன்ஸ்பெக்டர்!'' என்று அதிகாரத் தோடு கடுமையாக அழைத்தாள்.

''சிகப்புக் கட்டிடத்திற்குள் ஒரு பெண்பேதை சிக்கிக் கொண்டால், மணவறையில் புகுந்துவிட்ட புது மணப் பெண்ணைப் புருஷன் நடத்துவதுபோல பாவித்துவிட முடியாது. சயன அறையில் புருஷனிடம் கட்டுண்டுவிட்ட மனைவியைப் போலவும் நடத்திவிட முடியாது, மானமென்பது உங்களுக்கு மட்டுமல்ல: அவமானம் என்பது எனக்கும் உண்டு அதிகாரம் உங்களிடமிருப்பதால் அடக்கத்தை நழுவவிட்டு விட்டீர்கள். நிறையப்பேசியும் விட்டீர்கள். உல்லாஸ சமயத்தில் புருஷன். என்று உரிமை கொண்டவன் கூடக் கேட்கக்கூசுகின்ற கேள்வியை நீங்கள் என்னிடம் கேட்டுவிட்டீர்கள். என் உடல் இப்போது மரக்கட்டையாகியிருக்கலாம் ஆனால் என் மனங்கூட மரத்து விட்டது என்று நினைக்கிறீர்களா? எந்த ஆதாரத்தை வைத்து. எதைக்கொண்டு நீங்கள் துச்சமாக என்னிடம் அந்தக்கேள்வி கேட்டீர்கள்?''

ஆவேசம் வந்தவள்போல ஆக்ரோஷத்தோடு பேசிய ராதையின் அப்போதைய தோற்றத்தைக் காண இன்ஸ்பெக்டர் அருணகிரிகூடச் சிறிது கலங்கிவிட்டார்

''இதோ உங்கள் மில் கணக்கப்பிள்ளை வாஞ்சிநாதன் கூறு கிறார். உங்களோடு பழகும் இவர் பொய் சொல்லுகிறாரா?'

' என்ன சொன்னான்?''—கண்களில் நெருப்புப் பறக்க வாஞ்சி நாதனைத் திரும்பிப் பார்த்தாள் ராதை.

''இப்படி என்னைப் பாருங்களம்மா. அவர் என்ன சொன்னார் என்பதை நான் சொல்லுகிறேன் உள்ளதைச் சொல்லிவிட்டதற் காக அவரை ஏன் மிரட்டவேண்டும்?'' என்று குறுக்கிட்டார் இன்ஸ்பெக்டர் அருணகிரி

'ஏது உள்ளது?''

''கண்ணன் உங்கள் காதலன் என்பது!'

''இன்ஸ்பெக்டர்!'' என்றாள் ராதை குரலில் கடுமை வைத் துக்கொண்டு, அவள் பார்வை சுற்றுமுற்றும் எதையோ தேடுவதுபோல சுழன்றது அவளுக்கு ஏற்பட்ட ஆத்திரத்தில்- அந்தச் சமயம், அங்கே—அந்த அறையில்—ஏதாவது அவள் கைக்கு அகப்பட்டிருந்தால் அதைக் கொண்டு அருணகிரியை நொறுக்கி விடுவாள் போலிருந்தது இன்ஸ்பெக்டர் அருணகிரி யின வார்த்தைகள் அத்தனை தூரம் அவள் மனதைக் கொதிக்க வைத்தது.

சப்-இன்ஸ்பெக்டர் ஆர்தரோ பேச்சு மூச்சில்லாமல் ராதை யையும் அவளுடைய முக பாவங்களையும் கவனித்துக்கொண்டிருந் தார்.

"மேலும் மேலும் கேவலமாக என்னை அவமதித்துப்பேசுகிறீர்கள் இன்ஸ்பெக்டர். சூழ்நிலையை எப்படி எப்படி வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள். அதன் விபரீதத்தை என் மீது சுமத்துங்கள். அதைத் தாங்கிச் சுமக்க இப்போது எனக்கு உறுதி கிடைத்துவிட்டது, திகைப்பதும் திடுக்கிடுதலும் என் வாழ்விலே ஊறி அழுகிவிட்ட துன்பப்பேய்கள் என்பதை நீங்கள் அறிவீர்களா?

"மானேஜர் கண்ணன் என் கள்ளக்காதலன் என்கிறீர்கள். காதலன்தான்! காதலன்...காதலன்...காதலனேதான்! ஆனால் நேற்றில்லை; இன்றில்லை; நாளையுமில்லை, நான் மனது வைத்திருந்தால் நேற்றும் அவனைக் காதலனாகக் கொண்டிருப்பேன்: நாளையும் அவன் என் ஆசைக்குகந்த காதலனாகவே இருந்திருப்பான். ஆனால்—

நீண்டதொரு நெட்டுயிர்ப்பால். அவளது பரந்த நெஞ்சு விம்மித்தாழ்ந்தது.

"சிறு வயதிலே என் மனம் கண்ணனிடம் பறிபோயிருக்கலாம்; ஆனால் ஒரு ஹிந்து ஸ்திரீ கொண்டவனை வந்தடைந்த பிறகு எப்படி வாழ்வாளோ, அப்படித்தான் என் புருஷனோடு வாழ்ந்தேன். கட்டியவனுக்கு நான் மனதால்கூடத் துரோகம் செய்ததில்லை. காலையில் ரயிலைவிட்டு இறங்கினதும், மானேஜர் கண்ணனைக் காண நேராக அவன் வீட்டிற்குப் போனதுகூட எனது கணவரது கட்டளையால்! அந்தக் கட்டளையை நிறைவேற்றத்தான் கண்ணனைப் பார்க்கப்போனேன்."

வார்த்தைகளைக் குமுறிக்கொட்டிக்கொண்டு வந்த ராதையின் குரல் வரவரக் கம்பியது. வயிற்றெரிச்சலோடு வெதும்பிப் பேசிய பேச்சு முடிவில் சாந்தத்தை அடைந்தது, 'ஆனால், இன்ஸ்பெக்டர்! நான் ஏன் புருஷனின் எந்தக் கட்டளையை நிறைவேற்றக் கண்ணனிடம் போனேன் என்று மட்டும் கேட்காதீர்கள். நான் சொல்லவும் மாட்டேன், என் வாழ்வு பாழான பின்பு, மானமே பறிபோனபிறகு, என் மனதிலேகிடந்து உழலும் ரகசியங்களை அம்பலப்படுத்த எனக்கு இஷ்டமில்லை. ஆனால் ஒன்றுமட்டும் சொல்லுகிறேன், நான் கடவுளை நம்புபவள். சட்டத்தைத் தெய்வமாகக் கொண்டுவிட்ட மாசிலாமணி முதலியாரின் பெண். என் தந்தைமீது ஆணையிட்டுச் சொல்லுகிறேன்; நான் குற்றமற்றவள் நிரபராதி கொண்ட கணவன் போனது போய்விட்டார், காதலன் என்று சொல்லிப் பழிபாவத்துக்குள்ளாகிவிட்ட கண்ணனுக்கும் தூக்குமரம் காத்திருக்கிறது இடையே எதையாவது கேட்டு என் மனதைச் சாகடிக்காதீர்கள். பைத்தியக்காரக் கணவனொருவனுக்கு வாழ்க்கைப்பட்டதால் ஏற்கெனவே என் மனது செத்துக்கிடக்கிறது விட்டு விடுங்கள் என்னை ...விட்டு விடுங்கள்'' என்று கத்திக் கொண்டே வெறிபிடித்தவள்போல்போலீஸ் ஸ்டேஷனைவிட்டு வெளியே ஓட ஆரம்பித்தாள்.

COMICS PDF TIMES

"ஏய், அவளைப் பிடியுங்கள்!" என்று பதறினார் இன்ஸ்பெக்டர் அருணகிரி, "அவள் போனால் போகட்டும். விட்டுவிடுங்கள்" என்று துரத்திச் சென்ற ஜவான்களைத் திருப்பக் கூப்பிட்டார், சப்-இன்ஸ்பெக்டர் ஆர்தர்,

"ஆர்தர்" என்று ஒரு அதட்டு அதட்டினார் அருணகிரி.

தலை நிமிர்ந்து ஏறிட்டுப் பார்த்தார் ஆர்தர்.

"தவறுக்கு மேல் தவறு செய்கிறாய் ஆர்தர்! உன் இளம் மனது அவளது பருவ அழகில் மயங்கி மதிமோச மடைந்துவிடப் போகிறது! அழகு ஒரு சாகஸ பிம்பம் என்பதை மறந்து விடாதே!" என்றார் இன்ஸ்பெக்டர் ஆர்தரை முறைத்துப் பார்த்தபடி.

"அவள் அழகைக் கண்டு நான் மனம் குழையவில்லை. பருவ இனிப்பால் பரிதாபப்படவும் இல்லை. குற்றவாளி என்று சம்சயத்துக்குள்ளானவர்களை உள்ளே அடைத்து வைத்துக்கொண்டு உளவு தேடினால் நிஜத்தையும் நம்மால் கிரகிக்கமுடியாது. மேல்நாட்டுக் குற்ற இலாக்கா போலீஸார், தமது நடவடிக்கைகளில் ஜரூரான வெற்றி காண்பதும் இப்படிப்பட்ட முறையில்தான். இதை அவர்கள் அச்னிப் பரீக்ஷயாகக் கருதுவதில்லை. அந்த ஒரு தந்திரத்தை இந்த கேஸில் நான் பரிசோதித்துப் பார்க்க நீங்கள் அனுமதிக்கவேண்டும். உங்கள் அபிமான ஆர்தருக்காக நீங்கள் விட்டுக் கொடுப்பது இதுவே கடைசியாக இருக்கட்டும்!" என்று விநயமாகக் கெஞ்சி நின்றார் ஆர்தர்.

"செய்... உன் இஷ்டம்போல் செய்!" என்று புருபுருத்தபடியே ஸ்டேஷனை விட்டு எழுந்து சென்றார் இன்ஸ்பெக்டர் அருணகிரி.

## அத்தியாயம் : 4

---

## அதிசயக் கடிதமும் அலறிய ராதையும்!

அவர் சென்ற பிறகு ராமதுரை கொலைவழக்கு சம்பந்தப்பட்ட கேஸ் ரிகார்டுகளைப் புரட்டிக்கொண்டே வந்த ஆர்தர், அதில் இருந்த, கண்ணன் ராதைக்கு எழுதியதாகக் கருதப்படும் கடிதத்தை எடுத்துப் பைக்குள் வைத்துக்கொண்டு நேராகக் கொலையுண்ட ராமதுரையின் வீட்டிற்கு வந்தார்.

ஆள் மாகாணம் நிறைந்த அந்தப் பங்களாவிலே ஏன் என்று கேட்கக்கூட நாதியில்லை. ஒரு சிறுவன் மட்டிலும் ஓடிவந்து அவர் முன்னே வந்து நின்றான். "அம்மா எங்கே தம்பி?" என்றார் ஆர்தர்.

படுக்கை அறைக்குள்ளே போச்சுங்க' என்று பதிலளித்த பையனிடம் "வேறு யாரும் வேலைக்காரர்கள் கிடையாதா?" என்று விசாரித்தார்.

இனி தனக்கு வேலைக்காரர்கள் யாரும் அவசியமில்லை என்பதாகக்கூறி ராதை எல்லாரையும்கணக்குத் தீர்த்து அனுப்பிவிட்டதாகத்தெரிய வந்தது. அவளது இந்தப் பைத்தியக்கார போக்கைக் கண்டு வியந்த ஆர்தர், அடுத்த நிமிஷமே பதற ஆரம்பித்தார். 'பங்களாவைச் சூன்யமாக்கி விட்டுத் தற்கொலை செய்து கொண்டிருப்பாளோ?' என்ற கவலையில் அவளது படுக்கை அறையை நோக்கி ஓடினார் அவர்.

ராதை கட்டிலின் மேல் மூர்ச்சையடைந்தவள் போலக் குப்புறப் படுத்திருந்தாள். துக்கத்தின் விசிப்பில் அவள் ஆயாசம் அடைந்திருக்கலாம் என்று எண்ணிய ஆர்தர், அவளாகக் கண் விழித்து எழுந்திருக்கட்டும் என்று அங்கு போடப்பட்டிருந்த சோபாவில் சத்தமில்லாமல் உட்கார்ந்துக் கொண்டார். பாவம்! அவளுக்கு எவ்வளவு அசதி இருந்தால் ஏக்கத்திற்கும் துக்கத்திற்கு மிடையே தூக்கம் சொக்கிக் கொண்டு வரும்.

ராதையைப் பார்க்கப் பார்க்க ஆர்தருக்குத் தன் மனைவியின் ஞாபகம் வந்துவிட்டது. தன் வாழ்நாளில் நடந்த ஒரு சம்பவத்தை நினைத்துப் பார்த்தார். அந்தச் சம்பவத்தின் போது அநீதி இழைத்து தனக்குப் பிற்காலத்தில் மனைவியாகிய ரோஸியைச் சிறைக்கு அனுப்பி வைத்ததும் பின்பு, உண்மை வெளிப்பட்டபோது தான் செய்து விட்ட தவறுக்காக— அவளுக்கு இழைத்துவிட்ட அநீதிக்காக—பிராயச்சித்தம் செய்து கொள்வது போல அவளையே மணந்து கொண்டதும் அவரது நினைவுத் திரையில் ஒரு சினிமாப் படம் போலத் தோன்றி மறைந்தது. இதையெல்லாம் நினைத்துத் தன்னை மறந்த சிந்தனையில் உழன்று கொண்டிருந்த ஆர்தர் எதையோ நினைத்து ஆத்திரம் கொண்டவர் போல பூட்ஸ் காலைத் தரையில் ஓங்கிப் பதித்தார். 'டக்' என்ற ஒரு சப்தம் அந்த அறையை அதிரச் செய்தது. கோபமோ, ஆத்திரமோ ஏற்பட்டால் ஆர்தர் அப்படிச் செய்வது சகஜம்!

அந்த ஓசை கேட்டுக் கண் விழித்தாள் ராதை. கட்டிலருகே சப்-இன்ஸ்பெக்டர் ஆர்தர் உட்கார்ந்திருப்பதைக் கண்டு ''ஆ நீங்களா?'' என்று திடுக்கிட்டபடி துள்ளி எழுந்து கட்டிலில் உட்கார்ந்து கொண்டாள்.

மருட்சியுடன் அவள் கேட்ட இந்தக் கேள்வி 'எமன் போல நீங்கள் இங்கேயுமா என்னைத் துரத்திக் கொண்டு வந்து விட்டீர்கள்' ' என்று ஆர்தரை கேட்பது போல இருந்தது.

"தூக்கத்தைக் கலைத்து விட்டதற்கு மன்னிக்கவேண்டும்'' என்றார் ஆர்தர்.

''நான் தூங்கவில்லை. தூக்கம்தான் எப்படி வரும்? யோசித்துக் கொண்டிருந்தேன்'' என்றாள் ராதை.

ஆர்தர் ராதைக்குச் சற்று அருகே நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார்ந்து கொண்டார். ''நான் ஒரு போலீஸ் அதிகாரி என்பதாக நினைத்து. அந்தப் பயத்தோடு என்னைப்பார்க்காதீர்கள். அந்தத் திகிலோடு எதையும் மழுப்பவும் வேண்டாம். எனக்கும்

மனித ஹிருதயமுண்டு. எனக்கும் மனைவியும் மற்றவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள், ராதை! உங்களை என் சகோதரி போலக் கருதுகிறேன். நீங்கள் ஏதோ யோசித்துக் கொண்டிருந் ததாகச் சொன்னீர்களே, எதைப் பற்றி என்று என்னிடம் சொல் லலாமா?''

ஆர்தரின் பேச்சிலே பச்சாதாபமும் பரிவும் நிறைந்திருந்தது. போலீஸ் அதிகாரியின் குணங்களில் ஒன்றைகூடக் இவரிடம் காணோ மே' என்று ராதை தன்னைச் சிறிது சமாதானப் படுத்திக்கொண்டா லும் மனதில் உள்ளதைச் சொல்லலாமா வேண்டாமா என்று அவள் தயங்கினாள்.

அதை அறிந்து கொண்டார் ஆர்தர். ''ராதை! நான் ஒரு கிறிஸ்தவன். எனக்கு பைப்பிள்தான் தெய்வம். அது காட்டுகிற வழி தான் சட்டம். அது அறிவுறுத்துவது தான் தீர்மான முடிவு. எனது எந்தக் கடமையிலும் இதை நம்புகிறேன்.! என் வாழ்வில் இருள் கவிழ்ந்து கொள்ளும் போதெல்லாம் அவ்வப்போது ஜோதிபோல எனக்குத் தோன்றி வழி காட்டுகிற அந்தப் பைபிளின் மேல் சத்யம் வைத்துச் சொல்லுகிறேன்' நான் ஏற்றுக் கொண்டிருக்கும் தொழிலில் எனக்கு வேண்டியவர்கள் நிரபராதிகள் அல்ல: குற்ற வாளிகள். நல்ல மனிதர்கள் கூடச் சந்தர்ப்பச் சூழ்நிலைகளால் கெட்டவராக்கப்பட்டு சர்வநாசத்துக்குள்ளாவதையும்என் அனுப வத்தில் கண்டிருக்கிறேன்! என்னை நம்புங்கள் ராதை. நீங்கள் நிரபராதி என்பது உங்கள் மனச்சாட்சிக்கு நிச்சயப்பட்டால் என்னிடம் எதையும் ஒளிக்காமல் சொல்லுங்கள் இந்தக் கஷ்டத் திலிருந்தும் உங்களைக் கைதூக்கிவிட என்னாலானதைச் செய் கிறேன்.''

ஆர்தர் கூறிய வார்த்தைகள் ராதையின் மனதிற்கு ஒரு தெம் பைத் தந்தது அவரிடத்தில் அவளுக்கு ஒரு நம்பிக்கை உதயமா கியது.

''ஆர்தர்! நான் வேறு என்ன யோசிக்க இருக்கிறது. தற்கொலை செய்து கொள்ள எந்த வழியைக் கையாளலாம்என்று யோசித்துக் கொண்டிருந்தேன்'' என்றதும் ஆர்தருக்குத் தூக்கிவாரிப் போட் டது. அந்த மாளிகையில் அவர் நுழைந்தபோது வேலைக்காரர்கள் எவரும் தென்படாதது கூட தற்கொலைசெய்துகொள்ளுவதற்காக ராதை செய்து கொண்ட முன்னேற்பாடு என்று எண்ணினார். 'அந்த நோக்கத்தோடு தான் வேலைக்காரர்களைக் கூட நீங்கள் நீக்கிவிட்டீர்களா?'' என்றார்.

''இனி நான் மானத்தோடு என்னவாழ்ந்து விடப்போகிறேன். கட்டிய கணவன் போய் விட்டார்' அவர் விட்டுச் சென்ற என் கறபும் விசாரணையால் களங்கமடையப் போகிறது. இல்லாத ஒரு பழியை என் மீது சுமத்தி,என்னைக் கண்ணனின் சோர நாயகியாக ஆக்கினால்தான் கேஸ் ஜயிக்கும் என்பதற்காக,கோர்ட்டில் கேள்வி

மேல் கேள்வி கேட்டு மானத்தை வாங்கப் போகிறார்கள் நல்ல இடத்தில் பிறந்து, கோடீஸ்வரனுக்கு வாழ்க்கைப்பட்டு, வாழ் வைத்தான் இழந்தேனென்றால், மானத்தையுமா விடவேண்டும்! அதைவிடத் தற்கொலை மேலல்லவா ஆர்தர்!'' என்று கேட்டாள் ராதை. துக்கம் பீறிட்டு வந்ததாலோ என்னவோ, கண்கள் மளமளவென்று நீரைக் கக்கிக் கொண்டிருந்தன.

அதைக் காண மனம் சகியாத ஆர்தர் வேறுபுறம் திரும்பிக் கொண்டார். அவள் நிரபராதியாகத் தான் இருக்கவேண்டும் என்று பகுத்தறிவு அவர் மனதிலே உருவேற்றிக் கொண்டிருந்தது

ஏதோ நினைத்துத் தலை நிமிர்ந்தார் ஆர்தர். "நான் கேட் பதற்காக நீங்கள் வருத்தப்படக் கூடாதம்மா, இந்தக் கொலை யைப் பற்றி நீங்கள் உண்மையில் அறியாதவரானால், என்னை நம்புங்கள்; உங்களுக்கு ஒரு கேடும் வராமல் நான் காப்பாற்று கிறேன். ஆனால் நான் கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்பும் என் சம்சயங்களுக்கு உண்மைக்குப் புறம்பாக எனக்குப் பதில் சொல்லக் கூடாது. உங்களுக்கும் மானேஜர் கண்ணனுக்கும் இதுவரை ஏதும் தொடர்பு இருந்ததில்லையா?''

''இருந்தது! மனதால் இருந்தது, ஆர்தர்! ஆனால் அதுகூட இப்பொழுது இல்லை!'' என்று சொல்லும்போது சோகம் அவள் தொண்டையை அடைத்துக் கொண்டது.

நீண்டதொரு பெருமூச்சு விட்டாள் ராதை! "என் பழங்கதை களைப் பலபேருக்கு முன்னால் வேடிக்கை பார்க்கக் கூடியிருக்கும் ஜனங்களின் பரிகசிப்புக்கும் ஏளனத்துக்குமிடையே கோர்ட்டில் கேட்கத்தான் போகிறார்கள் அப்பொழுது மனம் புழுங்கிச் சொல்வதைவிட என்னிடம் பச்சாத்தாபம் காட்டும் உங்களிடம் நான் சொல்லி அழக் கசப்படையவில்லை. ஒரு பெண், தன் சகோதரனிடம் தன் மனப்புண்ணைச் சொல்லிக் குமுறுவதில்லையா? அதைப்போல நினைத்துக்கொள்கிறேன். பெண்கள் பாவம் செய் வதற்காகப் பிறக்கவில்லை. சொல்லப்போனால் அவர்களுக்குக் குழந்தை மனசு என்றுகூடச் சொல்லலாம், அவர்களுக்குக் கள்ளமும் கபடும் கற்றுக்கொடுப்பதெல்லாம் ஆண்களே தான்......

"நான் சொல்வதை என் பேச்சில் நம்பிக்கை வைத்துக் கவனித்து வாருங்கள், ஆர்தர்! எனது சொந்த ஊர் திருச்சிக்கு அடுத்த ஸ்ரீரங்கம். என் தந்தை ஒரு சாதாரண அட்வகேட்டாக விளங்கிய அந்தக் காலத்திலிருந்து கதையை ஆரம்பிக்கிறேன். அப்பொழுது எனக்கு வயது பதினாறு இருக்கும். திருச்சியில் நான் மெட்ரிக் படித்துக் கொண்டிருந்தேன் அதனால் தினமும் ஸ்ரீரங்கத் திலிருந்து பஸ்ஸில் தான் பள்ளிக்கூடம் செல்வேன். அப்படி நான் பஸ்ஸில் பிரயாணம் செய்துகொண்டிருந்த நாட்களில் இப்போது எங்கள் மானேஜராயிருக்கும் கண்ணனும் பல சமயங்களிலே என் பஸ்ஸிலேயே பிரயாணம் செய்யும்படி வாய்த்துவிடும். அப் பொழுது காலேஜ் மாணவர். "சோஷியல், என்ற பாவ தோஷத்

தால் எப்படியோ நானும் கண்ணனும் பேசிப் பழகும் அளவிற்கு வந்தோம். பள்ளிப்படிப்பு சொல்லித் தந்த பாடமோ அல்லது கற்பனைக் கதைகள் படித்த சாபமோ, கண்ணன்மீது எனக்கு ஒரு அன்பு தோன்றியது. ஒரோர் சமயம் அவனும் என்னிடம் அப்படிச் சொல்லக் கேட்டிருக்கிறேன். எங்களிடையே பரஸ்பரம் தோன்றிய அந்த அன்பு வளர்ந்துகொண்டே போயிற்று. நாங்கள் இருவரும் தம்பதிகளாகிவிட்டால் எப்படி ஆனந்தமாக வாழ்க்கை நடத்தலாம் என்றெல்லாம் எண்ணி மனக்கோட்டை கட்டினேன்.

"அந்த வருஷத்தோடு என் ஹைஸ்கூல் படிப்பும் முடிந்தது. பரீக்ஷையிலும் தேறிவிட்டேன். ஆனால் என்னை மேலும் படிக்க வைக்க என் தந்தைக்கு வகையில்லை, குடும்ப வாழ்க்கையில் ஈடுபடப் போகிறவளுக்கு இதற்கு மேல் எதற்காகப் படிப்பு என்ற எண்ணம் கொண்டார். காலா காலத்தில், என்னை யாரிடமாவது தள்ளிவிட வரன் தேடுவதில் மும்முரமாக ஈடுபட்டார்.

"என் மனமோ கண்ணனையே சுற்றிவந்து வட்டமிட்டு ஏங்கித் தவித்தது. என் தந்தைக்கு ஒரே மகள் என்ற செல்ல உரிமையோடு கூசாமல் அப்பாவிடம் அபிப்பிராயத்தைத் துணிந்து சொல்லியும் விட்டேன். கண்ணனைப்பற்றி விசாரித்துப் பிறகு பதில் சொல்லுவதாகச் சொன்னார். அவரது இந்தப் பதில் என் வயிற்றிலே பால் வார்த்ததுபோல இருந்தது.

"ஆனால் என் வயிற்றிலே ஊற்றிய அந்தப்பால் என் ஆனந்த வாழ்விற்கு அமிர்த ரஸமாக ஆகிவிடும் என்று கனவுகள் கண்டு வந்த சுருக்குப்போல, எளிதில் அவை சுக்கு நூறாகச் சிதறும் என்று நினைக்கவேயில்லை. கண்ணனைப்பற்றி என் தந்தையின் காதுகளுக்கு எட்டியது எத்தகைய செய்திகளோ தெரியாது. 'எனக்கு இஷ்டமில்லை ராதை!' என்று சொல்லிவிட்டார்.

'காரணம் கேட்டு எவ்வளவோ வாதாடினேன். 'அருமையோடு வளர்த்த ஒரு பெண்ணைப் பாழுங்கிணற்றில் எந்தத் தகப்பனும் தள்ளத் துணியமாட்டான்' என்று சொல்லி மேலும் அதைப்பற்றி என்னைப் பேசவிடாமல் செய்துவிட்டார்.

கண்ணனைப்பற்றி அவர் கேள்விப்பட்டது வேறொன்றுமில்லை. ஹைஸ்கூல் படிப்பின்போது, என்னைப்போன்ற அநேகம் பெண்களோடு பழகி, அன்பு காதல் என்றெல்லாம் பேசியபடி தறிகெட்டு அவன் அலைந்தவன் என்றும், யாரோ ஒரு கிறிஸ்துவப் பெண்ணிடம் மயங்கி அவளைக் கல்யாணம் செய்து மதம் விட்டு மதம் மாற முற்பட்டதாகவும், காதலின் எல்லைக் கோட்டைத் தாண்டி மணவாழ்வின் மலரமுதைப் பருகியதன் பயனாய் அவள் கர்ப்பமுற, ஊரைவிட்டே அவளை ஓட்டிவிட்டதாகவும்—இப்படியெல்லாம் யார் யாரோ கண்ணனைப் பற்றிக் கதை அளந்துவிட்டிருப்பதாக அறிந்தேன்.

COMICS PDF TIMES

"அவனோடு நட்புக் கொண்டிருந்த இரண்டுவருட காலத்தில் நன்கு பழகியிருக்கிறேன். குணதோஷம் எதுவும் நான் கண்டதில்லை பொருமையால் யாரோ அப்படிச் சொன்னதைக் கேட்டு என் தந்தை என் ஆசையைச் சிதைத்து விட்டார். கண்ணனை நான் கல்யாணம் செய்து கொள்வதென்பது கனவிலும் கருதமுடியாததாக ஆகிவிட்டது!

"கண்ணனோடு கலந்தாலோசித்து கண் காணாத இடத்திற்கு அவனோடு ஓடிவிட்டால் தான் என்ன என்றுகூட எண்ணினேன். நான் எண்ணியபடி செய்துவிட என் மனதிலே இருந்த கொள்ளை ஆசை கொடிகட்டி நின்றது கூண்டுக்கிளிபோல் கண்டிப்பான காபந்தில் நான் வீட்டினுள்ளே இருக்கும் நிலை ஏற்பட்டு விட்டதால் கண்ணனைச் சந்திக்கும் சந்தர்ப்பம்கூட எனக்குக் கிட்டவேயில்லை. சாப்பிடாமல் தூங்காமல் முரண்டு செய்து பார்த்தேன். பட்டினி கிடந்து பழிபோட்டுப் பார்த்தேன்

"என் இள மனது ஏங்கித் துடிதுடித்தது. வாழப்போவது நானா என் தந்தையா என்றெல்லாம் எண்ணினேன். அது முதல் என் தகப்பனார் எனக்கு யமனாகத் தோற்றமளித்தார். அழுது அழுது நான் வெதும்பியதுதான் மிச்சம், அவரது மனம் இளகவேயில்லை.

"ஒரு நாள், தந்தை வெளியே போயிருந்த சமயம் வாசலை ஒட்டிய ஜன்னலில் உட்கார்ந்து தெருவில் போவோர் வருவோரைப் பார்த்துக் கொண்டிருந்தேன். கண்ணன் குறுக்கும் நெடுக்குமாக என் வீட்டையே வளைய வந்து கொண்டிருந்தவன் சுற்றும் முற்றும் ஒரு தரம் பார்த்துவிட்டு, ஜன்னல் வழியே ஒரு கடிதத்தைப் போட்டுவிட்டு மறைந்தான். ஆவலோடு அதைப் பிரித்து வாசித்தேன்.

பிரிய ராதைக்கு,

எண்ண அலைகளையும், பருவப் பசப்புகளையும் வர்ணித்து உன் மனதை அலைக்கழிக்க விரும்கவில்லை. கண்களிலே நீர் தேங்காமல், மனதிலே விரசத்திற்குப் பிரதானம் தராமல் நிஷ்காம்ய மனதுடனேயே உனக்கு இக்கடிதம் எழுதுகிறேன் உறவு கொள்ள ஊசலாடிய என் மன ஓட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து, நீயும் ஊழிக் கூட்டத்தில் ஊதாரியாகிவிடக்கூடாது என்ற நன்னம்பிக்கையிலேயே இக்கடிதம் எழுதுகிறேன். எனது மகிழ்ச்சி மதுவின் இனிப்பு நீ கிட்டாத துரதிருஷ்டத்தால் கைத்துவிட்டது. காதல் பாதையில் என் கால்கள் மேலும் நடக்க மாட்டாமல் தளர்ந்து விட்டது மற்றவரைப்போலத் தீராத சோக வெளியில் நடந்து செல்ல எனக்குத் திராணி இல்லை திராணி இருந்தாலும் முடிவில் எனக்கோ உனக்கோ என்ன பாக்யம் கிட்டிவிடப்போகிறது. லைலா மாடமாளிகையில் வாழவில்லை மஜ்னுவாகத் திரிந்த கைஸ் பாலைவன மணலில் வெதும்பிச் செத்தான். காதலுக்கு உதாரணமாக இருந்த மற்றொரு காதல் ஜோடிகளைத்தான் நினைவுபடுத்திப் பாரேன். மாணவர் யூனியனில் நாம் நடத்திக் காட்டிய அந்த

ஷெரின்—பராட் கதையை ஞாபகப் படுத்திப்பார். ஆசையைப் பாலமாகக் கொண்டு, ஆர்வத்தை ஆயுதமாகக் கொண்டு, அடையப்போகும் பாக்கியத்தை ஆனந்த சுகபோகமாக நினைத்து, மலையைக் குடைந்து ஆற்றுக்கு வழிகாட்டி. 'எங்கே என் ஷெரின்' என்று வந்தபோது அவள் அவனுக்குக் கிடைத்தாளா? வஞ்சம் வலை விசியது.வாழ விரும்பாமல் வையகத்தைவிட்டே ஒழிந்தான். பிரசித்தி பெற்ற இந்த இருவின் வாழ்வே நமக்கு வழிகாட்டியாக விளங்கவேண்டும்.

நாம் வாழத்தான் பிறந்தோம்; காதல் என்ற கைகூடாத ஒரு இன்ப ஏக்கத்துக்காகச் சாகப் பிறக்கவில்லை. நம் மனதிலே ஒரு ஆசை எழுந்தது, நானும் நீயும் சேர்ந்து சதிபதியாக வாழ வேண்டுமென்று அது கைகூடாமல் போய்விட்டது. அதற்காக வாழ்வை வாழவிட அவசியமில்லை. நம்மில் ஒருவர் இயற்கை மரணத்துக்கு ஆளாகியிருந்ததால், மற்றொருவர் எப்படி ஆறுதல் அடைந்து எஞ்சிய நாட்களைக் கழிப்போமோ அப்படித்தான் நாமும் பிறந்ததற்காக வாழ்ந்து மடியவேண்டும் அதனால், உன் வாழ்வை விளக்கேற்றாத மாளிகையாக இருட்டடித்துக்கொண்டு விடாதே

தீரச் சிந்தித்தே எழுதுகிறேன். என்னைப்பற்றிய ஆசைகளை விட்டுவிடு.

உன் உள்ளக் குமுறலை மூடி வைக்காதே! கொட்டித் தீர்த்து விடு. அந்தத் தகிக்கும் ஜ்வாலையைப் பெருமூச்சின் மூலம் வெளிப் படுத்திவிடு. உன் விதி தேடித்தரும் துன்ப வகைகளுக்கு நீ ஆளாகி அழக்கூடாது.

பள்ளியில் படித்தோம்; கல்லூரிக்குப் போகும் கால் 'நான் தேறி நீ பின் தங்கியிருந்தால், அந்தப் பிரிவை எப்படிச் சகித்து ஆறுதல் அடைவாயோ, அதேபோல வாழ்வை நிர்ணயித்துக் கொள். காலப்போக்கினால் சமூகச் சந்தையிலே மக்களுக்கான 'பகடி' வாணிபத்தில் கைமாறிவிட்ட சரக்காக என்னை எண்ணிக் கொண்டு மனதைத் தேற்றிக்கொண்டு விட்டேன். அதேபோல் நீயும் நினைத்து, உன் வாழ்வை வளப்படுத்திக்கொள். நீ நன்றாக வாழவேண்டும். அதுவே என் ஆசை!

அன்புள்ள
கண்ணன்.

''வேறு வழியில்லை; விழிமால் கண்சோரவிடவில்லை. லைலாவும் ஷெரினும் கதைக்கேற்ற சுவையாக இருக்கிறார்கள். அவர்கள் கதையைப் படித்தபின்பும், காதலின் பலாபலன்களை அறிந்த பிறகும் நான் ஏன் அவர்களைப் போன்ற கருகிய மொட்டாக வேண்டும்? கலக்கமும் கலங்கலுமே காதல் தரும் பரிசு என்பதைக் கண்ணன் கடிதம் என் கருத்தில் பதிய வைத்தது.

''பிறகு ராமதுரை எனக்குக் கணவராக வந்து வாய்த்தார். கோடீஸ்வரனான அவர் என் அழகிலே சொக்கியே, சாதாரணக்

குடும்பம் என்றும் பாராமல் எல்லைக் கைப்பிடிக்க வந்ததாக ஊரில் பேசிக்கொண்டார்கள். கொட்டு மேளத்துக்கிடையே பணப்பந்தலிலே அவரைப் பார்த்தபோது, என் இன்பக் கோட்டையைத் தகர்க்க வந்த சண்டாளன் போலவே அவர் எனக்குத் தென்பட்டார். அந்த ஒரு பரிதவிப்பும் சிறிது நாளில் என்னுள்ளேயே மடிந்து விட்டது.

"அவரோடு என் வாழ்க்கையைப் பிணைத்துக்கொண்டேன். குடித்தனம் என்று அவரோடு வாழ ஆரம்பித்த பிறகு, அவர் என்னிடம் காட்டிய அன்பும், பரிவும், போஷணையும், இனிய சுபாவமும் என் மனத்திலிருந்த குறையை அகற்றி அநேகமாகக் கண்ணனைப்பற்றிய நினைவையே மறக்கடிக்கச் செய்துவிட்டது.

"ஆயிற்று; இரண்டு வருஷங்கள் கடந்தன. நான் சந்தோஷமாக வாழ்ந்து வந்த நாளில், ஒரு நாள், என் பேருக்கு ஒரு கடிதம் வந்திருந்தது. பிரித்துப் பார்த்தால் கண்ணன் எனக்குக் கடிதம் எழுதியிருந்தான். அதில் பழங் கதைகளுக்கு ஒரு அழுகை அழுதுவிட்டு, ஏழ்மையான ஸ்திதியில் இருப்பதாகவும், பட்டதாரியாக இருந்தும் அவனுக்குக் கிடைத்தது குமாஸ்தா வேலை தான் என்றும், என் புருஷனிடம் சொல்லி தனக்கு ஒரு நல்ல வேலையாக மில்லில் வாங்கிக் கொடுக்கும்படியாகவும் எழுதியிருந்தான். அவன் எழுதிய கடிதத்தை வாசித்துப்பார்த்தபொழுது அவனது பரிதாப நிலைக்காக மனம் கசிந்தேன்.

"என் புருஷனிடம் எனக்கு அப்பொழுது நல்ல செல்வாக்கு. என் அழகிலும் அன்பிலும் அவர் மாய்ந்து கிடந்தார். என் சொல்லை அவர் தட்டிப் பேசியதே கிடையாது. என்னால் ஆனதைக் கண்ணனுக்குச் செய்யலாம் என்று முடிவு செய்து கொண்டேன்.

"நான் கண்ணனுக்காகச் சிபாரிசு செய்ய வேண்டுமானால் என் புருஷனிடம் அவன் எழுதிய கடிதத்தைக் காட்டியாக வேண்டும். அதைக் காட்டினாலோ அதுவும் தொல்லை. பழங்காலக் காதலின் விஷவாடை அதில் வீசும்பொழுது அதை அவரிடம் எப்படிக் காட்ட முடியும்?

"எனக்கு வேறொரு யோசனை தோன்றியது. கண்ணனுக்குக் கடிதம் எழுதினேன். 'பழங்கதைகளை எழுதாதே கண்ணா! நமக்கிடையே நடந்துவிட்ட அந்த நாளைய ஆசைகள் குழந்தைகள் மண் வீடு கட்டிப் புருஷன்—பெண்டாட்டி என்று விளையாடுவதற்குச் சமமாகும். நான் இன்று வேறொருவன் மனைவி. பழைய நினைவுகளுக்கு இனி இடமில்லை. உன்மேல் எனக்கு வாஞ்சையில்லாமலும் போய்விடவில்லை. ஆனால் அது விகல்பமில்லாதது. சகோதரி தன் சகோதரனிடம் கொள்ளும் பாசம் போன்றது. இந்த மனதைத் தெரிந்து கொண்டு, நான் சொல்வது தீர்மானமானது என்று கருதி, காதல் பிரேமை என்ற மனோ விகாரங்களையெல்லாம் மனதிலிருந்து அகற்றிக் கொண்டு, நான் உன் சகோதரி என்ற மனப்பான்மை கொள்ள முடியுமானால் மறுபடியும் எனக்

குக் கடிதம் எழுது. அதில் உன் ஏக்கத்தின் பெருமூச்சைக் கொட்டாதே. உன்வறுமையை வர்ணி; 'எனக்கு உதவி செய்!' என்று அப்பட்டமாகக் கெஞ்சி எழுது. அந்த உன் கடிதத்தை என் புருஷனிடம் காட்டி உன் வாழ்விற்கு ஒரு விடிமோக்ஷம் தேடித் தருகிறேன்- அன்றும் உன்னிடம் அன்பாய் இருந்தேன். இனியும் அது போல இருப்பேன். ஆனால் நான் குறிப்பிடுகிற அன்பின் கோணங்கள் இன்று ஒன்றையொன்று மாறுபட்டு விட்டன என்பதைத் தீர்க்கமாக நீ புரிந்துகொள்ள முடியுமானால் மட்டும் கடிதம் எழுது' என்று குறிப்பிட்டெழுதினேன்.

"அதன்படியே வேலை கேட்டுக் கடிதம் எழுதினான் கண்ணன். அதை என் கணவரிடம் காட்டிச் சிபாரிசு செய்தேன். யார் என்று விசாரித்தபோது என் தூர பந்து என்று சொல்லிக் கொண்டேன்.

"என் கோரிக்கை நிறைவேறியது. கண்ணனை மில்லில் சேர்த்துக் கொண்டு தாராளமாகச் சம்பளமும் கொடுத்து வந்தார். கண்ணனும் தன் திறமையால் படிப்படியாக உத்யோக உயர்வு பெற்று மானேஜராகவும் ஆகி விட்டான்.

"கண்ணன் ஆரம்பத்தில் வேலைக்கு வந்து சேர்ந்த புதிதில் நான் அவனிடம் பழகியதுண்டு. பிறகு இதுவரை நான் அவனைத் தனித்துச் சந்தித்ததே இல்லை. சந்திக்க மனமின்றி இருந்தேன். அப்படிப் பழகுவது மனக் கிளர்ச்சிக்குப் பழைய ஆசாபாசங்களுக்கும் இடமாக்கித் தந்தாலும் தந்துவிடும் என்ற பயம் எனக்கிருந்தது.

"பிறகுதான் கண்ணன் மில் நிர்வாகி என்ற ஹோதாவில் எங்கள் பங்களாவிற்கு அடிக்கடி வந்து போக வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. அத்தியாவசியமான விஷயங்களை ஆலோசிக்க என்புருஷனைத் தேடி வருவான். சில சமயங்களில் அவன் தேடி வரும் நேரம் நானும் என் கணவரும் ஹாலிலே உட்கார்ந்து உல்லாசமாக வம்படித்துக் கொண்டிருக்கும் நேரமாகவும் இருந்துவிடும். அவனை நேருக்கு நேர் சந்திக்கும்போது எப்படிப் பேசாமல் இருக்க முடியும்? 'என்ன ஏது' என்று க்ஷேமலாபங்கள் விசாரிப்பேன் அவனும் குனிந்த தலை நிமிராமல் பதில் சொல்லிப் போவான். அவனோடு பேசுவதில் என் கணவர் அதிருப்தி காட்டியதே இல்லை.

"இந்த ...தியில்தான் நேற்றுவரை நான் இருந்திருக்கிறேன் என் தந்தையின் உடல் நலம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்ற தகவல் வந்து, நான் பெங்களூருக்குப் புறப்பட்டுச் சென்ற வரையில் இப்படித்தான் இருந்திருக்கிறேன். இது எவ்வளவு தூரம் உண்மை என்பதை எடுத்துக்காட்ட என் புருஷனைத் தவிர வேறு சாக்ஷியம் இல்லை. அவரும் கொலைப்பட்டு விட்டார். கண்ணனுக் எனக்குமிடையே நடந்த ஓரளவு உண்மையை வைத்து என்னை ஏன் சாகடிக்க வேண்டும்?" என்று நொந்து பேசினாள்,

"இழந்த காதல் துளிர்ப்பதும் உண்டு ராதை! அதை அனுசரித்துப் பார்த்தால் யாருக்குமே சந்தேகம் ஏற்படுவது சகஜம் தானே?" என்றார் ஆர்தர்.

"நீங்கள் கேட்க வேண்டிய கேள்விதான் ஆர்தர்! பெண்கள் மனம் ஒரு பேர்க்கு. ஆண்கள் மனது அதற்கு முரணானது. ஆண்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் அழகிய பெண்ணைக் கண்டு விட்டால் ஆசைகொண்டு விடுவார்கள். ஆனால் அழகான ஆணைக் கண்டு எளிதில் அற்ப ஆசைகளுக்கு மனதில் இடமாக்கித் தரும் பெண் ஆயிரத்தில் ஒருத்தியாகத்தான் இருப்பாள். அதோடு மட்டுமல்ல; ஒரு பெண்ணின் மனோ நிலை, நட்பு, ஆசை ஆகியவைகள் மணமாவதற்கு முன் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். கணவன் வீடு என்று புகுந்து விட்டால் சிறிது நாட்கள் அந்த மன அலைச்சல் இருக்கும், நாளாவட்டத்தில் அந்த எண்ணங்களும் நினைப்புகளும் அறவே மறந்தொழியும். பிறகு அந்தச் சபலத்திற்கே இடமிருக்காது. இந்த உலகத்திலே ஒவ்வொரு பெண்ணும், மணமாகும் வரை தன் மனதால் ஒரு கணவனை வரிக்கத்தான் செய்கிறாள். அநேகமாக அதற்கு மாறாக மணமுடிகிறது. இருந்தும் அந்தப் பெண் புருஷன் மனதைக் கோண வைப்பதில்லை, பிரியத்தை அள்ளிச் சொரிவாள். புழுக்கத்தை மனதில் அடக்கிக் கொண்டல்ல! சம்சார பந்தம் அவள் பழங் கனவுகளை அடியோடு அழித்து விடுகிறது.

"நான் ஒரு பெண்ணாய்ப் பிறந்ததால், என் அனுபவத்தைக் கொண்டு, ஏனைய பெண்களின் மனதும் என்னுடையதைப் போலவே இருக்கும் என்று அனுமானித்தே இவ்வளவும் சொல்ல வந்தேன் ஆர்தர். நீங்கள் மணமானவர் என்று நினைக்கிறேன். உங்களை வரதடையுமுன் உங்கள் மனைவிக்கும் பலவித மனோ விவகாரங்கள் இருந்திருக்கும். நீங்கள் வேண்டுமானால் கேட்டுப் பாருங்கள்!"

பேச்சுக்குப் பேச்சு அவளது முகத்திலே தோன்றுகிற மாறுதல்களையும் சொல்லின் அழுத்தத்தையும் நன்கு கவனித்து வந்த ஆர்தர் சிறிதும் நேரம் யோசனை செய்தார். சுற்றி வளைத்து வந்து தன் சந்தேகத்தை நிவர்த்தி செய்துகொள்ள அவசியமில்லாமல் போய்விட்டதால், தன் மனதிலே தோன்றியதைக் கூச்சமில்லாமல் கேட்டுத் தெரிந்து கொள்ளலானார்.

"ராதை! இன்ஸ்பெக்டருக்குச் சொன்ன பதிலை எனக்குச் சொல்லமாட்டீர்கள் என்று நம்புகிறேன். நீங்கள் ரயிலைவிட்டு இறங்கியதும் இறங்காததுமாய்க் கண்ணனைக் காணப் போனதன் காரணம்," என்றார்.

"அதுதான் எனக்கும் ஆச்சரியமாக இருக்கிறது. நேற்றைய தினம் எனக்கு என் புருஷனிடமிருந்து 'டிரங்க்'கால் வந்தது. அவசரமாக அழைத்த அவர், "நீ உடனே புறப்படு ராதை! நீ எழுதிய காதல் கடிதம் என்று சொல்லி, ஒரு கடிதத்தைக் காட்டி,

தில் ஊழியர்களிடையே என் மானத்தை வாங்கி, எல்லோருமே என்னைப் பார்த்து எள்ளி நகையாடும்படி நீ வேலைக்குச் சேர்த்து வைத்த கண்ணன் செய்து விட்டான்' என்று அலறினார்.

"எனக்கு ஒன்றுமே புரியவில்லை. அதற்கு மேலும் அங்கிருக்க கால்கள் பொறுக்கவில்லை. உடனே புறப்பட்டேன்...

"ஆர்தர்! நீங்கள் நம்பினாலும் சரி, நம்பாவிட்டாலும் சரி! எனக்கிருந்த மனவேதனையில், எதிர்பாராத அவமானத்தில், துணிகரமான ஒரு முடிவுக்கு வந்தேன். மனதாலும் என் புருஷன் யாருக்கும் தீமை செய்யாதவர் சில சமயங்களில் என் கணவரிடம் விசித்திரமான பைத்தியக்காரப் போக்குகள் இருக்குமென்றாலும் அவர் பொய் சொல்லி நான் பார்த்ததில்லை அப்படிப்பட்ட உத்தமர் எதற்காக இப்படி ஒரு கட்டுக் கதை செய்யப்போகிறார்? அதைத் தீர்க்கவேண்டியவள் நான் என்ற நம்பிக்கையால் தான் எனக்கு டெலிபோன் செய்தார் என்று நம்பினேன். ஊர்வந்து சேர்ந்து ரயிலை விட்டு இறங்கியதும் வீடு போய் என் கணவர் முகத்தைப் பார்க்கக்கூடத் தெம்பில்லை. என் துணிவு பயங்கரமானதாக மாறிவிட்டது. கண்ணனிடம் நேராகப் போய் உண்மையை விசாரிக்கலாம் என்றே போனேன். என் கற்பு களங்கமில்லாதது என்று ஊராருக்கும் உலகத்தோருக்கும் எடுத்துக் காட்டுவதில் என் கணவரைவிட எனக்கல்லவா பொறுப்பு அதிகம்? அந்த உத்வேகத்தோடு கண்ணனைக் காண நேராக அவன் வீட்டிற்குப் போனேன். அவன் மட்டும் வீட்டிலிருந்தால்...' என்று சொல்லிப் பற்களை நறநறவென்று கடித்தாள்.

"என்ன செய்திருப்பீர்கள் ராதை?'' என்றார் ஆர்தர்.

"என்ன செய்திருப்பேன்? கொலை...! வேறென்ன இருக்கிறது?'' என்றாள்.

"நிஜமாகவே அதுபோன்று நீங்கள் கண்ணனுக்கு ஏதும் கடிதம் எழுதியதில்லை?''

"கிடையவே கிடையாது ஆர்தர், என்னை நம்புங்கள்!'' என்று கத்தினாள்.

ஆர்தரின் வலதுகை பைக்குள் நுழைந்து ஒரு காகிதத்துடன் வெளியே வந்து, "இதோ, இதைப் பாருங்கள், இது கண்ணனின் கையெழுத்துதானே?'' என்றார்.

அதை வாங்கிப் படிக்க எண்ணிய ராதை நடுங்கும் தன் கைகளை நீட்டினாள். ஆனால் அந்தக் கடிதத்தை அவள் கையில் கொடுக்க ஆர்தருக்குத் தைரியமில்லை. அதை வாங்கிப் படித்த பிறகு சடாரென அவள் அதைக் கிழித்தெறிந்துவிட்டால்? யாருக்குமே இது சகஜமாக நினைக்கத் தோன்றுமல்லவா?

"முதலில் இது கண்ணன் கையெழுத்துதானு என்று சொல்லுங்கள்,ராதை!" என்ருர் கடிதத்தைப் பிரித்துத் தூரத்தில் எட்டிப் பிடித்தபடு.

ராதையின் கண்களுக்கு அது சரியாகப் புலப்படவில்லை. தூரத்திலிருந்தபடியே பார்த்து நான் எப்படிச் சொல்லமுடியும்?" என்று அவள் கூறவே, உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்த ஆர்தர் கட்டிலுக்குச் சமீபமாக நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு கடிதத்தைக் காட்டினூர். அதைப் பார்த்த ராதை 'ஆம்' என்ருள். அதில் என்ன எழுதியிருக்கிறது என்பதை அறிந்துக் கொள்ள அதைக் கேட்டுக் கை நீட்டியபோது, 'நானே படிக்கிறேன் கேளுங்கள்' என்று சொல்லிக் கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தார்.

"பிரிய ராதை!

நீ உன் ஏக்கத்தையும் ஆசையையும் கொட்டி எழுதிய கடிதத்தை நான் பார்த்தபோது என் மனம் எவ்வளவு துடி துடித்தது தெரியுமா? விதி நம்மைப் பிரித்துவிட்டாலும் கூட மதியை நாம் இன்னும் இழந்துவிடவில்லை. உன் மனப் புழுக்கத்தை இத்தனை நாள் எப்படித்தான் மூடி மறைத்து வைத்திருந்தாயோ? உன் மனது என்னையே எண்ணி ஏங்கித் தவிக்கிறது என்று நீ முன்பே என்னிடம் சொல்லியிருந்தால் அந்த ஏக்கத்திற்கு இடமில்லாமல் செய்திருப்பேனே? விரிவாக உனக்கு ஆறுதல எழுதச் சந்தர்ப்பச் சூழ்நிலை சரியாக இல்லை. திரும்ப ஊர் வந்து சேர்ந்ததும் எந்த விதத்திலாவது உன்னைத் தனிந்துச் சந்திக்க முயற்சிக்கிறேன் ஏதாவது ஒரு முடிவுக்கு வந்து, வருங்கால வரம்விலாவது இன்ப ஜோடிகளாய் வாழத் திட்டமிடுவோம். அதுவரை மனதைத் தேற்றிக் கொண்டு நிம்மதியாய் இரு.

சென்னை
17—1—51

அன்புள்ள
கண்ணன்."

"அட பாவி!" என்று அலறிவிட்டாள் ராதை,

அதே சமயம், 'ஆர்தர்!' என்று வெங்கல த்வனி கேட்டுத் திரும்பி பார்த்தபோது இன்ஸ்பெக்டர் அருணகிரி உள்ளே நுழைந்து கொண்டிருந்தார்.

"அந்தக் கடிதத்தை உன்னிடமிருந்து வாங்கிக் கொண்டு போகவே முக்கியமாக இங்கே வந்தேன் அதை இப்படிக் கொடு, ஆர்தர்!' என்று கையிலிருந்த கடித்தைப் பிடுங்கிக் கொண்டார். "அசந்தர்ப்பமான நேரத்தில் உத்திரவு இல்லாமல் உங்கள் உல்லாச கிரஹத்தில் நுழைந்ததற்கு மன்னிக்க வேண்டும் ராதை!" என்று சொல்லியபடி விர்ரென்று வெளியேறினூர்.

எதிர்பாராத இந்த நிகழ்ச்சியால் பட்டமடைந்துவிட்டார் சப்—இன்ஸ்பெக்டர் ஆர்தர். எதையெதையெல்லாமோ யோசித்த பொழுது அவரது மனம் திகிலடைந்தது. ராதையோ பரிதாப

மாக அவரது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"அம்மா ராதை! நீங்கள் கைது செய்யப்பட்டிருக்கிறீர்கள் வாருங்கள்" என்றனர் அதே சமயம் உள்ளே நுழைந்த இரு ஜவான்கள்.

"குற்றவாளிகளை வெளியே விட்டுவைத்தால் உண்மை உடைபட்டு விடுவதோடு, கேசுக்கு வலுவாக இருக்கக்கூடிய ரிக்கார்டுகள் கூட மறைந்துபோய் விடும் என்று எங்களிடம் இன்ஸ்பெக்டர் சொல்லச் சொன்னார்!" என்ற ஆர்தரிடம் சொல்லிவிட்டு சல்யூட் அடித்து, வாசலை நோக்கி நடந்தார்கள் ஜவான்கள்

"முனுசாமி! வா இப்படி!" என்றார் ஆர்தர்.

திரும்பிச் சென்று கொண்டிருந்த ஜவான்களில் ஒருவனுன ஏட் "என்ன ஸார்?" என்றான்.

"அந்தக் கடிதம் என்னிடம் இருக்கிறது என்பதை இன்ஸ்பெக்டரிடம் நீதான் சொன்னுயா?"

"இல்லவே இல்லை."

"இந்தக் கடிதத்திற்காக அவர் உங்களைப் பின்பற்றி இங்கே வரவில்லை ஸார். உங்களைப்பற்றி ஏதோ சந்தேகம் கொண்டு, ராதைக்கும் உங்களுக்குமிடையே தவறுக கற்பனை நினைத்து, நோட்டம் பார்க்க வந்தார். அவர் வந்ததற் கேற்றாற்போல இருந்தது நீங்கள் இருவரும் தனித்து படுக்கையறையில் பேசிக் கொண்டிருந்தது' அந்தச் சம்பாஷணை 'முழுவதையும் அறைக்கு வெளியே நின்றபடி இன்ஸ்பெக்டர் கவனித்து வந்தார். நீங்கள் அந்தக் கடிதத்தை ராதைக்குப் படித்துக் காட்டியபோது தான், அப்படிப்பட்ட ஒரு கடிதம் உங்களிடம் இருப்பதை அவர் அறிந்தார். இன்ஸ்பெக்டருக்கு உங்கள்மீது ரொம்பக் கோபம். ராதையிடம் நீங்கள் மயங்கி, உங்கள் கடமைக்குக்கூட நீங்கள் துரோகம் செய்வதாகக் கருதுகிறார்." என்றான்,

"சரி, நீ போ!" என்று சொல்லி வாசல் பக்கம் திரும்பினர். தெருவிலே நின்று கொண்டிருந்த ஜீப் கார் ராதையைச் சுமந்து போலீஸ் ஸ்டேஷன் நோக்கிப் பறந்தது.

சப்-இன்ஸ்பெக்டர் ஆர்தரிக்கு போலீஸ் ஸ்டேஷன் போக மனமில்லை, ராதையை ஜீப் காரில் ஏற்றிக் கொண்டு புறப்படத் தயாராக இருந்த இன்ஸ்பெக்டர் அருணகிரி, தான் வாசலிலே நின்று கொண்டிருப்பதைக் கவனித்தும் அலக்ஷியமாதத் தன்னைப் பார்த்து, 'நீ எக்கேடு கெட்டு வேண்டுமானாலும் தொலை' என்பது போலிருந்தது ஆர்தருக்கு. அருணகிரியின் அந்தப் போக்கு ஆர்தரின் மனதிலே சொல்ல வொண்ணுத பீதியைக் கிளப்பியது எனலாம். 'எங்குபோவது?' என்பது தெரியாமலேயே வாசல் வராந்தாவில் போடப்பட்டிருந்த பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டார் அவர்.

மூலையிலே, ஒதுங்கி நின்றபடி நடந்துபோன காரியங்களை யெல்லாம் கவனித்தபடி நின்றுகொண்டிருந்த அந்தப் பையன்—ராதை வீட்டில் வேலைக்காரனாக மிஞ்சி நிற்கும் பையன்—ஆர்தரைப் பீதியோடு பார்த்துக்கொண்டிருந்தான்.

''தம்பீ! இப்படி வா'' என்றார் ஆர்தர். 'தன்னை என்ன செய்யப் போகிறாரோ?' என்று பயந்துகொண்டே நெருங்கினான்.

''எத்தனை நாளாக நீ இங்கே வேலைக்கிருக்கிறாய்?'' என்றார் ஆர்தர்.

பையன் நடு நடுங்கிக்கொண்டே, ''இரண்டு வருஷங்களுக்கு மேலாகவே இருக்கும்,'' என்றான். அந்த வீட்டிலே எஜமானியம்மாளின் கூப்பிட்ட குரலுக்கு ஏன் என்று கேட்பது மட்டிலும் தான் தன் வேலை என்றும் சிறு பையன் என்ற ஹோதாவில்தான் நினைத்த சமயங்களில் அந்த மாளிகையிலே எங்கு வேண்டுமானாலும் சுற்றிவரலாமென்றும், ராதைஅம்மாள் அவனிடம் அளவற்ற அபிமானத்தோடு இருந்து வந்திருக்கிறாள் என்பதையும் கூறினான். கள்ளங்கபடமற்றஉள்ளங்கொண்ட அந்தப்பையனிடமிருந்துவேறு ஏதாவது தகவல் கிடைக்கலாம் என்ற நம்பிக்கையால் அவனிடம் என்னென்னவெல்லாமோ கேள்விகள் கேட்டுக்கொண்டிருந்தார்.

ராதையின் மீது எத்தகைய சம்சயம்கொண்டு இன்ஸ்பெக்டர் அருணகிரி ஆத்திரப்படுகிறாரோ, அத்தகைய எண்ணங்களுக்கு எதிர்மாறாக இருந்தது, அந்தப் பையன் தன் எஜமானியான ராதையைப் பற்றிச் சொன்ன அபிப்பிராயங்கள்.

''உனக்கு என்ன வயதாகிறது?''
''பனிரெண்டு ஆகிறது ஸார்!''
''எத்தனை வருஷமாக நீ இங்கே வேலை செய்கிறாய்?''
''சுமார் இரண்டு வருஷங்களாக!''
''எஜமானியும் எஜமானனும் உன்னைத் திட்டுவதுண்டா?''

''வீண் பழி சொல்லக்கூடாது.எஜமானியம்மா என்னைக்குழந்தைபோலச் சிரிக்கச் சிரிக்கத்தான் வேலை ஏவும். ஆனா எஜமானர் இருக்கிறாரே, சந்தோஷமாய்ப் பேசிக்கிட்டே இருப்பாரு. பட்டுன்னு பாம்பாச் சீறுவாரு. இந்த நிமிஷம் இருக்கிற குணம் அடுத்த நிமிஷத்திலே இருக்காதுங்க.''

''அடிக்கடி அவங்க அம்மாளோட சண்டைபோடுவாங்களா?''

''அம்மான்னா உசிருங்க அவருக்கு. ஆனா இரண்டு மாதமாத்தான் ஏதோ கசமுசன்னு பேச்சு பலக்குது. அதுவும் அம்மா பெங்களூர் புறப்படுவதற்கு முன்னால் முழுதும் அழுதுட்டே இருந்துச்சுங்க.''

"ஏன்னு ஏதாவது கேட்டியா?"

"கேட்டேனுங்க. உன் வேலையைப் பார்த்துக்கிட்டுப்போன்னு சொல்லிடுச்சு."

"அப்பறம் ஊருக்குப் போகும்போதுகூட அழுதுக்கிட்டே தான் போனாங்களா?"

"அழலீங்க. ஆனு அவங்க மூஞ்சிலே சந்தோஷமில்லீங்க வழி அனுப்ப எஜமான் ஸ்டேஷனுக்குக்கூடப் போகலே."

"மில் மானேஜர் கண்ணன் இந்தப் பங்களாவுக்கு வருவது உண்டா?"

"உண்டுங்க!"

"அடிக்கடி வருவாரோ?"

"மாசம் நாலைந்து தரம் வருவாரு."

"அம்மாவைப் பார்க்கலாம்னு?"

"எஜமானைத் தேடி வருவாரு."

"எஜமான் வீட்டிலே இல்லாட்டி அம்மாவோட பேசுவாரா?"

"பேசி நான் பார்த்ததில்லீங்க."

"நீ இல்லாத சமயத்திலே பேசியிருக்கலாமல்லவா?"

"அது எப்படிங்க! இந்த வீட்டிலே எனக்கு வேறு வேலையே கிடையாதுங்க, அம்மா கூப்பிட்ட குரலுக்கு ஏன்னு கேட்கிறது தான் என்வேலே ஐயா இல்லாமெனிச்சு அம்மா வெளியே போச்சுன்னு நானும்கூடப் போயாகணுமுங்க."

"அப்படி வெளியிலே எங்கே போவாங்க?"

"சினிமா; இல்லாட்டி உறவு முறை வீட்டுங்களுக்குத்தான் போவாங்க."

"ஐயா ஊரிலே இல்லாட்டாக்கூட அம்மா வெளியே போவ துண்டா?"

"அது மாத்திரம் கிடையாதுங்க, ஐயா இருந்தா வெளியிலே வாசல்லே போவாங்க. எஜமான் ஊரிலே இல்லாட்டி படி இறங் காதுங்க."

"ஏன் தம்பி! உன் எஜமானன் இல்லாத சமயத்திலே அந்த மானேஜர் வந்து ஏதாவது விசாரிச்சா, அம்மாதான் பதில் சொல்லி அனுப்புமா?"

"அன்னிய மனுஷர் யாராவது புதுசா இருந்தா என்ன ஏதுன்னு அவுங்களே வந்து விசாரிப்பாங்க. ஆனா மானேஜரய்யா வந்தா, என்ன விஷயம்னு என்னைக் கேட்டுட்டு வரச்சொல்லி, என் மூலமாகவே அம்மா பதில் சொல்லி அனுப்பி விடுவாங்க"

"அம்மா ஊருக்குக் கடிதம் எழுதினா நீதான் தபால் பெட்டியிலே கொண்டு போடுவாயா?"

"அம்மாகடிதம் எழுதிஅப்படியாருக்குமேபோட்டதில்லீங்க."

"தபாலாபீஸில் கவர், கார்டு ஏதாவது நீ வாங்கிக் கொடுத்தது கூட இல்லையா?"

"இல்லவேயில்லீங்க அப்படி எதனாச்சும் அம்மா ஊருக்கு லெட்டர் எழுதினால்கூட,ஐயாகிட்ட கொடுத்துத்தான் தபாலிலே போடச் சொல்லுவாங்க"

"எஜமானன் செத்த அன்று நீ பங்களாவிலே தானே, இருந்தே?"

"ஆமாமுங்க"

"வேறே யார் இருந்தா?"

"கணக்கய்யா மாத்திரம் தான்."

"கண்ணன்?"

"அப்புறம் தான் வந்தார்!"

"கண்ணன் வந்ததும் எஜமான் சுமுகமாகத்தான் அவரோடு பேசினாரா?"

"அவங்க பேசிக்கொண்ட போது நானும் கணக்கரும் வெளி வராந்தாவிலே நின்று கொண்டிருந்தோமுங்க. இடையிலே ஐயாவும் மானேஜரும் கோபமாகப் பேசிக்கிட்டது கேட்டது. அப்புறம் பேச்சு எதுவும் வரலேங்க. கொஞ்ச நேரம் கழித்துமானேஜர் மாத்திரம் வெளியே வந்து காரை எடுத்துக்கிட்டு, அவசரமாகப் போனாருங்க. போகும்போது கணக்கய்யாவைக் கூப்பிட்டு என்னமோ சொன்னாரு. அது என் காதிலே விழலீங்க."

"கண்ணன் போனபிறகு எஜமானனைப் பார்த்தாயா?"

"கூப்பிட்டாத்தான் போவேன். அவர் கூப்பிடலீங்க. அதனாலே அவரைப் பார்க்கவில்லை."

"பின்னே எப்போதுதான் பார்த்தே?"

"அரை மணி நேரம் கழித்தும் ஐயா வெளியிலே வராததுனாலே, கணக்கரு ஜன்னல் வழியா எட்டிப் பார்த்தார். என்ன பார்த்தாரோ என்னவோ, இருவரும் பேசிக்கிட்டு இருந்த அறைக்குள்ளே ஓடினாரு. திரும்ப பதட்டத்தோடு வந்தாருங்க ஐயாவை யாரோ கொலை செய்து விட்டாங்கன்னு கத்திக்கொண்டே, ஹாலுக்கு ஓடி போலீசுக்கு டெலிபோன் செய்தாரு."

"கண்ணன் பங்களாவை விட்டுப் போகும்போது அவரை நன்ருகப் பார்த்தாயா? அவர் போட்டிருந்த சட்டை, துணிகளில் ஏதாவது ரத்தக்கறை இருந்ததா தம்பி?"

"நான் சரியாகக் கவனிக்க வில்லீங்க."

"அம்மா அன்றையதினம் ஊரிலிருந்துவரும் விஷயம்உனக்குத் தெரியுமா?"

"தெரியாதுங்க."

"வருவாங்கன்னு ஐயா முதல் நாள் சொல்லவேயில்லையா?"

"அப்படி ஏதும் சொல்லலீங்க. அம்மா வரதா இருந்தா ஸ்டேஷனுக்குக் கார் கொண்டு போகச் சொல்லி டிரைவருக்காவது சொல்லியிருப்பார். அப்படியும் ஏதும் சொல்லலீங்க."

"கணக்கருகிட்டே அம்மா நல்லாப் பழகிப் பேசுமா?"

"வந்த காரியம் வரைக்கும் பேசி அனுப்பிச்சுடும்."

"அம்மாவிடம்கணக்கருமரியாதையாத்தான்நடந்துப்பாரா?"

"அம்மா பேரிலே யாருக்கும் விரோதம் கிடையாதுங்க கஷ்டம்னு யாரு வந்து சொன்னாலும், ஐயா கிட்டே சிபாரிசு செய்து நல்லதுதான் செய்யும். அதனாலே மில்லிலே இருக்கிற அத்தனை ஆளுங்களும் அம்மான்னு ரொம்ப மரியாதை கொடுப்பாங்க!"

பையனிடமிருந்து வேறு ஏதும் புதிய விஷயங்கள் கிரகிக்க முடியவில்லை. அவனுக்குத் தெரிந்ததும் வேறு எதுவுமில்லை, நடை தள்ளாட வீடு நேக்கிப் புறபபட்டார் ஆர்தர்.

அத்தியாயம் : 5

---

## பழங்கதையும் பாவமன்னிப்பும் !

நிம்மதியற்றுக் குழம்பிப்போய், மனத் துன்பம் நிறைந்து வீட்டிலே நுழைந்த ஆர்தர், கட்டிலில் போய்ப் படுத்துக் கொண்டார். வீடு நுழைந்து விட்டால் இரித்த முகத்துடன் 'ரோஸி!'

என்று செல்லமாகக் கூப்பிட்டுக் கொண்டே, தலையில் இருக்கும் 'ஹாட்'டை மேஜைமீது எறிந்துவிட்டு, அவளது ரோஜாக் கன்னத்திலே ஒரு கிள்ளுக்கிள்ளி 'அப்பாடா!' என்று ஈஸிசேரில் சாய்ந்தபடி இளைப்பாறுகிற ஜோர் அன்று இல்லை, அப்படிக் களைப்பாறுகிற புருஷன் காலடியிலே உட்கார்ந்து கொண்டு, அவர் கால் பூட்ஸைக் கழற்றி ஹோல்டோவரில் சொருகிவிட்டு, உள்ளே போய்ச் சுடச்சுட தேத் தண்ணீர் கொண்டுவந்து ஆசையோடு கொடுக்கும் பரிவுப் பாஷைகளும் அன்று பறந்தோடி விட்டதை ரோஸி கண்டாள். அவரது முக மாறுதல்களுக்குக் காரணம் மேலதிகாரியின் கடுஞ்சொற்களாக இருக்கமுடியாது என்பதை அவள் நன்கு அறிவாள். ஏனென்றால் சப் இன்ஸ் பெக்டர் ஆர்தரின் ஆற்றலும், திறமையும் கடமையும் எத்தகையதாக இருக்கும் என்பதை அவள் நன்கு உணர்ந்தவள். கணவரின் மனம் துணிக்குற வேண்டுமானால் ஒரே ஒரு தவறைத் தவிர வேறு எதுவும் இருக்கமுடியாது தனது கடமையில் தர்மம் தலை குனியும் படியான தவறுதல்களைச் செய்துவிட்டு, அது தன் மனதிற்குத் தெரிந்ததும் தன்னைத்தானே நொந்து கொள்ளும் சுபாவம் கொண்டவர் என்பதைப் பல தடவைகள் பார்த்திருக்கிறாள் அது போன்று இன்றும் தன் கணவர் எந்த நிரபராதியை இருட்டறையில் தள்ளிவிட்டாரோ! அதை நினைத்து வேதனைப்படும் அவரைத் தொந்தரவு செய்யக்கூடாது என்று ஆர்தரைத் தனித்து விட்டு விட்டு அப்பால் நகர்ந்தாள். புருஷன் வருந்திக் கொண்டிருக்கும் போது ஆசை மனைவியின் மனம் குதூகலத்தில் ஆழ்ந்துவிடுமா?

சிலுவையில் அறையப்பட்ட ஏசுநாதர் படம் மெழுகுவர்த்தி தீபத்தில் கருணைக் கதிர்களைப் பொழிந்து கொண்டிருந்தது அதன் முன்னே மண்டியிட்டாள் ரோஸ்லின்.

"பரமண்டலத்தில் இருக்கும் பரம பிதாவே, உன் காலடியில் வீழ்ந்து கண்ணீர் உகுக்கும் இந்த ஏழைக்காக மனமிரங்கி, என் கணவர் எந்தவிதப் பாவம் செய்திருந்தாலும் மன்னித்துக் கருணை காட்டுவீராக தவறு செய்யாதவர் என் அன்பர் செய்திருந்தாலும் மனதறிந்து செய்திருக்கமாட்டார். 'மனிதர்கள் தாங்கள் செய்வது பாவம் என்பதை அறியாமலேயே பாவம் செய்துவிடுகிறார்கள். அதற்காக அவர்களை மன்னித்துவிடு என்ற உங்கள் தேவவாக்கை மறுமுறையும் சொல்லி எங்களைச் சாந்தியடையச் செய்வீர்களாக. 'எங்கள் உடல்தான் இரண்டு, உயிர் மட்டிலும் ஒன்று' என்ற எண்ணத்தில் உங்கள் திருவாக்கைச் சொல்லி என் புருஷனுக்காக நான் பாவ மன்னிப்புக் கோருகிறேன். எங்களை மன்னித்து ரக்ஷியுங்கள், பிரபுவே!" என்று உருகினாள் அவள் கண்களில் நீர் கசிந்தது மெய்மறந்து அப்படியே மண்டியிட்டுக் கிடந்தவள் காதில் 'ஏன் ரோஸி, பாவ மன்னிப்புக் கேட்பதன் மூலம் தான் இழைத்துவிட்ட அநீதி தீர்ந்து விட்டதாக ஆகாது என்று அந்தராத்மா அறை கூவுவதுபோல இருந்தது.

"ஆமாம்" என்று அவள் வாய் முணுமுணுக்க ஞாபகம் என்ற பொல்லாத சாகரத்தில் சிந்தனை அவளை மூழ்க வைத்தது. அந்த நினைப்புத் தவிப்பு அவளுக்கு அவளது பழங் கதையை நினைவுப் படுத்தியது.

பதினாறு வயதில் தாய் தந்தையை இழந்து தனியாய் அனாதை போல விடப்பட்டு, பால்மணம் மாறாத தன் தம்பியோடு வறுமை வாழ்க்கையிலே உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ரோஸ்லின் வாழ்ந்த நாட்கள் அவை. அவளது தந்தை தனக்குப் பின்னால் விட்டுப்போன ஒரே ஆஸ்தியான தையல் மிஷின்தான் அந்த இரு ஜீவன்களின் உயிரையும் உடலிலிருந்து பிரித்துவிடாமல் காப் பாற்றி வந்தது. விடிந்தால் வீடு வீடாகப் போவாள். அலைந்து திரிவாள். ஏதாவது இரண்டொரு குழந்தை சட்டையோ, ரவிக் கையோ தைக்கக் கொடுத்து அன்றைய அன்ன தாதாவாக யாராவது முன் வருவார்கள் வலியப் போய்க் கேட்கும் வேலை யல்லவா? குழந்தைகள் சட்டையானால் இரண்டணாக் கூலியும் ரவிக்கையானால் மூன்றணாக் கூலியும்தான் கிடைக்கும். ஏதோ வயிற்றை அறக் கின்னுகிற பசியைக் கொஞ்சமாவது தணித்துக் கொள்ளலாமே என்று அந்த வேலையை வாங்கிவருவாள். பகலெல் லாம் வேலை சேர்த்து வருவதும் இரவு முழுவதும் கண் விழித்துத் தைப்பதுமாய் நாட்கள் போய்க் கொண்டிருந்தன: ஒவ்வோர் நாள் பட்டினி கிடக்கும் ஸ்திதிகூட ஏற்படும்; அவள் பட்டினி கிடந்து விடலாம். ஆனால் விரல் சூப்பக்கூடத் தெரியாத அந்தச் சிறுவனின் கதி?

அப்படிப்பட்ட சமயங்களிலெல்லாம் அண்டை வீட்டுக் காரர்கள் ஓரளவு அனுசரணையாக இருந்தார்கள். அதில் குறிப் பாக வின்சென்டைச் சொல்லலாம். ஐஸ் பாக்டரி ஒன்றில் ஐம்பது ரூபாய் சம்பாதிப்பவன். இளம் வயது. ரோஸ்லினிடம் சகஜமாகப் பழகி வந்தான். நல்ல குணசாலி என்று அவனோடு களங்கமற்று அவளும் பழகி வந்தாள் குறிப்பறிந்து முகமறிந்து ரோஸ்லின் கஷ்டப்படும் போதெல்லாம் வின்செண்ட் ஒன்றோ இரண்டோ கைமாற்றாகக் கொடுத்து உதவுவான். விகல்பமில்லா மல் அவளும் அந்த உதவியைப் பெற்றுக் கொண்டிருந்தாள்.

மனிதர்களின் மனப்போக்கை யாரால் அறிய முடிகிறது! வின்சென்டின் பரோபகாரப் புத்தி மனிதத் தன்மையினின்றும் எழுந்தது அல்ல. பருவ விகாரத்தினின்றும் முளைத்த விபரீதத் தந்திரங்கள் என்பதை அன்றைய நிகழ்ச்சியின் மூலம்தான் ரோஸ்லி யால் அறிய முடிந்தது.

ஓர் இரவு—

'என்ன? ஏது?' என்று அடிக்கடி வந்து விசாரித்துப்போவது போல அன்றும் அவள் வீட்டிற்கு வந்தான் வின்செண்ட். அவன் மனதிலே உந்திக் கொண்டிருந்த விகாரம் அன்று விஸ்வரூபம் எடுத்துவிட்டது போலிருக்கிறது. பேச்சோடு பேச்சாய் விரகதா

பத்தில் ஏதோ உளறிக்கொண்டு தன்னை நெருங்குவதைக் கண்ட ரோஸ்லின் அவன் கன்னத்தில் ஓங்கி அறைந்துவிட்டாள். அடிபட்ட அவன் மேலும் அமர்க்களப்படுத்த வழி இல்லாமல் 'நன்றிகெட்ட நாய்ஜன்மம்' என்று அவளைத் திட்டிக்கொண்டே வெளியேறினன்.

ரோஸ்லினுக்கு அன்றிரவெல்லாம் தூக்கமில்லை. வின்செண்டின் பயம் அவளை அலைக்கழித்தது. அடிபட்டு ஓடி விட்ட வின்செண்ட் அடுத்தநாள் எப்படிப் பழி தீர்த்துக் கொள்ளப் போகிருனே என்று நடு நடுங்கினள். இரண்டுநாள் எங்காவது போய் இருந்துவிட்டு வந்தால்தான் தன் பீதியும் நீங்கும்போல் தோன்றவே, கருக்கிருட்டு என்றும் பாராமல், கதவைப் பூட்டிக்கொண்டு தன் சிநேகிதி ஒருத்தியின் வீட்டிற்குப் போய்விட்டாள்

அடுத்தநாள் காலை வின்சென்ட் கண்விழித்து ஜன்னல் வழியே அடுத்த வீட்டைப் பார்த்தபொழுது அது பூட்டி யிருந்தது. ஏமாற்றமடைந்த அவன் ஆசை, மிருக வெறி கொண்டு ரோஸ்லினைப் பழிவாங்கத் திட்டமிட்டது.

அப்பொழுது ஆர்தர் அந்த டிவிஷன் சப்-இன்ஸ்பெக்டர்; அன்று அவர் கைக்கு ஒரு 'புகார்' வந்தது. அது வின்செண்ட்டால் கொடுக்கப்பட்ட மனு. ஆர்தர் அதைத் தன் 'ஏட்'டிடம் கொடுத்து விசாரிக்கச் சொன்னர்.

'திருட்டுப் போய்விட்டது' என்பதான புகார் அது. வின் சென்ட் தன் கைமோதிரத்தை மேஜைமீது வைத்திருந்ததாகவும் அது காணமல் போய்விட்டது என்பதும் தான், அந்தப் புகாரின் சாரம். சந்தேகப்பட்டு அவன் அதில் யாரையும் பேர் குறிப்பிட வில்லை.

'ரிப்போர்ட்டை' ஏட்டையா விசாரித்து வந்து கடைசியில் ஆர்தரிடம் கொடுத்தார். அடுத்த வீட்டில் குடியிருக்கும் ரோஸ்லின் அடிக்கடி வின்செண்ட் வீட்டிற்கு வந்துபோவது உண்டென்றும், சம்பவம் நடந்ததாகச் சொல்லப்படுகிற அந்த தினத்தில் மாலைகூட அவள் அந்த வீட்டிற்கு வந்து போயிருப்ப தாகவும், மறுநாள் காலை அவள் வீட்டைப் பூட்டிக்கொண்டு எங்கோ போய்விட்டதால் அவள்மீதே சந்தேகப்படுவதாகவும் தெரிவித்தான். அவளைத் தேடிப்பிடித்து வரும்படி ஆர்தர் உத்திரவிட்டார்.

இரண்டொரு தினங்கள் சென்று திரும்பி வீடு வந்து சேர்ந்த ரோஸ்லினை எளிதில் கைது செய்து போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு வந்தார் ஏட்டய்யா!

ஆர்தர் அவளை விசாரித்தார். கேள்வி மேல் கேள்வியாக ஆயிரங்கேள்விகளை அடுக்கினர். குறிப்பிட்டமோதிரத்தைத்தான் திருடவில்லையென்றும் தனக்குக் கஷ்டமாயிருந்ததால் அன்று காலை வின்செண்டிடம் ஐந்து ருபாய் கடன் கேட்டதாகவும்

அப்போது கையில் காசு இல்லாத வின்செண்ட் தன்மோதிரத்தைக் கழற்றிக் கொடுத்து அடகு வைத்துக்கொள்ளும்படிக் கூறியதாகவும் அதை ஏற்று மார்வாரிக்கடையில் அடகு வைத்து ஐந்துரூபாய் வாங்கியிருப்பதாகவும் சொன்னாள். இதைக் கேட்ட 'ஏட்' அவள் சொன்ன மார்வாரிக் கடைக்குப் போய் மோதிரத்துடன் சேட்டையும் இழுத்து வந்து ஆர்தர் முன்னிலையில் நிறுத்தினான் அதற்குள்வின்செண்டும்அங்கே வந்து சேர்ந்தான்.

"அந்த மோதிரம் தன்னுடையதுதான்" என்றான் வின்செண்ட். "குட்டி ஜோராகக் கதை கட்டுகிறது!" என்று சிரித்தான் ஏட்டய்யா,

விரல் நகத்தைப் பற்களால் கடித்தபடி வாக்குமூலங்களில் சஞ்சாரம் செய்து கொண்டிருந்த ஆர்தர். எதையோ நினைத்துக் கொண்டவர்போல, "ஏம்மா! சகஜமாகவே வின்செண்ட் அவ்வப்போது பண உதவி செய்து வந்திருப்பதாகக் கூறுகிறாய், உன்னிடம் கருணை காட்டியிருக்கிறார் என்கிறாய். நீ புகழ்ந்து பேசுகிற அந்த வின்செண்ட் மனமொப்பி அந்த மோதிரத்தை உன்னிடம் கொடுத்திருந்தால் இப்படிப் புகார் செய்வாரா? அப்படிப் புகார் செய்யத்தான் ஏதாவது காரணம் சொல்ல முடியுமா?" என்றார்.

ரோஸ்லின் வின்செண்ட் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள். அந்தக் கல்நெஞ்சனை எச்சில் துப்பப் போவதுபோல் அப்பால் நகர்ந்துவிட்டான்.

ஆர்தர் மீண்டும் அவளை விசாரிக்க ஆரம்பித்தார். "எந்நாளும் நீ வீட்டைவிட்டு வெளிச்சென்றது கிடையாதாமே, இந்த மூன்று நாட்களாக நீ வேறு எங்கோ தங்கக் காரணம்? அதுவும் வின்செண்டின் மோதிரம் திருடு போன மறுநாள் காலை முதல் என்றால் திருடு நன்றாக ரூசுப்படுகிறதே!"— ஆர்தர் ரோஸ்லினைக் கடுமையாகப் பார்த்தபடி என்ன பதில் வருகிறது என்று எதிர்நோக்கினார்.

ஒரே வார்த்தை அவள் சொல்லியிருந்தால்—அன்றைய இரவு நடந்தேறிய துராக்கிரகத்தைச் சொல்லி இருந்தால்—அவளது தலைஎழுத்து மாறினாலும் மாறியிருக்கும். அதை அவள் சொல்லவில்லை. சொல்ல விரும்பவும் இல்லை, ஒரு பெண் எதைப்பறிகொடுக்க இருந்ததாகக் காட்டிக்கொள்ள மாட்டாளோ, எதன் மூலம் களங்கமடையச் சகியாளோ, அதை ரோஸ்லின் எப்படிச் சொல்லுவாள்? மானத்தைக் காற்றில் பறக்கவிட மனமற்றவளாய்ப் பதில் ஏதும் சொல்லாமல் இருந்துவிட்டாள் ரோஸ்லின்.

முடிவில் சூழ்நிலை அவளை ஜெயிலுக்கு அனுப்பி வைத்தது!— இல்லை, ஆர்தர் அவளை அனுப்பி வைத்தார். ஒரு மாதச் சிறைத் தண்டனை பச்சைப் பாலகனை நடுத்தெருவில் திரிந்து நலியவிட்டு அவள் ஒரு வழியாய்க் காராக்ரகம் போய்ச் சேர்ந்தாள் தன் கடமையைத் தீர்த்துவிட்டவரைப்போல, கோர்ட்டை விட்டு

ஸ்டேஷன் திரும்பினார் ஆர்தர். கோர்ட்டுக்கு வெளியே பச்சைப் பாலகனான அவளது தம்பி கண்ணைக் கசக்கிக்கொண்டு கதறுவது கூட அவர் காதில் விழவில்லை,

ரோஸ்லின் சிறைக்குப் போய் ஐந்தாறு தினங்கள் இருக்கும். வேறு ஏதோ திருட்டு விஷயமாய்த் தன் எல்லையில் உள்ள எல்லா மார்வாரிக்கடைகளையும், அவர்களது குதுவை ரசீதுகளையும் சோதித்துக் கொண்டு வந்த ஆர்தர், ரோஸ்லின் மோதிரத்தை அடகு பிடித்த சேட் கடைக்கும் வந்தார். ரசீது களைப் புரட்டிக்கொண்டே வந்த ஆர்தர், ஒரு ரசிதைப் பார்த் ததும் நிலை கலங்கி விட்டார். தேதியைப் பார்த்தார். ஒரு மாதத் திற்கு முந்தியது. அதில் ஒரு குறிப்பு இருந்தது·

நீலக்கல் வைத்த மோதிரம். எடை அரை வராகன். மதிப்பு ரூபாய் பதினைந்து அடகு வைத்தது ஏழு திருப் பிக்கொண்டது ஒரு வாரத்தில். வைத்தவர் பெயர் ரோஸ்லின்.

''சேட்'' என்றார் ஆர்தர் பதறிப்போய். என்னமோ ஏதோ என்று நடுங்கிவிட்டான் மார்வாரி.

''மோதிரத் திருட்டுக் கேஸில் சிறைக்குப் போயிருக்கிறாளே,' இவளா அது?''—குறிப்பிட்ட ரசீதை வாங்கிப் பார்த்த சேட் ஆமாம் என்று தலை அசைத்தான்.

ஆர்தரின் தலை சுழன்றது.

"அந்தப் பெண்ணை எனக்கு நன்றாகத் தெரியும்'ஸார்: பல தரம் இதே மோதிரத்தைக் கொண்டுவந்து அடகு வைத்துத் திருப்பியும் இருக்கிறாள்!'' என்றான் மார்வாரி.

ஆர்தரின் முகம் 'குப்'பென்று வியர்த்தது. ''இதை ஏன் முன்பே நீர் என்னிடம் சொல்லவில்லை?'' என்று எகிறிக் குதித் தார் ஆர்தர். அதற்குமேல் அவரால் அங்கு நிற்க முடியவில்லை. சைக்கிளை எடுத்துக் கொண்டு ஸ்டேஷனை நோக்கிப் பறந்தார், எதிர்ப்பட்டவர்களுக்கெல்லாம் அர்ச்சனை டைரி எழுதிவிட்டு ஸ்டேஷனுக்குப் போனார், ஹாட்டைக் கழற்ற மறந்தார். பூட்ஸைக் கழற்ற மறந்தார். ஏசுவின் திருப்பாதத்தைக் கண்ணில் ஒற்றிக்கொண்டு மண்டியிட்டுப் பாவ மன்னிப்புக் கோரிக் குமுறி அழுதார்.

ரோஸ்லின் பற்றிய உண்மை அவருக்கு நன்கு புரிந்து விட்டது. நிரபராதி காராக்ரகம் போய்விட்டாள். குற்றம், ஏதும் செய்தறியேனே' என்று அந்தப் பேதை மனம் சிறைக்குள் புழுங்கிச் செத்துக் கொண்டிருக்கும்!

பொய்ப்புகார் கொடுத்ததாக வின்சென்ட் மீது கேஸ் போட்டு அவனை உள்ளே தள்ளிப் பழிக்குப்பழி வாங்கக் கூட வழியில்லையே என்று ஆர்தர் குமுறினார். சட்டமும், நீதியும், கடமையும் குறுக்கே நின்றன; சாக்ஷியத்தின் பரிமாண எடையில் பிறப்பதே நியாயமெனக் கொண்டு தீர்ப்பும் சொல்லியாகி

விட்டது; குற்றவாளியும் தண்டனை அனுபவிக்கிறாள். இப்பொழுது குறிப்பிட்டபுகார் பொய்யாகக் கொடுக்கப்பட்டது என்று வழக்காட ஆரம்பித்தால் சட்டம் செத்து விடும்; தர்மம் வெட்கித் தலை குனிந்து விடும்; ஆர்தர் உடுப்புக்களைக் களைந் தெறிந்துவிட்டு வீட்டுக்குப் போய்விட வேண்டியதுதான்!

நேர்மைக்காகவே பிராணனை விடுகிற சப்-இன்ஸ்பெக்டர் ஆர்தருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது போலாகி விட்டது. ஒரு மாதம் லீவு போட்டுவிட்டார். ரோஸ்லின் தம்பி எந்தத் தெருவிலே பிச்சை எடுக்கிறானோ என்று தேடத் தலைப்பட்டார். ஆனால் அவன் பசியால் எந்த மூலையில் சுருண்டு துவண்டு கிடக்கிறான் என்பதை அவராலே எப்படிக் கண்டு பிடிக்க முடியப்போகிறது!

ஒரு மாதம் முடிந்தது. ரோஸ்லினுக்கும் விடிந்தது. ஜெயில் வாசலைத்தாண்டி அவள் வெளியே வந்தபோது எதிரே நின்று கொண்டிருந்தவனைக் கண்டு அப்படியே திகைத்து விட்டாள். "அக்கா!" என்று ஓடிவந்து அவளைச் சேர்த்துக் கட்டிப் பிடித்துக் கொண்டான் அவளது தம்பி. அவளது கண்களிலிருந்து வழிந்த நீர்த்துளிகள் அந்தப் பாலகனின் உச்சியில் விழுந்து அவன் மனதைக் குளிரச் செய்தது.

அதே சமயம் வேகமாக வந்த டாக்ஸி ஒன்று ரோஸ்லின் அருகே வந்து நின்றது. ஆவல் துடிப்பால் பரபரப்போடு ஒருவர் வெளியே குதித்தார். அந்த மனிதரைப் பார்த்துப் பயந்து ஒதுங்கி நின்றாள் ரோஸி.

வந்தது சப்-இன்ஸ்பெக்டர் ஆர்தர்தான். வேறு யாருமில்லை! "ரோஸி!" என்று அவளது இரு கைகளையும் பிடித்துக் கொண்டு தன் கைக்குள் மூடிக் கொண்டபடி, என்னை மன்னித்துவிடு ரோஸ் லின்!" என்றார். அவர் கண்களில் நீர் ததும்பியிருந்தது. ஏறிட்டு அவர் முகத்தைப் பார்த்தாள் "கர்த்தர் மன்னித்து விட்டார்" என்று கனிந்து கூறினாள் அதுவரை தலை கவிழ்ந்திருந்த ரோஸ் லின்.

"கர்த்தரின் மன்னிப்புப் போதாது, ரோஸ்லின், அதற்கு நான் தகுந்த பிராயச் சித்தம் செய்து கொண்டாக வேண்டும் நான் அப்போது, உன் வாழ்வைச் சிறையில் தள்ளிக் கெடுத்தேன் இப்போது நானே மனமறிந்து உன் வாழ்வைச் சிறப்படையச் செய்ய வேண்டும். வா ரோஸி!" என்று அவள் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு டாக்ஸியில் ஏறினார்.

"அக்கா! மறுபடியும் போலீஸ் ஸ்டேஷனுக்கா?" என்று சோகத்தோடு கேட்டான் சிறுவன்.

ஆர்தர் சிரித்துக் கொண்டார்,

கார் வீடு நோக்கிப் பறந்தது. உள்ளே நுழைந்ததும் ஆர்தர் ஸ்நான அறைக்குள் ரோஸ்லினை அனுப்பினார். வெளியே அவள் வந்தபோது அவளுக்காகப் புது ஆடைகள் காத்திருந்தன. மீண்டும் காரில் ஏறிக்கொண்டனர்.

மாதா கோவில் வந்தது. பாதிரியார் வேதம் ஓதி அன்யோன்யத் தம்பதிகளாக அவர்கள் வாழ ஆசீர்வதித்தார். எல்லாம் கனவு போல இருந்தது ரோஸ்லினுக்கு. தன் தலையில் பாரம் போல் அழுத்திக் கொண்டிருந்த சுமையை யாரோ இறக்கி விட்டது போல ஆர்தரும் குதூகலம் கொண்டார்.

தனது இந்தப் பழங்கதையை நினைவுபடுத்திச் சிந்தனையில் மூழ்கியிருந்த ரோஸ்லின் ஏதோ ஆவலில் நடு ஹாலுக்குள் ஓடோடி வந்தவள், அங்கு உட்கார்ந்திருந்தவரைக் கண்டதும் அப்படியே அசந்து நின்றுள்.

"ரோஸ்! இப்படி வாம்மா!" என்று அழைத்தது ஒரு குரல். தயங்கித் தயங்கி அவரை நெருங்கினாள் ரோஸ்லின்.

அப்படிக் கூப்பிட்டது வேறு யாருமில்லை! இன்ஸ்பெக்டர் அருணகிரி.

நடு ஹாலின் ஈஸிசேரில் அருணகிரி உல்லாசமாக உட்கார்ந்திருக்க, சப்-இன்ஸ்பெக்டர் ஆர்தர் சுவற்றிலே சாய்ந்தபடி தலைகுனிந்து நின்று கொண்டிருப்பதைக் கண்டாள் அவள்.

"இப்படி அருகில் வா, ரோஸ். உன் புருஷன் ஏன் இப்படி ஏங்கிப் போய் இருக்கிறார் என்று தவிக்கிறாய் அல்லவா?" என்றார் இன்ஸ்பெக்டர்.

ஆமாம் என்பதுபோலத் தலை அசைத்துக் கொண்டே நெருங்கி வந்தாள் அவள்.

"ஆர்தருக்கு இத்தனை நாள் இல்லாத இளமை இப்பொழுதுதான் திரும்பியிருக்கிறது!" என்று எகத்தாளமாகச் சிரித்த அருணகிரியை, ஒன்றும் புரியாதவளாய் ரோஸி பார்த்துக் கொண்டிருந்தாள்.

"பாழாய்ப் போன பருவம் கிளப்பிவிடுகிற ஆசையால் தன் கடமையைக்கூட மறந்துவிட்டான் உன் புருஷன். உண்டா இல்லையா என்று நீயே கேட்டுப்பார்!" என்றார்.

கூடார்த்தமாக வெளிவந்த அருணகிரியின் பேச்சிலே எதுவும் தெரிந்து கொள்ள முடியாத ரோஸி, தன் கணவன் முகத்தையே உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். ரோஸியைக் கண்ணெடுத்துப் பார்க்கவும் தயங்கியவனாய் நின்று கொண்டிருந்த ஆர்தரின் கவனத்தை இன்ஸ்பெக்டர் தன் பக்கம் இழுத்தார். "ஆர்தர்! கண்ணன் ராதைக்கு எழுதிய கடிதத்தை நீ ஏன் மறைத்து வைத்திருந்தாய்? சமயத்தில் நான் அங்கு வந்திராவிட்டால் அதை அவள் அன்புக்காகக் கிழித்துக்கூட எறிந்திருப்பாய்! அப்படித்தானே?" என்றார்.

இன்ஸ்பெக்டருக்கு எந்த விதமான பதில் சொல்வது என்று விழித்தார் ஆர்தர். அக்கடிதம் தன் கையில் சிக்கிய போது யாருக்கும் தெரியாமல் மறைத்து வைத்துக் கொண்டதை எத்குத் தப்பாக அவரிடம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டு, இதன் மூலம் ஏமாந்த சோணகிரியாகி விட்டோமே என்பதை நினைக்க நினைக்க அவருக்கு வியப்பாக இருந்தது.

"பார்த்தாயா, ரோஸி உன் புருஷனின் தயக்கத்தை! நீயே கேளு. கொலைக் கேஸிலே ஒரு ஆண்பிள்ளை அகப்பட்டால் தூக்கு மரத்திலே அவனைத் தொங்கவிடும் வரையில் குதியாய்க் குதிப்பான். இந்த வழக்கிலே ஒரு பெண்ணும் சிக்கி விட்டாளல்லவா, பச்சாதாபம் வந்துவிட்டது உன் புருஷனுக்கு. அது நிஜமான இரக்கம் என்று நினைக்கிறாயா? அப்படியும் இல்லை. அவள் உன்னைவிட வயது குறைவு, பெரும் பணக்காரி, அவளைக் காப்பாற்றி விட்டால் இந்த உத்தியோகத்துக்குஒரு முழுக்குப்போட்டு விட்டு, ஹாயாக மில்முதலாளியாக இருக்கலாம் என்ற நினைப்புப் போலிருக்கிறது. நான் ராதையை பார்க்கப் போனபோது அவ்வளவு குழைவோடு பேசிக் கொண்டிருந்தான் ஆர்தர். விளையாட்டுக்குச் சொல்லவில்லை ரோஸி! நீ நேரில் பார்த்திருந்தால் 'சீ! இவர் இவர் ஒரு புருஷனா?' என்று நீயே வெறுத்து வந்திருப்பாய். அவளோடு என்ன கொஞ்சல், என்ன ஆறுதல், உண்டா இல்லையா, என்று நீயே கேட்டுப்பார், ரோஸி" என்றார் அருணகிரி.

"என்னங்க! அவர் சொல்வது நிஜமா என்ன?" என்றாள் ரோஸி, தன் கணவரிடம்.

ஆர்தர் அப்போதும் எதுவும் சொல்லவில்லை.

"நான் கண்ணால் பார்த்தேன் ரோஸி. உட்கார்ந்து பேசும் போதுஅவளுக்கும் ஆர்தருக்கும்இடையே ஒரு சாண் கூட இடைவெளிகிடையாது. ஒருநாளில்சிநேகிதம்எவ்வளவு வலுத்திருக்கிறது என்பதைக் காண நானே ஆச்சரியப்பட்டு விட்டேன்! அழகான பெண்களைக் கண்டால் ஆண்களுக்கு அசடு தட்டுவது சகஜம் தான்! அதற்காக உத்தியோகத்துக்குக் கேடு விளைவிப்பது போன்ற காரியத்திலா ஈடுபடுவது?" என்றார் அருணகிரி.

அதுவரை வாய்திறவா மௌனியாய் நின்று கொண்டிருந்த ஆர்தர். "என் கடமைக்கோ, உங்கள் வழக்கிற்கோ என்ன கேடு விளைவித்து விட்டேன்?" என்றார்.

"சொல்ல வேறு வேண்டுமா? அந்தக் கடிதத்தை ஏன் என்னிடம் மறைத்தாய், அதைச் சொல் முதலில்."

"அதுபற்றி ராதையிடம் விசாரித்து, அதன்பிறகு உங்களிடம் கொடுக்கலாம் என்றிருந்தேன்."

"அதாவது, அந்தக் கடிதம் அவளுக்குப் பாதகம் விளைவிப்பதாக இருந்தால் கிழித்தெறிந்து விடுவது; அல்லது சாதகமாக உபயோகப் படுமேயானால் என்னிடம் கொடுப்பது என்று இருந்தாயாக்கும். அப்படித்தானே?"

"அது உங்கள் யூகம்!"

"என் யூகம் எப்போதும் சோடை போகாது! கடிதத்தை வைத்துக் கொண்டு அவளிடம் விசாரித்தாயே, என்ன பலன் அதிலிருந்து உனக்குக் கிடைத்து விட்டது?"

சொல்வதற்கு ஒன்றுமில்லாததால் ஆர்தர் 'கம்'மென்று இருந்தார்.

"அவள் கண்ணனுக்கு எழுதியிருந்த கடிதத்தை நீ பார்த்தாயல்லவா? அதைப்பற்றிக்கூட நீ கேட்டிருப்பாயே. அதற்கு அவள் என்ன சொல்லுகிறாள்?" என்றார் அருணகிரி.

"அதுபற்றிக் கேட்பதற்குள் நீங்கள் வந்து விட்டீர்கள்."

"அது உனக்குப் பெரிய இடைஞ்சலாகப் போய் விட்டது! ஆர்தர். மறுபடியும் உனக்குச் சொல்லுகிறேன். நீ அந்தக் கடிதத்தை மூடி மறைத்தது தவறுதான். அது என்னை உதாசீனப் படுத்துவது போலவும், எனக்கே நீ போக்குக் காட்டுவது போலவும் தான் ஆகிறது. அளவு கடந்து வைத்திருந்த நம்பிக்கையை நீ நலிவடையச் செய்து விட்டாய். நீ செய்து தவறை இப்பொழுதாவது உணர்கிறாயா;" என்றார் அருணகிரி.

ஆர்தரின் மனதிற்குத் தவறாகவே பட்டது. தன் மனைவிக்கு முன்னால் வாய் விட்டுச் சொல்ல வெட்க முறுவதை அருணகிரி கண்டு கொண்டார். அவருக்குள்ளே அவருக்கு ஒரு திருப்தி.

சிறிது நேரம் மௌனம் கூத்தாடியது. அகப்பட்டு விழிக்கும் ஆர்தரைப் பார்த்தபோது ரோஸிக்கு 'ஐயோ பாவம்' என்று தோன்றிவிட்டதோ என்னவோ? "வேண்டுமென்று செய்திருக்க மாட்டார். ஏதோ அசட்டுத்தனம். அவர் பதில் ஒன்றும் பேசாமல் இருப்பதிலிருந்தே தவறு என்று அவர் மனதிற்கும் படுகிறது என்பது தெரியவில்லையா?" என்று தன் புருஷனுக்குப் பரிந்து பேசினாள் ரோஸ்லின்.

"ஆர்தர்!" என்றார் இன்ஸ்பெக்டர். இப்போது அவரது குரலிலே ஓர் இனிமை இருந்தது. கனிவு ததும்பி வெளிவந்தது "நீ நல்ல புகழுடன் இந்தப் போலீஸ் இலாகாவில் விளங்கவேண்டும் என்பதுதான் என் ஆசை. எனது இந்த இருபத்தைந்து வருஷ அனுபவத்தில் உனக்குக் கொடுத்திருப்பது போன்ற சலுகை என்

கீழ் இது வரை வேலை செய்த வேறு எந்த சப்-இன்ஸ்பெக்டருக்கும் கொடுத்ததில்லை· ஏன் அப்படி உன்மேல் எனக்கு அவ்வளவு வாஞ்சை என்று கேட்கிறாயா?

"சட்டத்தையும் நியாயத்தையும் காப்பாற்றும் கடமையை ஏற்றவனுக்கு மனோதைர்யமும் நிர்தாக்ஷிண்யமும் இருந்தால் போதும் என்று நம்பிக்கை கொண்டவனல்ல நான்! அவைகளைப் பரிபூரணமாக அப்பழுக்கின்றிப் பாதுகாக்க வேண்டுமானால் அதோடு கருணை காட்டும் மனதும் தெய்வ நம்பிக்கையும் வேண்டும். உன்னிடம் நிரம்பி யிருக்கும் அந்த நான்கு குணங்களும் உன்னை என்பால் இழுத்துக்கொண்டது. உனக்கு உலக அனுபவம் போதாது· இல்லாவிட்டால் உன்னைத் தேடி நான் இங்கு வந்திருப்பேனா?"

அருணகிரி சொல்லிவந்த ஒவ்வொரு வார்த்தையையும் ஆர்தர் ஊன்றிக் கவனித்தாரோ என்னவோ· ரோஸி மிகக் கவனத்தோடு கேட்டாள்.

"இப்பொழுது நீங்கள் என்னை என்ன செய்யச் சொல்லுகிறீர்கள்? ' என்றார் ஆர்தர் மனம் சலித்தவர் போல.

"என்னைக் கேட்டு என்ன பிரயோஜனம்? உன் மனச்சாக்ஷியைத்தான் நீ கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும்· ஏதோஒருவிதத்தில் ராதையின் மீது உனக்கு ஒரு பரிவு ஏற்பட்டுவிட்டது அத்தகைய பரிவு உன்னை விட்டுவிலகாத வரையில் ராதைக்கு உன்னாலான வரையிலும் உதவி செய்து தப்புவிக்கச் செய்யவே நீ முயற்சிப்பாய் என்பது என் எண்ணம்· இப்படி ஒரு முடிவுக்கு நான் வந்துவிட்டதற்காக மிகவும் வருந்துகிறேன். ஆர்தர், போய் வரட்டுமா?" என்று எழுந்தார் அருணகிரி.

கடைசியாக அவர் கூறிய அபிப்பிராயம் எதற்கு அஸ்திவாரம் போடுகிறது என்பதை ஆர்தரால் கண்டுகொள்ள முடியவில்லை. ஈஸி சேரை விட்டு எழுந்து வாசற்பக்கமாக நடையைக் கட்டினார் இன்ஸ்பெக்டர்' வழியனுப்ப வாசல்வரை போவதுதான் மரியாதை என்பதையும் மறந்து பிரமித்து ஆர்தர் நின்று கொண்டிருந்தார்!

தன்னைப் பின்தொடர்ந்து வாசல் வரை வந்த ரோஸியைத் திரும்பிப் பார்த்தார் இன்ஸ்பெக்டர். "ரோஸி! இந்த உலகத்திலே ஒரு பெண்ணுக்கு வேண்டிய செல்வமெல்லாம் புருஷன் ஒருவன் தான். அவளுக்கு வாழ்க்கையிலே கிடைக்கக்கூடிய பேரின்பமும் புருஷனின் பங்கப்படாத அன்பு' பாசம், கனிவு ஆகியவைகளே. ஆர்தரை அவன் போக்குக்கு விட்டு' உன் வாழ்வைப் பாழாக்கிக் கொண்டு விடாதே· முக்கியமாக அதைச் சொல்லத்தான் இங்கே வந்தேன்!,,— அவர் கூறியது பிரேமமிக்க மகளுக்கு வாஞ்சை மிக்க தந்தை உபதேசம் செய்வது போலிருந்தது

"அப்படி அவர் தவறான வழிக்குப் போகக்கூடியவரில்லையே?" என்று சொல்ல ரோஸி வாய் திறந்தாள். ஆனால் அதைக் கூற அவளுக்கு மனமில்லை.

வழக்கமில்லாத வழக்கமாய் இன்ஸ்பெக்டர் அருணகிரி வந்ததே ஒரு ஆச்சரியப் படக்கூடிய விஷயம், அதற்கு மேலும் வியப்பைக் கொடுக்கக்கூடிய விஷயமாக இருந்தது—ஆர்தர் ராதையின் மேல் ஏதோ அன்பு வைத்திருக்கிறார் என்று இன்ஸ்பெக்டர் சொன்ன செய்தி.

மனம் குழம்பியவளாய்த் திரும்ப ஹாலுக்கு வந்தாள்ரோஸி அப்பொழுதும் சுவற்றில் சாய்ந்தபடி ஆர்தர் சிந்தனையில் ஆழ்ந்திருப்பதைக் கண்டு மனம் துணுக்குற்றாள்

தன்னை மறந்திருக்கும் ஆர்தரின் அருகே வந்து நின்று கொண்டாள் அவள். "வந்து உட்காருங்கள்' உங்களுக்கு மேற்பட்ட உத்தியோகஸ்தர் உங்களைவலியத் தேடி வருவதானால் கெடுதலுக்காகவா இருக்கும்? மனதை வீணாக அலட்டிக் கொள்ளாமல் கலகலப்பாக இருங்கள். நீங்கள் இப்படி இருப்பதைப் பார்க்கும் போது என் மனதும் ஏதோ குழம்புகிறது. சாப்பிட வாருங்கள்," என்று அழைத்தாள்.

"ரோஸி!'' என்றார் ஆர்தர். "இன்ஸ்பெக்டர் சொல்லியதை நீ நம்புகிறாயா?'' என்றார்.

வாய்விட்டுச் சிரித்த ரோஸி," ஒரு புருஷனைப் பற்றி மனைவி அறியாததையா மாற்றானால். அறிந்து கொண்டு விடமுடியும்? உங்கள் மனசு எனக்குத் தெரியும். நான் உங்களை அப்படி ஏதாவது கேட்டேனா? இப்பொழுது தான் கேட்கிறேன். ராதையிடம் உங்களுக்கு ஏன் அந்த அலாதியான அனுதாபம்?'' என்று முகம் சிணுங்கினாள்.

தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டவர்போல ஆர்தர் ஈஸி சேரில் வந்து உட்கார்ந்து கொண்டார். "ரோஸி! அந்தக் கொலைக் கேஸிலே ராதையும் சம்பந்தப்பட்டவள் என்கிறார் இன்ஸ்பெக்டர். என்றால் அதை நம்ப முடியவில்லை. ஆசை என்பது அவ்வளவு கொடூர சக்தியை எழுப்பி விடுமா? நீயும் ஒரு பெண்ணாயிற்றே. காதலின் தன்மையும, வேகமும், வேதனையும் எத்தகையதாக இருக்கும்ரோஸி?''என்றார். இப்படியும் ஓர் அசட்டுப்புருஷன் இருப்பாரா என்று தனக்குள்ளே சிரித்துக் கொண்டாள் அவள்! இவ்வளவு எளித குணம் கொண்டவர், எப்படி இந்த போலீஸ் தொழிலில் வந்து அகப்பட்டுக் கொண்டார் என்று வியந்தாள்.

ஏனிந்த அசட்டுக் கேள்வியெல்லாம் கேட்டு மனநிம்மதியைக் கெடுத்துக்கொள்கிறார்? அவர் புகுந்திருக்கும் தொழிலில் யாருக்காவது அமைதியிருக்க முடியுமா? இதை அறியாதவரா? என்று நினைத்த ரோஸி, எதற்காக நீங்கள் இப்படியெல்லாம் சுற்றி வளைத்துக் கேள்வி கேட்கவேண்டும்? புதிர் போடாமல் நேரடியாகத்தான் விபரமாகச் சொல்லுங்களேன்'' என்றாள் ஆர்தரின் கலைந்திருந்த கிராப்பைக் கோதி ஒழுங்கு படுத்திக் கொண்டே.

கொலைக்கேஸின் விபரங்களை ஆதியோடு அந்தமாய் விபரமாக எடுத்துச் சொன்ன ஆர்தர், "நீ என்ன நினைக்கிறாய் ரோஸி? என்றார்.

"சொல்லட்டுமா? மூன்று ஆதாரங்களைக் கொண்டு நான் ஊகித்து முடிவு செய்கிறேன். உங்கள் இன்ஸ்பெக்டர் சொல்லுவது போல இரண்டு பேரும் பரஸ்பரம் காதல் கடிதங்கள் பரிமாறிக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் காதலில் கனிவு இல்லை. சரீர மோகத்தின் விரகதாபம் பொங்கிவழிகிறது. இரண்டாவது. ராதை உங்களிடம் சொன்ன விருத்தாந்தத்தில் 'தான் உள்ளத்தால் கெட்டிருந்தாலும் உடலால் கெடவில்லை' என்கிறாள். இந்த விஷயங்களில் எப்பொழுது உள்ளம் கெடுகிறதோ அப்பொழுது உடல் கெடாமல் தப்பித்துவிடமுடியாது. மூன்றாவதாகப் புருஷனிடமிருந்து 'டிரங்கால்' வந்து பெங்களூரை விட்டுப் புறப்பட்டதாகக்கூறுகிறாள். அந்த டெலிபோன் பேச்சில் புருஷன் சொன்னதாகச் சொல்லும் அந்த வார்த்தைகளை நிஜமென நான் நம்ப முடியவில்லை. கொதித்த ஒரு மனதிலேயிருந்து அத்தகைய சாந்த வார்த்தைகள் எழும்பாது. மேலும் டெலிபோன் பேச்சைச் சாட்சியமாக எடுத்துக் கொள்ள முடியாது. மனைவியைப் பற்றி மாறான வதந்தி கேட்டால் அது உண்மையில் அபாண்டம் என்று தோன்றினாலும் புருஷனுக்கு மனைவி மேல் ஆத்திரமே ஏற்படும். அர்த்தமில்லாமலே கத்துவான் அப்படி ஏதும் நடக்கவில்லை, என்கிறாள் ராதை. ஊரிலிருந்து வந்து இறங்கிய ராதை நேராக கண்ணனைப் பார்க்கப் போயிருக்கிறாள். அதன் பின்னரே கொலை நடந்திருக்கிறது. கொலைக்குப் பின் அவள் வீடு வந்திருக்கிறாள். அவள் தன் கணவனின் கோர மரணத்திற்காகக் கலங்கவில்லை என்கிறீர்கள். சொட்டுக் கண்ணீர் கூடச்சிந்தவில்லை என்கிறீர்கள். பெண்களின் மனதை நான் சொல்லுகிறேன். ஆயிரமே புருஷன் கெட்டவனாக இருந்தாலுங்கூட, புருஷனுக்கு இன்னல் ஏற்பட்டு விட்டால் புழுங்கிச் சாகும் புல்லரிப்பு அவளைக் குமுறவைக்கும். அப்படி அவள் நடந்து கொள்ளவில்லையென்றால் அவளிடமிருந்து பெண்மை நழுவி விட்டது என்றாகிறது. இனி நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள்!" என்று சொல்லி தன் வாதம் எப்படி என்பது போல ஏறிட்டுத் தன் புருஷனைப் பார்த்தாள்.

சிரித்துக் கொண்டார் ஆர்தர். "ரோஸி, எனக்கு வேறொன்றும் சந்தேகமில்லை. கண்ணனும் ராதையும் கள்ளக் காதலில் சிக்குண்டு விட்டதாகவே வைத்துக் கொள்ளலாம். பயந்து பயந்து கூடும் பிரேமையால் சுகமற்றுப் போய் அதைப் பயமற்ற சாஸ்வத இணைப்பாகக் கொள்ள வேண்டும் என்று விரும்பினால், அதற்காகப் புருஷனைக் கொன்று தீர்த்துவிட வேண்டும் என்ற அவசியம் என்ன இருக்கிறது? இந்நிலையில் சாதாரணமாக ஒரு பெண் எப்படி நடந்து கொள்வாள்? கைக்கு அகப்பட்ட நகைகளையும் காசு பணத்தையும் சுற்றிக்கொண்டு, கள்ளச்

காதலனோடு கண்காணாத இடத்திற்கு ஓடிவிடுவாள். இதுதானே உலகத்தில் சகஜமாக நடக்கிறது. அப்படி இருக்கப் புருஷனைக் கொலை செய்ய யாராவது துணிவார்களா? அதை யோசித்துப் பார், ரோஸி!''

ஆர்தர் கிளப்பிய சந்தேகம் ரோஸியை யோசிக்க வைத்தது உலக நடப்பை அனுசரித்துப் பார்த்தால் ஆர்தர் கிளப்பிய சந்தேகமும் சகஜமானதே.

ரோஸியால் தீர்க்கமாக எதையும் சொல்லமுடியவில்லை ஏதோ ஒருவித முடிவுக்கு வந்த அவள், 'நாம் கர்த்தரை நம்புகிறோம். உங்கள் மனதிலே சிறிது சந்தேகம் இருந்தாலும் நியாயத்திற்காக அதைக் கருவியாகக் கொள்ளுங்கள், 'சந்தேகத்தின் பலனை எதிரிக்குச் சாதமாகக் கொடு' என்கிறது சட்டம், அதையே வாழ்க்கையிலும் கைக்கொள்ளுங்கள். அதனால் இப்போது இந்தக் கொலையில் சிக்க வைக்கப்பட்டிருக்கும் கண்ணனோ அல்லது ராதையோ நிரபராதியாக வெளிவரட்டும்; அல்லது குற்றவாளியாகத் தண்டனை அடையட்டும். ஆனால் மனமறிந்து நாம் யாருக்கும் துன்பம் தரவேண்டாம். அதற்கு ஏதாவது வழி இருக்கிறதா என்று பாருங்கள்!'' என்றாள்.

ஆர்தர் போலீஸ் உத்தியோகத்திற்கு லாயக்கில்லாதவர். ரோஸி—இந்த உலகத்தில் வாழத்தகுதியில்லாதவள்! ஏனென்றால் அன்றிரவெல்லாம் அவர்களிடையே ஆனந்தம் இல்லை; எப்பொழுது விடியும் என்ற ஏக்கத்தில் ஆழ்ந்ததுபோல அந்த இரவு ஸ்மசான அமைதியில் ஆழ்ந்தது.

## அத்தியாயம் : 6

---

## தீராத புதிர்கள் தீர்க்க முடியவில்லை!

விடிந்தது! முந்திய இரவு தூக்கமில்லாமல் அலைமோதிக் கொண்டிருந்ததால், ஆர்தரின் முகம் பொருமி இருந்தது வழக்கத்துக்கு விரோதமாக அதிகாலையிலேயே ஸ்டேஷனுக்கு வந்து, டைரி எழுதிவிட்டு, ரிமாண்ட் ஜெயிலுக்கு விரைந்தார். அங்கு தான் கண்ணனும் ராதையும் தனித்தனியாகச் சிறை வைக்கப்பட்டிருந்தனர்.

இந்தத் தடவை ராதையைப் பார்த்துப் பேச ஆர்தருக்கு எதுவும் இடமில்லை. கண்ணனைப் பார்த்து, அவனிடமிருந்து ஓரளவு உண்மையை அறிந்து பார்க்கலாம் என்பதே அவரது எண்ணமாக இருந்தது.

ஆர்தர் ரிமாண்ட் ஜெயிலுக்கும் வந்துசேர்ந்தார். கண்ணனைப் புன்முறுவலோடு பார்த்துவிட்டு, "கண்ணன், உங்கள் நன்மைக்காகவே உங்களைப் பார்க்க வந்தேன். என்னை ஒரு போலீஸ்

அதிகாரியாகக் கருதாமல், உங்களது நண்பனுகக் கருதி எனது சந்தேகங்களை நிவர்த்திக்கவேண்டும். இது ஒரு கொலைக் கேஸாக இருந்தும் என்னைப்போன்ற அதிகாரிகள் இவ்வளவு சரளமாகப் பழகக்கூடாது என்ற கட்டுப்பாடு இருந்தும், உங்களை நான் சந்திக்கும் நோக்கத்தைப் புரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நினைக்கிறேன்.'' என்று பேச்சை ஆரம்பித்தார் ஆர்தர்.

கண்ணன் ஒரு சிரிப்புச் சிரித்தான். அதில் ஆனந்தமில்லை, அவமதிப்பும் இல்லை. விதியைக் கண்டு சிரிப்பது போல் இருந்தது ஆர்தருக்கு

''மிஸ்டர் கண்ணன்! ராதையைச் சந்தித்தேன். அவளுக்குத் தெரிந்தவரை உண்மை எதையும் மறைக்காமல் உங்களிருவருக்கு முள்ளபழங்கதை,புதுக்கதை யாவையும் கூறினுள் பாவம்! உங்கள் மீது அவள் எவ்வளவு அன்பு கொண்டிருக்கிறுள் தெரியுமா?'' என்ற பீடிகையோடு ஆர்தர் ஆரம்பித்த போது, கண்ணனின் முகத்திலே அலாதியான ஒரு தேஜஸ் சுடர்விட்டது.

மறுபடியும் சிரித்தான் கண்ணன். ''அந்த அன்பு செய்த பாவம் தான் இன்று நானும் அவளும் குற்றவாளிகளாகச் சிறையில் இருக்கிறோம். ஆர்தர்! ராமதுரை கொலைப் பட்டிருக்கலாம், இல்லை எனக்கூறவில்லை. அதை நாங்களிருவர்தான் செய்தோம் என்று எங்கள் மீது பழி சுமத்தக் காரணம்? ராமதுரை எந்த விதத்தில் எங்களுக்கு விரோதி எனக்கருதி பழி பாவத்துக்கு எங்களை ஆளாக்குகிறீர்கள்? ராதை அவரது மனைவியாக இருப்பதாலும், நான் அவரது மில்லில் உண்மை ஊழியனுக இருந்ததற்காகவுமா இந்தப் பரிசு!''என்றுன் கண்ணன்.

''உண்மைக்கு அழிவில்லை மிஸ்டர் கண்ணன். ஆனுல் ஊழ் வினை என்ற ஒன்று இருப்பதை நானே அல்லது நீங்களோ அறிவதில்லை, அறியாமல் சில சமயம் அவசரப்பட்டு ஆத்திர புத்திக்கு உள்ளாகி விடுவது சகஜம். நீங்கள் ராமதுரையைத் தாக்குமளவு உங்களிடம் அவர் எப்படி நடந்து கொண்டார் என்பதைச் சொல்லலாமா?'' என்று கேட்டார் ஆர்தர்

ஆர்தரின் இந்தக் கேள்வி, நிஜமாகவே ராமதுரையைத் தானே கொலை செய்தது என்பதாக நிச்சயப்படுத்துவது போலவும் அது சம்பந்தப்பட்ட உண்மையை அறியவே ஆர்தர் வந்திருப்பது போலவும் கண்ணனின் புத்திக்குப் பட்டது. ''ஆர்தர்! நான்தான் கொலை செய்தேன் என்று நிச்சயப்படுத்திக் கொண்டு விட்டீர்கள்.உண்மையைக் குற்றவாளிமூலமே தெரிந்து கொண்டு விடலாம் என்ற எண்ணத்தில் படித்த ஒருவனிடம் வருவது புத்திசாலித்தனமாகுமா?'' என்றுன்.

ஆர்தர் திடுக்கிட்டார். அவன் தன்னை முட்டாள் என்று கூறுமல் கூறுவதாக அறிந்ததும் ஆத்திரம் வந்தது' ஆனுல் ஆத்திரப்படவா அங்கு வந்தார்? அந்தரங்கமாக விசாரிக்கவல்லவா வந்திருக்கிறுர்.கோபத்தை அடக்கிக் கொண்டு சாந்தமாகவே

மேலும் பேசலானார். அவர் மனதிலே ஒரே ஒருவருக்காகத் தான் பச்சாதாபம் இருந்தது. அது வேறு யாருமில்லை, ராதைதான்! இந்தக் கொலையில் அவளும் சம்பந்தப்பட்டிருக்க முடியாது என்ற எண்ணம் ஆர்தரின் மனதிலே பதிந்து விட்டதால், அதை ஊர்ஜிதப் படுத்தவே, அவளுக்கு விடுதலை தேடவே பாடுபட்டார்.

"மிஸ்டர் கண்ணன், உணர்ச்சி வசத்தில், மனிதன் தான் செய்வது எத்தகையது என்பதை அறிய முடியாத புத்தி பேதலிப்பில் கொடுமையான காரியங்களைச் செய்து விடுவது சகஜம்தான். அந்த நிலையில் தான் ராமதுரை கொலைப்பட்டிருக்க வேண்டும் என்பது என் எண்ணம். இப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்ப பேதத்தால் கொலை நடந்து விட்டால் அதற்குத் தண்டனைக் குறைவு உண்டு; மன்னிப்புகூடக் கிடைக்கலாம். ஒரு புறம் நான் போலீஸ் அதிகாரியாக இருந்து இந்தக் குற்றத்திற்கான குற்றவாளியைக் காட்டிக் கொடுக்க முற்பட்டாலும், மற்றொரு புறம் நான் மனிதனாக நடந்து கொள்ள ஆசைப்படுகிறேன். கொலைக் குற்றத்தை மூன்று தினுசாகப் பிரித்தேசட்டம் தண்டனை கொடுக்கிறது. ஒன்று நாள்பட்ட விரோதத்தை மனதிலே கொண்டு, சந்தர்ப்பம் கிடைத்தபோது கொன்றுபோடுவது, மற்றொன்று வர்மத்தை மனதிலே சுமந்து கொன்று தீர்த்துவிட வேண்டும் என்ற மாபாதக வஞ்சம் கொண்டு, அதற்காகச் சதிசெய்து திட்டம் வகுத்துக் கொல்வது. மூன்றாவது, கொலை நிகழ்ச்சிக்கு முன் சற்றும் அத்தகைய எண்ணம் இல்லாமல், ஆனால் சூழ்நிலை உணர்ச்சியால் மனிதன் தன் வசம் இழந்து, கோபத்துடன் தாக்கியதால் ஏற்படக்கூடிய மரணம். முன்னது இரண்டும் கொடுமை கொண்டது. அதற்கு மன்னிப்பே கிடையாது. கருணையும் கிட்டாது. மூன்றாவது ரகக் கொலைக் கேஸுகளில் பலர் விடுதலையாகியதை நான் அறிவேன். சிலருக்கு மன்னிப்பு கிடைத்ததையும் பார்த்திருக்கிறேன். அந்த ரீதியில் இந்தக் கொலை கடைசியாகச் சொன்ன சம்பவமானதாக இருக்கலாம் என்பதே என் கருத்து. அந்த எண்ணத்தில்தான், ராதையின் வேண்டுகோளின் பேரில் உங்களைச் சந்திக்க வந்தேன். ஆனால் என்னை நீங்கள் தவறாக நினைத்து விட்டீர்கள், மிஸ்டர் கண்ணன்! என் வார்த்தையை நம்புங்கள். நான் கேட்கும் சில கேள்விகளுக்கு நீங்கள் பதில் சொல்வதாக இருந்தால் கேட்கிறேன். என் தயவை நிராகரித்து விதிப்படியே நடக்கட்டும் என்று எதுவுமே கூறாமல் என்னைத் திருப்பி அனுப்பித்தால், உங்களுக்காகும் கதியையே ராதையும் அடையட்டும் என்பதாக ஆகிவிடும். குறிப்பாக அதை நீங்கள் கவனிக்க வேண்டும்!" என்றார் ஆர்தர்.

துடியாக விளங்கும் ஆர்தர் இவ்வளவு சாந்தமாகப் பேசக் கற்றுக் கொண்டது, முந்திய நாள் சம்பவத்தில் அருணகிரியிடமிருந்து கற்றுக் கொண்டதா என்னவோ; கண்ணன் மனதைக் கரைய வைத்து விட்டார்.

''தெரிந்த அளவு உண்மையைச் சொல்லுகிறேன். ஆர்தர்!' என்றான் கண்ணன்.

ஆர்தர் தன் சந்தேகங்களை நிவர்த்தித்துக்கொள்ள முற்பட்டார்.

"நீங்கள் ராதைக்குக் காதல் கடிதம் எழுதினது உண்மை தானே?'

"ஆமாம்."

''நீங்கள் எழுதினீர்களா?''

''இல்லை; ராதையின் கடிதம் எனக்குக் கிடைத்த பிறகுதான் பதில் எழுதினேன்''

''வீட்டு விலாசத்திற்கா?''

"ஆமாம்.''

''அப்படிப்பட்ட ஒரு காதல் கடிதம் ராதைக்கு வீட்டு விலாசமிட்டு அனுப்பினீர்களே, அது ராமதுரையின் கைக்குக் கிடைத்துத்தானே அவரது மனைவிக்குப் போகும். அதை நீங்கள் உணரவில்லையா?''

''அப்போது ராமதுரை ஊரிலில்லை என்பது எனக்குத் தெரியும்!''

''நீங்கள் மில்லில் வேலைக்குச் சேர்ந்தது ராதையின் மூலமாகத் தானே?''

"ஆமாம்.''

"சேர்ந்து எத்தனை வருஷங்கள் இருக்கும்?'

''நாலைந்து வருஷமாகிறது.''

''இடையே நீங்கள் அடிக்கடி ராதையைச் சந்திப்பதுண்டா?''

''எப்போதோ ஓரிரு சமயம்''

''அந்தச் சந்திப்பின் போது உங்களுக்குப் பழைய ஞாபகம் வருமல்லவா?''

''இயற்கை தானே?''

''அப்போது மனம் குழைந்து ராதையிடம் தவருக நடந்து கொள்வதும் உண்டல்லவா?''

''இல்லை; மனதை அடக்கிக் கொள்வேன். ராதையும் அவ்வளவு தூரத்திற்கு இடம் கொடுத்துப் பழகியதில்லை!''

''ஆச்சரியமாயிருக்கிறது. கண்ணன்! அப்போதெல்லாம் சந்திப்பில்லை என்கிறீர்கள். முன் தொடர்போ பேச்சோ இல்லாமல் திடுதிப்பென்று இந்தக் காதல் கடிதங்கள் கைமாறக் காரணம்?''

''ராதை மனம் திறந்து கடிதம் எழுதினாள். பழைய சிந்தனைகள் ஆசைத் துடிப்பு; என் மனம் இழைந்து மேலும் துவிர்த்தது. ராதையின் எண்ணம் அப்படி இருக்குமேயானல், புதைகுழியில்

மூடி சமாதி வைத்துவிட்ட என் ஆசை எழுச்சிகளை மீண்டும் தோண்டியெடுக்க உணர்ச்சி தூண்டாதா?"

"நீங்கள் எழுதிய அந்தக் கடிதத்திற்கு ராதை மறுபடியும் பதில் எழுதினாளா?"

"இல்லை!"

"நேரில் சந்தித்தீர்களா?"

"அதுவும் இல்லை"

"ஒரு பெண் தன் மனதைத் திறந்து எழுதிவிட்டபின் நேரில் சந்திக்க ஆவல் ஏற்படவில்லையா?"

"ஆவல் இருந்தது; ஆனால் பார்க்க முடியவில்லை."

"ஏன்?"

"நான் திரும்பி வந்தபோது ராதை தன் பிறந்தகம் போயிருந்தாள்"

"திரும்பி வந்தபோது என்கிறீர்களே, எங்கிருந்து?"

"சென்னையிலிருந்து, ஜனவரி ஏழாம் தேதி, மில் விஷயமாய் புறப்படவிருந்தேன். அன்று மாலைத் தபாலில் எனக்கு ராதையின் கடிதம் தபால் மூலம் வந்தது. ரயிலுக்குப் புறப்பட ஒரு மணி நேரமே இருந்தபடியால் உடனே எழுத முடியவில்லை மேலும் மற்றொரு பயம் அவளுக்குக் கடிதம் எழுதி ராமதுரை கையில் சிக்கிவிட்டால்? திரும்பி வந்து சந்தர்ப்பம் தேடலாம் என்று புறப்பட்டேன். மறுநாள் அவசர காரியமாக ராமதுரையும் சென்னைக்கு வந்து சேர்ந்தார். ராதைக்குக் கடிதமெழுத இதை விட்டால் வேறு சந்தர்ப்பம் கிடைக்காது என்று கருதி பதில் கடிதம் எழுதினேன். பிறகு பத்தாம் தேதி நானும் ராமதுரையும் சென்னையிலிருந்து திரும்பினோம், ராதை ஊரிலில்லை என்பதை அன்று மாலை தான் தெரிந்து கொண்டேன்."

"அதனால் நீங்கள் எழுதிய பதில் கடிதம் ராதையின் கைக்குக் கிடைக்காமல் ராமதுரையிடம் சிக்கிவிட்டது என்ற பயம் உங்களைப் பிடித்துக் கொண்டதல்லவா?"

"ஆமாம்!"

"அப்பொழுது உங்கள் மனது பரபரப்பு அடையவில்லையா?"

"என்ன ஆகுமோ என்று பயந்துகொண்டுதான் இருந்தேன்."

"அதுபற்றி ராமதுரை தங்களிடம் ஏதாவது கேட்டாரா?"

"எதுவுமே கேட்கவில்லை. எப்பொழுதும் போலவே நடந்து கொண்டார்!"

"ராமதுரை கொலைப்பட்ட அன்று நீங்கள் அவரது பங்களா விற்குச் சென்றிருந்தபோது கூடவா அதுபற்றி அவர் கேட்க வில்லை?"

"ஆமாம்."

"நீங்கள் அவரை அவசரமாகச்சந்திக்கவேண்டிய காரணம்?"

"அவர் டெலிபோன் செய்து கூப்பிட்டார்."

"அப்பொழுது உங்களிருவரிடையே நடந்த விபரங்களைக் கூறலாமா?"

"மறைப்பதற்கு அதில் ஒன்றுமேயில்லை. ராதை அவசரமாக ரூபாய் பத்தாயிரம் கேட்டிருப்பதாகவும், உடனே நேரில் நானே கொண்டுபோய்ச் சேர்ப்பிக்க வேண்டும் எனவும் கூறி பத்தாயிரம் கொடுத்தார். ஏதோ அவசர காரியத்திற்காகப் பணம் தேவை யிருப்பதாகக் கூறியதால் உடனே நான் பெங்களூர் கிளம்பினேன். ரெயில் புறப்படக் கால் மணி நேரமே இருந்ததாலும், டிரைவர் அப்போது இல்லாததாலும் காரை எடுத்துச் சென்று ஸ்டேஷ னுக்குப் போய் விட்டால், பின்னல் டிரைவரை அனுப்பிக் காரைத் திரும்ப எடுத்து வரும்படி செய்வதாகவும் அவர் சொன்னதால், அதன்படியே காரை எடுத்துச் சென்றேன். அவ்வளவுதான் எனக்குத் தெரியும். ராமதுரை கொலைப் பட்டதோ வேறு எதுவுமோ எனக்குத் தெரியவும் தெரியாது!" என்றான் கண்ணன்.

ஆர்தர் யோசனையில் ஆழ்ந்தார். 'கண்ணன் கூறுவதும் ஏன் உண்மையாக இருக்கக்கூடாது? அவன் பெங்களூர் புறப்பட்டுச் சென்ற இந்தச் சூழ்நிலையைக் கொண்டு கணக்கன் வாஞ்சிநாதனே ஏன் கொலை செய்திருக்கக்கூடாது?' என்று எண்ணலானார்.

'அப்படியும் இருக்கலாம். ஆனல் எதைக்கொண்டு ராமதுரை யைக் கொலை செய்ததாகச் சொல்லப்படுகிறதோ, அந்தக் கத்தி யின் கைப்பிடியில் கண்ணனின் கைரேகை பதியக் காரணம்?' என்று ஆலோசிக்கலானார்.

"மிஸ்டர் கண்ணன், உங்கள் வார்த்தையை ஓரளவு நம்பு கிறேன். ஆனல் இந்த என் நம்பிக்கையை ஒரே ஒரு விஷயந்தான் குழம்ப வைக்கிறது, கொலை செய்ய உபயோகப்படுத்தப்பட்டுள்ள கத்தியில் உங்கள் கைரேகை பதிந்திருக்கிறதே! அது எப்படி இருக்க முடியும்?" என்று கேட்டார் ஆர்தர்.

"அது தான் எனக்கும் தெரியவில்லை!" என்று கண்ணனும் விழித்தான்.

'முக்கியமாக இந்த வழக்கில் கத்தியும், அதன் பிடியிலிருக்கும் கண்ணனின் கைரேகையுந்தானே சாக்ஷியமாக இருக்கிறது! அதை நிவர்த்திக்கக் கண்ணனாலுங்கூட யூகித்துச் சொல்ல முடிய

வில்லையே!' என்று நினைத்தபடி, கண்ணனிடம் விடைபெற்றுக் கொண்டு கிளம்பினார் ஆர்தர்

சிறையைவிட்டு அவர் வெளியே புறப்பட்டபோது அவரது மனதிலே இரு முக்கியமான சந்தேகங்கள் தலைதூக்கி நின்றன. ஒன்று கைப்பிடியில் கண்ணனின் கைரேகை. மற்றொன்று, ராதை அவசரமாக ரூபாய் பத்தாயிரம் கேட்டதாகவும், அதை ராமதுரை கொடுத்து அவரே தான் தன்னை அனுப்பியதாகக் கண்ணன் கூறியது முதல் சந்தேகத்தைக் கண்ணனால்கூட நிவர்த்திக்க முடியவில்லை. இரண்டாவது சந்தேகத்தை நிவர்த்திக்கக் கூடியவர் ராதை ஒருத்திதான்! அவள் இது பற்றி எதுவும் கூறாதது அவரது கவனத்திற்கு வந்தது

'திருடுபோன பத்தாயிரம் கண்ணனிடம் இருப்பதே போதுமான ரகசியமாகிறதே', என்கிறார் இன்ஸ்பெக்டர் அருணகிரி, 'அந்தப்பத்தாயிரத்தை ராதையிடம் சேர்ப்பிக்கும்படி ராமதுரை தான் கொடுத்தனுப்பினார்' என்கிறான் கண்ணன். இதில் உண்மை எவ்வளவு தூரம் என்பதை ராதையால்தான் கூறமுடியும்!

ராதையிடம் மேலும் கேட்டுத் தெரிந்துகொள்ள மற்றொரு விஷயமும் இருந்தது. கண்ணனுக்கு ராதை எழுதியதாகக் கூறப்பட்ட கடிதம் பற்றி விசாரிக்க ஆவல் கொண்டார். இந்த சந்தேகங்களை நிவர்த்தித்துக் கொண்டாலொழிய, குற்றம்பற்றி எந்த முடிவுக்கும் வரமுடியாதுபோல அவரது மனம் தத்தளிக்கவே, ராதையைச் சந்திக்கத் தீர்மானித்து மீண்டும் ரிமாண்ட் சிறைக்குள் புகுந்தார். அங்குதான் இன்ஸ்பெக்டர் அருணகிரியால் கைது செய்யப்பட்ட ராதை தனித்து வைக்கப்பட்டிருந்தாள்.

இரும்புக் கம்பிகளுக்குள் அடைபட்டுக் கிடந்த ராதையைக் கண்டதும் ஆர்தர் மனம் கசிந்தார். ஆனால் ராதையோ, புன்முறுவல் பூக்க "வாருங்கள் மிஸ்டர் ஆர்தர்!" என்றாள். அந்தப் புன்சிரிப்பு உள்ளத்திலிருந்து வருகிறதா, உதட்டிலிருந்து வருகிறதா, என்றுகூட அறியமாட்டாதவராய், இரக்கத்தை முகத்திலே தேக்கிவைத்துக் கொண்டு நெருங்கினார் ஆர்தர்.

"என்மேல் எந்தவித அபிமானம் கொண்டோ நீங்கள் வலிய வலிய வந்து எனக்கு உதவுவதுபோல முயற்சி எடுக்கிறீர்கள். இன்ஸ்பெக்டர் அருணகிரி அதை விரும்பாதபோது அதைச் செய்து அவரது வெறுப்புக்கு நீங்கள் ஏன் பாத்திரமாக வேண்டும்?" என்றாள் ராதை. 'அகதிக்குத் தெய்வமே துணை' என்று கூறுவதுபோல் இருந்தது அவளது அந்தப் பேச்சு.

"இன்ஸ்பெக்டருக்கு நான் காட்டவேண்டியது மரியாதையேயொழிய கடமையைத் தனக்கு விற்கும்படி அவர் நெருக்கவில்லை. அதனால்தான் உங்களைச் சந்திக்க வந்தேன்" என்றார் ஆர்தர்.

"மேலும் உங்கள் வழக்கிற்கு என்னிடமிருந்து எந்த ரகசியம் கிடைக்கும் என்பதை அறிய நீங்கள் இப்போது வந்திருப்பது தானே உங்கள் கடமை?" என்று கேட்ட ராதையின்

முகத்திலே வில்போன்ற புருவம் ஆயிரம் கோணல்களாக வளைந்து நெளிந்தது.

"நீங்கள் என்னை அப்படி நினைக்கும்படி நான் பாதகமாக உங்களுக்கு எதுவுமே செய்யவில்லையே!" என்று சொல்லிய ஆர்தர், "ராதை! இன்னமும் உங்கள் நலனுக்காகத்தான் பாடு படுகிறேன் கண்ணனைக்கூட இப்பொழுதுதான் சந்தித்து வந்தேன்!" என்று சொல்லி அவள் முகத்தையே பார்த்தார் அவர்.

கண்ணன் என்ற பெயரைச் சொன்னதும் ஆவலோடு தன்னிடம் கூறும்படி ஏதாவது சொல்லச் சொன்னாரா என்று ஆசையோடு கேட்பாள் என்று நினைத்த ஆர்தரை, தூக்கி வாரிப் போடச் செய்தது அவள் திருப்பிக் கேட்ட பதில்,

"இன்னும் எத்தனை காதல் கடிதம் எனக்கு எழுதி என்னைச் சந்தியில் நிறுத்தப் போகிறதாகச் சொன்னான்?" என்று கேட்டாள் கடுமையாக.

ஆர்தர் இந்த விஷயத்தில் முரட்டுச் சுபாவத்தைக் காட்டி "நீங்கள் அவருக்குக் காதல் கடிதம் எழுதும்போது அவர்பட்டிலும் ஏன் உங்களுக்கு எழுதக் கூடாது?" என்றார் வெடுக்கென்று.

வெறுப்போடு விலங்கிய ராதையின் முகத்திலே திகைப்பு படர்ந்தது "என்ன? காதல் கடிதமா? அதுவும் அவனுக்கா? நான் எழுதினேன் என்று சொல்லுகிறாளா?" என்றாள் ஆத்திரத்தோடு.

"ஆமாம்!" என்று சாவதானமாகப் பதில் சொல்லிய ஆர்தர், "அந்தக் கடிதத்தை நான்கூடக் கண்ணால் கண்டு, மனதல் படித்தேன் அந்தக் கையெழுத்துகூட உங்களுடையதுதான்" என்றார் அழுத்தந்திருத்தமாக.

"பொய்! வீண் பழி" என்று கத்தினாள் ராதை. அந்த வார்த்தைகள் ஆர்தரின் காதில் விழுந்தன; வார்டனின் காதில் பட்டன; ஆனால் சட்டத்தின் காதுகளுக்கு கெட்டியன சிறைச் சுவற்றைத் தாண்டி அவை செல்லுமா என்பது பாவம் — ராதைக்கு எப்படித் தெரியும்?

"அப்படி ஏதும் கடிதம் எழுதியதாக உங்களுக்கு ஞாபகமில்லையா?" என்று மீண்டும் கேட்டார் ஆர்தர்.

"எல்லாம் பொய்; ஏதோ சூழ்ச்சி! நான் அப்படி ஏதுமே எழுதவில்லை!" என்று அலறிய ராதையின் அலறல் சிறைச்சாலையெங்கும் எதிரொலித்தது கண்ணனின் காதுகளுக்குக்கூட எட்டுமளவு அந்தக் குரல் வீறிட்டது.

"பதட்டப்படாதீர்கள் ராதை. அது பற்றி உண்மையைக் கேட்கத்தானே நான் வந்திருக்கிறேன். இதோ பாருங்கள் இந்தக்

கடிதத்தை!'' என்று கூறியபடி பைக்குள் இருந்த காகிதத்தை வெளியே எடுத்து, பிரித்து அவளுக்கு வாசித்துக் காட்டினார்.

அதைக் கேட்கக் கேட்க ராதையின் மாந்தளிர் முகம் செக்கச் செவேலென சிவந்து வர ஆரம்பித்தது.

கடிதத்தைப் படித்து முடித்த ஆர்தர், ராதை என்று கையெழுத்திட்டிருக்குமிடத்தைச் சுட்டிக்காட்டி, "இது உங்கள் கையெழுத்தில்லையா?'' என்று கேட்டார்.

அதை உற்றுக் கவனித்த ராதை, 'ஆமாம்' என்பதற்கறிகுறியாகத் தலையசைத்துவிட்டு, பேதலிப்பவள் போலத் தலை குனிந்து மௌனத்தில் ஆழ்ந்தாள்.

'இப்பொழுதாவது உண்மையைச் சொல்லுங்கள் ராதை!' என்று கடுமையாகக் கேட்க ஆரம்பித்தார் ஆர்தர்.

இரண்டு மூன்று தரம் அவர் அதைத் தொடர்ந்து கேட்டும் பதில் சொல்லாது மௌனமாக இருந்த ராதை ஆர்தரின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள். அவள் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வடிந்து கொண்டிருந்தது.

''ஆசைத் துடிப்பில் அரை நிமிஷமே ஆகியிருக்கும் கடிதம் எழுத. ஆனால் அது எத்தகைய ஆபத்தில் கொண்டு வந்துவிட்டது பார்த்தாயா?' என்று கேட்பதுபோல ஆர்தர் ராதையைப் பார்க்கலானார்.

ராதையின் உதடுகள் மலர்ந்தன. "ஆர்தர் ஸார்!'' என்றாள் சஞ்சலத்தோடு. "இப்பொழுதுதான் என் ஞாபகத்திற்கு வருகிறது. அந்தக் கடிதம் நான் எழுதியது தான் ஆனால்...'' என்று சொல்லி முடிப்பதற்குள், "ஆனால் என்ன?' என்று குறுக்கிட்டார் ஆர்தர்.

"விபரீதத்திற்குள்ளாகி விட்ட இந்த நிலையில் நான் அதைச் சொன்னால் உண்மை என்று யாருமே நம்ப மாட்டார்களே!'' என்று அழ ஆரம்பித்தாள்.

'நான் நம்புவேன், சொல்லுங்கள்!'' என்று துடியாய் நின்றார் ஆர்தர். புதிதான ஓர் உண்மை கிடைக்கிறதென்றால் அதைவிட வேறு என்ன ஆர்வம் அவருக்கு இருக்கப் போகிறது...?

''நான் சொல்லுவது உங்களுக்குக் கற்பனைபோலத் தோன்றும் ஆர்தர்! ஆணையிட்டுச் சொல்லுகிறேன்; நான் சொல்லப் போவதுதான் உண்மையாக நடந்தது. ஒருநாள் என் கணவர் வெகு மும்முரமாக ஏதோ எழுதிக் கொண்டிருந்தார். என்ன என்று கேட்டேன். கதை எழுதுவதில் தனக்கு ஆர்வமுண்டென்றும், தான் எழுதியவரை படித்துப் பார்க்கும்படியும் என்னிடம் கொடுத்தார். வாசித்தேன். கதை அதில் முடியாமல் இருந்ததால் மேலும் எப்படி முடிக்கப்போகிறார் என்பது பற்றி

அவரோடு பேசிக் கொண்டிருந்தபோது, 'ராதை!' என்று கூப்பிட்டார். அந்தக் கதையில் வருகிற கதாநாயகி, தான் ஆசைப்பட்ட புருஷனை மணக்க முடியாமல், விதி வசத்தால் வேறொருவனுக்கு மனைவியாகி விட்டதாகவும், வாழ்க்கை நடத்த புருஷன் வீட்டிற்கு வந்த பிறகு, அவனது கொடுமைகளைத் தாங்கமாட்டாமல் எங்காவது ஓடிவிடலாமா என்ற புத்தியில் தன் பழங்காதலனுக்குக் கடிதம் எழுதுகிருளென்றும், அந்தக் கடிதம் எப்படி எழுதினுல் சுவாரஸ்யமாயிருக்கும் என்பது தெரியாமல் தத்தளிப்பதாயும், அதை என்னைக் கொண்டு எழுதும்படியும் கூறினுர். அதுபடியே நானும் யூகம் செய்து ஒரு கடிதம் எழுதிப் படித்துக் காண்பித்தேன். அதை ரசித்த அவர் நன்ருயிருக்கிறது என்று சொல்லி, "அதன் கீழே கதாநாயகியின் கையெழுத்துப்போடவில்லையே!" என்ருர். கதாநாயகியின் பெயர் என்ன என்று கேட்டேன். உன் பெயரைத்தான் வைப்போமே என்று சொல்லவே, கதை தானே என்று நானும் ராதை என அதில் கையெழுத்திட்டேன். அதை வாங்கிக் கொண்டார். அப்போது எழுதிக் கொடுத்த அதே கடிதம் தான் இது!" என்ருள் அவள்

ராதை, கூறிய இந்தக் கதை ஆர்தருக்கு ஏதோ கற்பனை செய்து கதை சொல்லுவது போலவே பட்டது! "அப்படியானுல் அந்தக் கடிதம் கண்ணனின் கைக்கு எப்படிப் போனது?" என்ற ஆர்தரின் குறுக்குக் கேள்விக்கு ராதையால் எதுவும் பதில் கூற இயலவில்லை.

கடிதம் பற்றி மீண்டும் மீண்டும் பலமுறை மாற்றி மாற்றிக் கேள்விகள் கேட்டும், ராதை சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்ததால், ஆர்தர் அதோடு அந்த விஷயத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு வேருெரு விஷயத்தில் சர்ச்சையிலீடு பட்டார்.

"ராதை, பெங்களூரிலிருந்து உங்கள் கணவரோடு டெலிபோனில் பேசினேன் என்கிறீர்களே, அப்போது உங்கள் கணவரிடம் ஏதாவது பணம் அவசரத் தேவையாய் இருக்கிறது என்று கேட்டீர்களா?" என்ருர் ஆர்தர். "அப்படி எதுவுமே கேட்கவில்லை!" என்று ராதை மறுக்கவே, கண்ணன் சொன்ன கதையில் ஆர்தருக்கு நம்பிக்கையில்லாமல் செய்துவிட்டது.

இந்த வழக்கில் முக்கியமான இரு விஷயங்கள் ஒன்றையொன்று எதிர்த்து மோதுகின்றன ராதை கேட்டதற்கிணங்க, அவளது புருஷனுல் ரூபாய் பத்தாயிரம் தன்னிடம் கொடுக்கப்பட்டது என்கிருன் கண்ணன். ஆனுல் ராதையோ, தன் புருஷனிடம் எதுவும் பணம் கேட்டதில்லை என்கிருள். இந்த விஷயத்தில் ராதையின் பேச்சை நம்புவதா அல்லது கண்ணனின் பேச்சை நம்புவதா என்று தெரியாமல் தத்தளித்தார் ஆர்தர். கத்திப் பிடியில் பதிந்திருந்த கண்ணனின் கைரேகை சந்தேகத்திற்கு மூத்தாய்ப்பு வைப்பதுபோலிருந்தது. பணம் விஷயமாய்க் கண்ணன் சொன்ன வாக்குமூலம் பொய் என்றே முடிவுகட்டினுர்.

ராதையிடம் மேலும் எதுவும் கேட்டுத் தெரிந்துகொள்ள விஷயமில்லாததால் ஆர்தர் அங்கிருந்து கிளம்பினார். அவரது மோட்டார். சைக்கிள் சிட்டாய்ப் பறந்து இன்ஸ்பெக்டர் அருணகிரியின் வீட்டிலே வந்து நின்றது. கண்ணனையும் ராதையையும் சந்தித்துக் கிரகித்த விஷயங்களை அவரிடம் ஒப்புவித்தார்.

இன்ஸ்பெக்டர் எதுவும் பேசாமல் சிரித்துக்கொண்டே யாவற்றையும் கேட்டுவிட்டு, ஒரே வார்த்தையில் ரத்னச் சுருக்கமாகப் பதில் கூறினார்.

"ஆர்தர்! குற்றவாளிகள் உண்மையைச் சொல்லி விடுவதாக இருந்தால் அரசாங்கம் நம்மை ஏன் நியமித்திருக்கிறது என்பதை நீ உணரவேண்டும். நீ மிகவும் களைப்பாகத் தென்படுகிறாய். போய் நாளை வா!" என்று கூறி ஆர்தரை வீட்டுக்கு அனுப்பி வைத்தார்.

## அத்தியாயம் : 7

## சாக்ஷியம் கூறும் கதை

மறு நாள் இன்ஸ்பெக்டர் அருணகிரியைச் சந்திக்கும்போது ராமதுரை கொலை வழக்கைக் கோர்ட்டில் நின்று நிலைத்து நடத்தும் பொறுப்பைத் தன்னிடம் ஒப்படைக்கவேண்டாம் என்று அவரை மன்றாடிக் கேட்டுக் கொள்வதென்ற தீர்மானத்திலேயே சப்-இன்ஸ்பெக்டர் ஆர்தர், ஸ்டேஷனுக்குச் சென்றார். ஆனால் ஒரு பொறுப்புள்ள அதிகாரி நல்லதோ கெட்டதோ, தன் கடமையைச் செய்துதான் தீரவேண்டும் என்பதைத் தனக்கு இன்ஸ்பெக்டர் அருணகிரி ஞாபகப்படுத்துவார் என்பதை ஆர்தர் நினைத்துப் பார்க்கவில்லை.

"ஆர்தர்! நீ இத்தைய மனப்போக்கையும் சுபாவத்தையும் உன்னுள்ளே வளர்த்துக்கொண்டே போனால் இந்த உத்தியோகத்திற்கே நீ துரோகம் செய்யும் நிலைக்கு வந்தாலும் வந்துவிடுவாய். நம் புத்திக்குத் தோன்றியபடி நமக்குக் கிடைக்கும் ஆதாரங்களை வைத்துக்கொண்டு, குற்றவாளி இவன்தான் என்று நிர்ணயிக்கிறோம். அது நம் கடமை நாம் தேர்ந்தெடுக்கும் குற்றவாளியை நியாய தேவதையின் சந்நிதானத்திலே கொண்டுபோய் நிறுத்தி நியாயம் அல்லது அநியாயம் என்று சொல்லவேண்டிய முடிவைச் சட்டத்தினிடம் விட்டுவிட்டு ஒதுங்கியே நிற்கிறோம். நம் இச்சைப்படி நாமாகத் தண்டனை கொடுப்பதில்லை. அதற்கு நாம் ஏன் கவலைப்படவேண்டும்? தண்டனை பெற்றவன் நிரபராதியாக இருந்து, ஆனால் முடிவில் பழி பாவத்துக்கு உள்ளானால் அதன் பலாபலன்களும் பாபமும் நம்மை ஒருபோதும் சேராது. அது நீதி தேவதையை எக்களித்துப் பார்க்கும்: நம்மைப் பார்த்துச் சிரிக்காது. எல்லாவற்றிற்கும் மேலாக நம்முடைய நீதிபரிபாலனத்

COMICSPDF TIMES

தைக் கண்காணிக்கக் கடவுள் இருக்கிறார் என்ற நம்பிக்கையோடு இருந்தால் போதும்.''

இவ்வளவு பொறுமையாக, நிதானமாக இன்ஸ்பெக்டர் அருணகிரி தன்னைச் சமாதானப் படுத்துவார் என்று ஆர்தர் எதிர்பார்க்கவே இல்லை.

"மேலும் நான் சொல்வதைக் கவனி ஆர்தர், எந்த ஒரு சம்சயத்தை நீ மனதில் வைத்துக்கொண்டு ராதைக்காகவும் கண்ணனுக்காகவும் பச்சாதாபப்படுகிறாய் என்பதையாவது என்னிடம் சொல்லு. நானும் சிந்தித்துப் பார்க்கிறேன்!'' என்றார்.

இவ்வளவு சாத்வீகமாக, பதட்டமில்லாமல் இன்ஸ்பெக்டர் அருணகிரி பேசியதே இல்லை. சாந்த புருஷன் போல விளங்கும் இந்தச் சமயத்தில் தன் மனதிலே ஏற்பட்ட சந்தேகங்களை நிவர்த்தித்துக் கொள்ளலாம் என்று நினைத்தார் சப்-இன்ஸ்பெக்டர் ஆர்தர். அதன் பிறகு அவர் ராமதுரை கொலை சம்பந்தமான தன் அனுமானங்களை விவரிக்கலானார்.

"ராதை கண்ணனுடன் கள்ள நட்புக் கொண்டிருக்கிறாள் என்ற இரகசியத்தை கணக்கராக இருந்த வாஞ்சிநாதன் ராமதுரையிடம் காட்டிக் கொடுக்கவேண்டிய அவசியம் என்ன இருக்கிறது? தன் கைப்படவே ராமதுரைக்குக் கண்ணன் எழுதிய குறிப்பும் உங்களிடம் இருக்கிறது. அதில் ரொக்க இருப்பில் கிட்டத்தட்ட ரூபாய் பத்தாயிரம் குறைவாக இருப்பதை வாஞ்சிநாதன் மூலம் கணக்குகளைச் சோதித்ததில் தெரிகிறதென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தக் கடிதத்தை வைத்து அனுமானித்தால் தன் திருட்டைக் கண்ணன் கண்டுபிடித்து விட்டானே என்ற க்ஷாத்திரம் அவனுக்கு உண்டாகியிருக்க வேண்டும்; பதிலுக்குப் பழிவாங்க வாஞ்சிநாதன் ஏன் கண்ணன் தான் ராமதுரையைக் குத்திக் கொன்றான் என்று சொல்லி இருக்கக்கூடாது? கண்ணன் ராமதுரையைக் குத்திக் கொன்றான் என்பதற்கு நேரில் பார்த்ததாகச் சாக்ஷியம் இல்லை. கண்ணன் காரை எடுத்துக்கொண்டுபோய் அரைமணி நேரம் கழித்த பிறகே தான் உள்ளே எட்டிப் பார்த்ததாகவும், ராமதுரை குத்துண்டு கிடந்ததைக் கண்டதாகவும் வாஞ்சிநாதன் தன் வாக்கு மூலத்தில் கூறியிருக்கிறான். அதோடு கண்ணனுக்கும் ராமதுரைக்கும் வாய்ப்பேச்சு முற்றியபோது தன் காதுகளில் அது ஸ்பஷ்டமாக விழுந்தது என்றும் கூறினான். அதைக் கொண்டு பார்த்தால், கொலை நடந்த இடத்திற்கு அருகிலேதான் வாஞ்சிநாதன் இருந்திருக்கிறான், கண்ணன் குத்தும்போது ஐயோ என்ற ஒரு வார்த்தையாவது சொல்லி ராமதுரை வீரிட்டிருக்க மாட்டாரா? அது வாஞ்சிநாதன் காதுகளுக்கு எட்டியிருக்காதா? கேட்டிருந்தால் உள்ளே ஓடிப்போய், பார்த்திருக்க மாட்டானா? அது பற்றியும் கணக்கப்பிள்ளை வாஞ்சிநாதன் எதுவும் குறிப்பிடவில்லை. அதைக் கொண்டு சம்பவத்தையே ஏன் வேறு வழியில் அனுமானிக்கக் கூடாது?

"கண்ணன் வந்துபோன சமயம் — வாக்குவாதம் முற்றிய நேரம்—ஏற்கனவே பின்னிவிட்டிருக்கும் ராதை, கண்ணன் காதல் தொடர்பு—தனக்கு நேரக்கூடிய ஆபத்துக்கு விமோசனம் காண இதைச் சூழ்நிலையாகக் கொண்டு, கண்ணன் போனபிறகு கணக்கப்பிள்ளை வாஞ்சிநாதன் ஏன் முதலாளியான ராமதுரையைக் குத்திக் கொன்றிருக்கக்கூடாது? பழி மானேஜர் கண்ணன் மீதுதானே விழும் என்று அவன் ஏன் கருதியிருக்கக்கூடாது?

"மற்றொன்றையும் உங்களுக்கு ஞாபகப் படுத்துகிறேன். மானேஜர் கண்ணனுக்கும் கொலையுண்ட ராமதுரையின் மனைவி ராதைக்கும் தீராத தொடர்பு என்றே வைத்துக் கொள்ளலாம் திருட்டுக் காதலர்கள் சகஜமாக நடந்து கொள்வதெப்படி? கைக்குக் கிடைத்ததைச் சுருட்டிக்கொண்டு கண்காணாத தொலை விடத்திற்குப் போய் நிம்மதியாக வாழ்வார்கள்! பல சம்பவங்கள் அப்படித்தான் நடந்திருக்கின்றன. அதற்காக கொலை செய்ய வேண்டியது அவசியமா என்பதைக் கொஞ்சம் யோசித்துப் பார்க்க வேண்டுமல்லவா?

"மேலும் கண்ணனுக்கும் ராதைக்கும் அவ்வளவு ஆழ்ந்த நட்பும் இருக்குமானால், கொலைக் குற்றம் சாட்டப் பெற்றுள்ள கண்ணனைக் காப்பாற்ற ஆயிரம் ஆயிரமாக ராதை வாரி இறைத்திருக்க மாட்டாளா? அவள் ஏன் அப்படிச் செய்யவில்லை? இதையெல்லாம் யோசித்துத்தான் நானும் சிறிது தயங்குகிறேன்" என்று சொல்லி முடித்தார்.

சப்-இன்ஸ்பெக்டர் ஆர்தர் சொல்லிய யாவற்றையும் ஆழ்ந்து கவனித்துக் கேட்டுக் கொண்டுவந்த இன்ஸ்பெகடர் அருணகிரி, "ஏன் நின்று கொண்டிருக்கிறாய்? உட்கார்ந்து கொள் ஆர்தர்," என்றார்,

கொலை பற்றிய ஆராய்ச்சியும் அனுமானமும் நீண்டதாக இருக்கும் என்று கண்டு கொண்டார் ஆர்தர்.

நெற்றியில் அரும்பிய வியர்வையைத் துடைத்து விட்டுக் கொண்ட இன்ஸ்பெக்டர் அருணகிரி, "ஆர்தர்! நீ கூறுகிற சந்தேகங்கள் எனக்கும் மனதில் தோன்றாமலில்லை. ஒரு கொலைக் கேஸில் குற்றவாளியைத்தான் கண்டுபிடிக்க முடியுமே ஒழிய, ஏனையவைகளை ஆதியோடு அந்தமாக நாம் அறிந்துவிட முடியாது சில சமயங்களில் சம்பந்தத்தை நிரவல் செய்து காட்ட சாக்ஷி ஜோடனைகள்கூட நாம் தேடித் தயார் செய்யவேண்டியிருக்கிறது. எந்தக் கொலை ஆகட்டும், போலீஸாரை வைத்துக்கொண்டு அவர்கள் கண் எதிரே யாரும் கொலை செய்வதில்லை. ஆர்தர்! நாம் எல்லோருக்கு பொது. தனிப்பட்ட முறையில் உனக்கோ அல்லது எனக்கோ மானேஜர் கண்ணன் மீது, அல்லது கொலையுண்ட ராமதுரையின் மனைவி ராதை மீது வன்மம் கிடையாது. குறிப்பாக எனக்கு இல்லை! கடமைக்காகச் செய்கிறோம். நியாயம் குற்றவாளியின் பக்கமிருந்தால் அவனுக்கு விடுதலை கிடைத்து

விடுகிறது. அப்பொழுதுகூட அதற்காக நாம் ஏமாற்றப் பெரு மூச்சு விடுகிறேமா? கொலை வழக்குகளில் திரபராதிகளைத் தண்டிக்க வேண்டும் என்ற ஆசையுடனு நாம் நம் கடமைகளை நிறைவேற்றுகிறோம்...?

"உதாரணத்திற்கு என்னையே எடுத்துக் கொள், ஆர்தர். நான் ஒய்வு பெறப்போகிற வயதாகிவிட்டது. நான் என்னுடைய உத்தியோக காலத்தில் எத்தனையோ கொலை, மோசடி வழக்கு களை நடத்திக் குற்றவாளிகளைத் தண்டனை பெறச் செய்திருக் கிறேன். அவைகளில் அநீதம் இருந்தால் கொடுமைப்படுத்தப் பட்டவர்கள் குமுறி இருப்பார்கள். அந்த வயிற்றெரிச்சல் என்னை இப்படி வாழ வைத்திருக்குமா? எல்லாவற்றிற்கும் மேலாகக் கடவுள்தான் என்னைச் சுபிக்ஷமாக வாழ வைத்துக் கொண்டு போவாரா? அதை யோசித்துப்பார், நீயே!

"கணக்கன் வாஞ்சிநாதன், தான் கையாடிய பத்தாயிரம் ரூபாயை மறைப்பதற்காக ஏன் கொலை செய்திருக்கக்கூடாது என்று கேட்கிறாய். கணக்கைப் பரிசோதித்தபோது ரொக்கத்தில் பத்தாயிரம் குறைவது வாஸ்தவம்தான்! ஆனால் அதே பத்தாயிரம் ரூபாய் மானேஜர் கண்ணனிடம் இருப்பதைக் கண்டோம்! இப் பொழுது இந்தக் கொலையை வேறொரு விதத்தில் அனுமானித்துப் பார்.

"கொலை நடப்பதற்கு முந்திய தினம்தான் கண்ணன் குறிப் பெழுதி ராமதுரைக்கு அனுப்பியிருக்கிறான். மறுநாள் கொலை நடந்திருக்கிறது. கொலை நடந்த நேரத்தில் கணக்கப்பிள்ளை வாஞ்சியும் ராமதுரை வீட்டில் இருந்திருக்கிறான். இந்தச் சூழ்நிலையை அனுசரணையாகக் கொண்டு, கண்ணன் ஏன் ராம துரையைக் குத்தியிருக்கக் கூடாது? போலீஸார் கையில் அந்தக் குறிப்பு கிடைப்பதற்கும், கொலை நடந்த சமயத்தில் வாஞ்சி நாதன் மட்டுமே இருந்ததற்கும், வாஞ்சிநாதன் மேல் குற்றம் சாரும் என்று கண்ணன் ஏன் நினைத்திருக்கக்கூடாது? இப்படி ஏன நான் யூகிக்கிறேன் தெரியுமா? குறைவு படும் பணம் பத்தாயிரம் கண்ணன் கையில் இருக்கிறது. 'அது ஏன்?' என்று கேட்டால் ராமதுரை கொடுத்தார் என்கிறான்! இது உனக்கு வியப்பைக் கொடுக்க வில்லையா?

'இப்பொழுது சம்பவத்தைக் கோர்வையாகச் சொல்லு கிறேன், உன் மனது பிறகாவது சமாதான மடையட்டும்.

"ஆர்தர்! கண்ணனுக்கும் கொலையுண்ட மில் முதலாளி ராமதுரையின் மனைவி ராதைக்கும் சிறு வயதில் தொடர்பு இருந் திருக்கிறது. 'உடலால் இல்லை; ஆனால் உள்ளத்தால் இருந்தது' என்று ராதையே கூறுகிறாள். நாகரிகம் முன்னேறிவிட்ட இந்தக் காலத்தில் இதை நான் நம்புவதற்கில்லை நான் சொல்லுவது எவ்வளவு தூரம் உண்மை என்பதை இன்று சரமாரியாக வெளி வரும் காதல் நவீனங்களிலிருந்து அறியலாம். ஒரு பெண்ணின் உள்ளத்தில் எந்த ஆடவனும் எளிதில் இடம்பெற முடியாது. அப்படிப் பெற்றுவிட்டால் தன் ஹிருதய நாயகனை ஆயுள்வரை

அந்தப் பெண்ணால் மறந்திருக்கவும் முடியாது, காதலுக்காகத் தியாகம் என்பதெல்லாம் கதைகளிலே காணலாம். ஆனால் ஆயிரத்தில் ஒன்று அப்படி இல்லாமல் இல்லை. அந்த ஒருத்தியை ஏன் ராதையாக எடுத்துக்கொள்ளக்கூடாது என்று நான் சிந்தித்ததுண்டு. அப்படி அவள் இருந்திருந்தால் ராமதுரைக்கு வாழ்க்கைப்பட்ட பிறகு ஏனிந்தக் காதல் கடிதம் எழுதுகிறாள்?

"அவளுக்குத்தான் சபல புத்தி! தூய்மனம் கொண்டவனாக மானேஜர் கண்ணன் இருந்திருந்தால், 'உள்ளத் துடிப்பில் ராதை ஏதோ எழுதி விட்டாள்' என்பதாகக் கருதியிருக்க மாட்டானா? பதிலும் எழுதுகிறானென்றால் அவனது நெடு நாளைய ஆசையும், அந்த மில்லில் வேலைக்கு வந்து சேர்ந்த நோக்கமும் கண்ணாடி போலப் பிரதி பலித்துக் காட்டவில்லையா?

"கொலை நடப்பதற்கு முன் தினம் ராமதுரை தன் மனைவியோடு டெலிபோனில் பேசியிருக்கிறார். என்ன பேச்சு நடந்தது. என்று கேட்டபோது 'என் மானம் போகிறது. நீ வந்து காப்பாற்று என்று ராமதுரை கூறியதாக ராதை சொல்லுகிறாள். அதுவும் அவர் பேசியது சாத்வீகத் தொனியிலாம்! பொதுப்படையாக மனிதனின் உள்ளத்தையும், உடலையும், உயிரையும் துடிக்க வைக்கக் கூடிய சக்தி எதற்காவது உண்டென்றால் அது வேறு எதுவும் இருக்கமுடியாது. தனக்கு உற்றவள், தன் அன்புக்குப் பாத்திரமான மனைவி, மாற்றானின் விளையாட்டுப் பொருளாகி விட்டாள் என்பதைக் கண்டாலோ கேட்டாலோ போதும்; அப்பொழுது புருஷன் மனம் நிம்மதியாயிருக்காது, உடல் உணர்ச்சியற்றுப் போகாது, உயிர் நெட்டுயிர்த்தி நிலைகொண்டு; விடாது; மனதிலே வேதனை தோன்றும்: உடல் பதறும்; உயிர் துடிக்கும், என்ன செய்கிறோம் என்பதை நிதானிக்காது. இந்த நிலையில் ராமதுரை தன் மனைவியைப்பற்றிய சோர நாடகத்தைக் கேட்ட பிறகும் 'ராதை' என்று அன்பு கனிய அழைத்து, பறிபோய்க் கொண்டிருக்கும் தன் மானத்தைக் காப்பாற்ற ஓடி வா என்று சொல்லியிருப்பாரா? ஏசி இருப்பார்! கனல் கக்கியிருப்பார்; உன் வாழ்க்கை இதோடு முடிந்தது என்று பேய்ச்சிரிப்புச் சிரித்திருப்பார் அது ஏன் ராதையை அதிரச் செய்திருக்காது? என்ன ஆகுமோ என்று அவள் பதைபதைத்திருக்கக்கூடாது?

"இப்படிப் பதைபதைத்துத்தான் இரவுக்கிரவே அவள் புறப்பட்டிருக்கிறாள் புருஷன் சொன்னது வீண் அபவாதம் என்று அவள் மனச்சாக்ஷிக்குப்பட்டிருந்தால் நேராக வீட்டுக்கு ஓடிவந்து புருஷனின் கால்களைப் பிடித்துக்கொண்டு 'பொய்....பொய்... பொய்...' என்று கதறி இருக்கமாட்டாளா? ரயிலை விட்டு இறங்கியதும் இறங்காததுமாய் கண்ணன் வீட்டுக்கு ஏன் போக வேண்டும்? அவளது கருத்தில் களங்கம் இருக்கிறது. கள்ள நட்பு பற்றிய செய்தி எந்த அளவில் எந்த உருவில் இருக்கிறது என்பதை விபரமாக அறிந்துகொள்ளக் கண்ணனிடம் போயிருக்கிறாள்

அவன் அவளிடம் என்ன சொன்னானோ தெரியாது. ஏதோ துர் எண்ணம் கொண்டு ராமதுரை பங்களாவிற்கு வந்திருக்கிறான். பேச்சு முற்றியிருக்கிறது. கோபத்தில் என்ன செய்கிறோம் என்பது தெரியாமலேயே பதட்டத்தில் அவன் குத்தியிருக்கக் கூடாதா?

''கொலைக் கேஸ்களில் நூற்றுக்கு எண்பது, இரண்டு காரணங்களையே அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. ஒன்று பண ஆசை; மற்றொன்று பெண்ணாசை. ஆனால் கண்ணன் விஷயத்தில் இரண்டுமே அடிப்படையாக அமைந்து விட்டன

''கணக்கன் வாஞ்சிநாதன் தன்னைப்பற்றி ராமதுரையிடம் ஏதோ சொல்லியிருக்கிறான் என்பதைக் கண்ணன யூகித்திருக் கிறான், அது பெரிதாவதற்கு முன்னால் வாஞ்சிநாதனின்மீது துவேஷத்தைக் கிளப்பிவிட்டால் தன்னைப் பற்றிய பொறாமையில் சொன்னதாக ஆகிவிடுமல்லவா? அதற்கு ஒரு சதி! ரொக்க இருப்பிலிருந்து பத்தாயிரத்தை மறைத்துக் கணக்கன்மீது பழி சுமத்தி விட்டால்—?

''தானே ராமதுரையே மனம் மாறிவிடுவார் கண்ணன் தன் திருட்டை கண்டுபிடித்து விட்டதற்காக இப்படிப்பட்ட ஓர் அபவாதத்தை வாஞ்சி இப்படிக் கிளப்புகிறான் என்று எண்ணி விடலாமல்லவா? இதை நான் ஊகிக்கவில்லை. கண்ணனிடம் அகப்பட்ட பத்தாயிரம் ரூபாய் சாக்ஷி சொல்லுகிறது!

''நம் மனதிற்குத் தோன்றுகிற அனுமானங்கள் ஒருபுறமிருக் கட்டும்; மனித மனங்களைத் தூரக் கட்டிவைப்போம். சாக்ஷியங் கள் கூடவா அவனுக்கு எதிரிடையாக நிற்கும்? குத்த உபயோகப் பட்டதாகக் கூறப்படுகிற கத்தியின் கைப்பிடியில் மானேஜர் கண்ணனின் கைரேகைதான் இருக்கிறது. பதட்டமாகப் பேசிக் கொண்டார்கள் என்பதற்குச் சாக்ஷி சொல்லக் கணக்கன் வஞ்சிநாதன் இருக்கிறான். அவர்களிடையே கள்ளத்தொடர்பு இருந்ததோடு, ஏதோ திட்டமும் உருவெடுத்திருக்கிறது என்ப தற்கு, ராதை; கண்ணன் ஆகியவர்களின் கடிதம் ருசுப்பிக்கிறது. காலையில் ராமதுரை பங்களாவிற்கு அவன் வந்திருந்தான் என்ப தற்குக்கதவில்காயாமல்இருந்த வர்ணம்கண்ணனின் சட்டையில் ஒட்டியிருப்பது கையும் மெய்யுமாய்ப் பிடித்துக் கொடுக்கிறது. குத்திவிட்டோமே என்று அவன் பதட்டமடைந்தான் என்பதைக் கார் சுவரில் உராய்ந்து சென்றிருப்பதன்மூலம் சொல்லித் தருகிறது. எந்தவிதக் காரணமும் இல்லாமல் யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் ரயில் ஏறியது, தப்பித்து எங்காவது ஓடிவிட வேண்டும் என்ற அவன் குற்ற மனப்பான்மையையே காட்டுகிறது. இன்னும் உனக்கு என்ன சொல்லச் சொல்லு கிறாய் ஆர்தர்? இவ்வளவு தூரம் நான் சொல்லிய பிறகாவது உண்மையைக் காணமுடிகிறதா?' என்று கேட்டுத் தன் நீண்ட விமர்சனத்தை முடித்து, பெருமூச்சு விட்டபடி ஆர்தரைப் பார்த் தார் இன்ஸ்பெக்டர் அருணகிரி.

திருப்தியடைந்தவர்போலத் தோன்றினார் ஆர்தர். அதுதான் சரியான சமயம் என்று நினைத்த அருணகிரி, ஆர்தருக்கு மேலும் தைரியமும் உற்சாகமும் ஊட்டலானார்.

"ஆர்தர்! நீ கர்த்தரை நம்புகிறாய். பாபம் என்ற ஒன்று இருக்கிறது என்று நம்புகிறாய். நான் சொல்லுவதுபோல கேஸ் நடத்து, ஒருபோதும் சத்தியம் தோற்காது: தர்மம் தலை குனியாது; நிரபராதி குற்றவாளியாக முடியாது. அதேபோல குற்றவாளியும் நிரபராதியாகித் தப்பிவிட இயலாது. நீ ஏன் கவலைப்பட வேண்டும்?" என்றார்.

தன்னுள்ளே சிரித்துக்கொண்டார் ஆர்தர். 'என்ன தான் இருந்தாலும் இன்ஸ்பெக்டர் அருணகிரி கைதேர்ந்த மனுஷர் தான், அவரை எதிர்த்து வாதாடியிருந்தால் என் கடமைக்கே ஓர் அப்பழுக்கு ஏற்பட்டிருக்கும்' என்று நினைத்துக்கொண்டார். மறு நாளே அவர் வழக்கைக் கோர்ட்டிலே பதிவு செய்தார்.

மில் முதலாளி ராமதுரையை மானேஜர் கண்ணன் கொலை செய்தான் என்றும், ராமதுரையின் மனைவி ராதை அதற்கு உடந்தையாக இருந்தாள். அல்லது கொலை செய்யச் சதி செய்தாள் என்பதாகவும் நீதி மன்றத்திலே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு ஒரு வழியாகக் கேஸ் முடிந்தது.

கண்ணன் மரண தண்டனை அடைந்தான். கொலைக்கு உடந்தையாக இருந்தாள் என்பதை நிரூபிப்பதற்கும், சேர்ந்து சதி செய்தே கொலை நடந்திருக்கிறது என்பதற்கும் போதுமான ருசு இல்லை என்பதாகக் கருதி ராதை விடுதலை செய்யப்பட்டாள்!

அத்தியாயம்: 8

---

## நீதி மயங்கிற்று?

மானேஜர் கண்ணன் கழுத்தைத் தூக்குக் கயிறு அரவணைத்து வருஷங்கள் இரண்டாகி விட்டன. அந்தக் கொலை பற்றிய நினைப்புக் கூட அறவே செத்துவிட்டது.

தூய வெள்ளை உடை அணிந்து, வெள்ளை ரவிக்கையுடன் சரத்தலையைக் கோதிவிட்டபடியே ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்த ராதையை, புது மில் மானேஜர் ஒருவர் வந்து கலைத்து சீல் போட்ட ஒரு சிறு பார்சலை அவளிடம் கொடுத்தார் இரண்டு வருஷங்களுக்கு முன்பு ராமதுரை கொலை செய்யப்படுவதற்கு முன் தினம்—அந்தப் பார்சல் ராமதுரையால் பாங்கில் டிபாஸிட் செய்யப்பட்டதென்றும், அப்படிச் செய்தபோது,

சரியாக இரண்டு வருஷம் கழித்து அது தன் மனைவி ராதையிடம் சேர்ப்பிக்கப்பட வேண்டும் என்று உரிமைப்படுத்தி இருந்ததாக வும் விபரம் கூறினார்.

"பாவம்! ஆசைப்பட்டு ஏதாவது நகைகள் வாங்கி எனக்காக பத்திரப்படுத்தியிருப்பார்" என்று சொல்லிக் கொண்டே பார்சலைப் பிரித்தாள் ராதை -

அதில் அவள் நினைத்ததுபோல நகையில்லை: காசு பணம் இல்லை; உயிலும் இல்லை. அதில் டைரி ஒன்று இருப்பதைக் கண்டதும் மலைத்துவிட்டாள்.

'அவ்வளவு முக்கியமானது அதில் என்ன இருக்கப்போகிறது!" என்று அந்த டைரியை வாசித்துக்கொண்டே போனாள். படிக்கப் படிக்க அவள் முகம் வியர்வையில் தோய்ந்தது கன்னக்கதுப்பு கள் சிவப்பேறி, நெற்றி நரம்புகள் புடைத்துப்போய், கண்கள் கோவைப் பழம்போல் சிவந்தன. ரௌத்ராகாரம் அவள் உடலைக் கிள்ளியெடுத்தது. விரித்த தலையை முடிந்துகொள்ளவும் மறந்து மதுரையைச் சுட்டெரிக்க வீறிட்டெழுந்த கண்ணகி போல் 'விர்'ரெனக் கிளம்பி வாசலிலே நின்றுகொண்டிருந்த காரில் ஏறி உட்கார்ந்துகொண்டாள்.

கார் பறந்து வந்து போலீஸ் ஸ்டேஷனில் நின்றது

"ஆர்தர்!" என்றாள் கடுமையாக அந்த தோற்றத்தைக் கண்டு நடுங்கிய சப்-இன்ஸ்பெக்டர் ஆர்தர், தன் ஆசனத்தை விட்டு எழுந்து நின்று அதில் உட்கார்ந்துகொள்ளும்படி ராதை யைக் கேட்டுக் கொண்டார்.

"நான் இங்கு உட்காருவதற்காக வரவில்லை ஆர்தர். மான மிழந்தவளுக்கு மட்டு மரியாதை என்பதும் தேவையில்லை. அதே போலக் கடமையில் தவறி அநீதி இழைத்துவிட்ட உமக்கும் நான் மதிப்புக்கொடுக்க விரும்பவில்லை. தர்மமும் நியாயமும் அழுகிச் செத்துவிட்ட இந்த யுகாந்திரத்திலே, கதி கெட்டவனுக் குக்கிடைக்கும் பரிசு தூக்கு மேடை! உண்மைக்கும் மானத்துக் கும் கிடைக்கக்கூடிய வெகுமதி வெள்ளை உடை; விபசாரி என்ற பட்டம்! அநீதி இழைத்து விட்ட நீங்கள் இன்னும் உயிரோடு தான் இருக்கிறீர்கள் ஆர்தர்! இந்த யுகதர்மத்தையும் தத்துவத் தையும நீங்கள் புரிந்துகொள்ளவேண்டுமானால் இதைப்படித்துப் பார்த்துக்கொள்ளுங்கள், உங்களது சட்ட திட்டங்களுக்கும் படித்துக்காட்டுங்கள்; படித்துவிட்டுச் சட்டமும் நீங்களும் எக்களியுங்கள்" என்றாள் கத்தினள் கொலுச்சபையில் பாண்டியனை ஏசிய கண்ணகிபோல.

அந்த டைரியை ஆர்தரின் மேஜைமீது விட்டெறிந்துவிட்டு வேகமாக வெளியேறினாள். கொலையுண்ட ராமதுரையின் மனைவி ராதை, கொலைக்குற்றம் சாட்டப்பட்டுத் தூக்குக்கயிற்றில் தொங்கிய மானேஜர் கண்ணனின் மாஜிக் காதலி ராதை!

நின்றபடியே ராமதுரையின் டைரியில் முதல் பக்கத்தை வாசிக்க ஆரம்பித்த சப் இன்ஸ்பெக்டர் ஆர்தர், கால்கள் தள்ளாடியதாலோ என்னவோ உட்கார்ந்துகொண்டார். வலது கையில் டைரி இருக்க இடது கையால் நெற்றியை அழுத்திப் பிடித்துக்கொண்டு, வாசிக்க ஆரம்பித்தார்.

அது ராமதுரை கைப்பட எழுதி வைத்த டைரி; அதைப் படிக்கும்போது சப் இன்ஸ்பெக்டர் ஆர்தரின் கைகள் நடுங்கின. அந்த டைரி—

"ராதை! இந்த டைரியை நீ வாசிக்கும்போது உன் ஆசை நாயகன் கண்ணன் கள்ளக்காதலின் கனிரஸத்தை என்றென்றும் அமரனாய் அருந்திக் கொண்டிருக்க வைகுந்தம் போயிருப்பான். ஆனால் உன் கொள்ளை ஆசையும் மடிந்துவிட்டதே என்று நீ மாய்ந்து மருகுவதைக் கண்டு களிக்க நான்தான் உயிரோடு இருந்து பார்க்காமல் போகிறேன்.

அழகின் போர்வையின்கீழ் நீ அருந்ததியாக வேஷமிட்டுக் கண்ணனுடன் கபட நாடகம் நடத்தியதையும், உன் இளவயதுக் காதலைப்பற்றியும் நான் அறிந்தபோது என் உள்ளம் எப்படிக் கொதிக்கும் என்று நினைக்கிறாய் ராதை? மானமுள்ள மனிதனுக்கு மகாமேரு போல செல்வமிருந்து, அழகான ஒரு மனைவியும் இருந்து மண்ணாளும் மன்னர் மன்னனே வந்து அவனிடம் இரண்டில் ஒன்றை இச்சித்தால், அந்த இரண்டில் எதைத் தானமாகக் கொடுப்பான் தெரியுமா? முன்னதை; ஆனால் பின்னதை இல்லை.

என்றோ ஒரு நாள், நீயும் கண்ணனும் நானில்லாத சமயத்தில் காதல் கலக்கத்தில் கலங்கித் தவித்ததாகவும், நீயும் ஏதேதோ பழங்கனவுகளில் மூழ்கித் தத்தளித்தது போலவும் ஒட்டுக்கேட்ட நம கணக்கன் வஞ்சிநாதன் சொன்னான், அவன் எந்த சந்தர்ப்பத்தில் சொன்னான், ஏன் அப்படிச் சொல்ல வேண்டும் என்று நானும் யோசிக்காமல் இல்லை. மில் கணக்கிலிருந்து அவன் கிட்டத்தட்ட பத்தாயிரம் ரூபாய் கையாடியிருப்பதை மானேஜர் கண்ணன் சம்சயத்தோடு என்னிடம் சொன்னதையும், நான் அவன் மீது எத்தகைய நடவடிக்கை எடுப்பேனோ என்றும் பயந்து பழகுவதையும் நான் அறியாமல் இல்லை. இந்தச் சமயத்தில் கண்ணனிடம் எனக்குப் பகை உண்டு பண்ணுவதற்காகக் கணக்கன் வஞ்சிநாதன் வீண் அபவாதம் கூறியிருப்பானோ என்று நான் சிந்திக்காமலும் இல்லை. முதலில் அதை என்னால் நம்பமுடியவில்லை உன்னை நேருக்குநேர் கேட்டுத் தெரிந்து கொண்டிருப்பேன். நான் உன்னைக்கேட்டு நான் கேள்விப்பட்டது பொய் என்றாகிவிட்டால் உன் அன்பிலே மாற்றுக் குறைந்துவிடுமோ என்று பயந்தேன். இதைத் தெளிவுபடுத்திக்கொள்ள நான் வேறொரு வழியைக் கையாண்டேன்.

அன்றைய நாட்களில் ஒரு தினத்தை நினைவுபடுத்திக் கொள். நான் கதை எழுதி அது பத்திரிகையில் வெளி வ

வேண்டும் என்று ஆசைப்பட்டதுபோலவும், சிறிதளவு எழுதி யிருப்பதாகவும், என் கதையில் வருகிற காதலி, தான் ஆசைப் பட்ட அன்பனுக்கு வாழ்க்கைப்பட முடியாமல் மாற்றானுக்கு வாழ்க்கைப்பட்டு, பிறகு புருஷன் வீடு வந்தும் பழைய காதலனை மறக்க முடியாமல்வேதனைகொண்டு புருஷனுக்குத் தெரியாமல் தன் ஆசைகளைக்கொட்டி அவனுக்குக் கடிதம் எழுதுவதுபோல வும் அதுவரை நான் கதை எழுதியிருப்பதாகவும் கதாநாயகி எழுதுவதாகஎழுத வேண்டிய காதல் கடிதத்தை எப்படி எழுத லாம் என்று தெரியாமல் நான் தவிப்பதுபோலவும் உன்னிடம் கூறி, 'உன் புத்திக்குத் தோன்றுகிறபடி ஒரு கடிதம் எழுதிக்கொடு கதையில் சேர்த்துவிடுகிறேன்' என்றேன்; நீயும் அதன்படியே ஒரு கடிதம் எழுதினாய்.

எழுதி முடித்ததும் "கீழே கையெழுத்துப் போட வேண்டும். உங்கள் கதையில் வரும் காதயின் பெயர் என்ன?" என்று நீ கேட்டாய். என் கதைலியின் கதாநாயகிக்கு என் ஆசை ராதை யின் பெயரை விட்டுவிட்டா வேறொரு பெயர் வைப்பேன் என்று நான் சொன்னதும். 'பைத்தியம்' என்று சிரித்துக்கேலி செய்து விட்டு ராதை என்று கையெழுத்திட்டுக் கடித்தை முடித்து என்னிடம் கொடுத்தாய்!

நீ அப்படி எழுதிய கடிதத்தைக் கதைக்கு நான் உபயோகப் படுத்தவில்லை, ராதை! உன் மனப்பூட்டைத் திறக்க அதை ஒரு திறவுகோலாக உபயோகித்தேன்.

நீ அப்படிப்பட்ட கடிதம் எழுதித் தந்த இரண்டு நாளில், கண்ணனிடம் பல காரியங்களை ஒப்படைத்துக் கவனித்து வரும்படி சென்னைக்கு அனுப்பிவைத்தேன். நாலைந்து தினங்களுக் குப்பிறகு உன் தந்தைக்கு உடல்நலமில்லை என்று செய்தி வரவே உன்னையும் பெங்களூருக்கு அனுப்பி வைத்தேன்.

மனிதனுக்கு விபரீத சந்தேகங்கள் ஏற்பட்டுவிட்டால் அவன் புத்தி எவ்வளவு நுட்பமாக வேலை செய்யும் என்பதற்கு நான் உதாரண புருஷனாக ஆகிவிட்டேன். நீ எழுதித்தந்த கடிதத்தை மானேஜர் கண்ணனின் விலாசத்திற்கு அனுப்பிவைத்தேன். நானும் அன்றிரவு சென்னைக்குப் பிரயாணமானேன்.

உங்களிடையே உள்ள கள்ள நட்பு உண்மையானால் உன் கடிதம் கண்ணனுக்குக் கிடைத்ததும் நிச்சயம் பதில் போடுவான். அதுவும், நானும் சென்னைக்கு வந்துவிட்டேன் என்று தெரிந்த போது தைரியமாக உனக்குக் கடிதம் எழுதி வீட்டு விலாசத் திற்கே தபால் போடுவானல்லவா? அதற்குச் சந்தர்ப்பம் தருவ தற்காகவேதான் நான் சென்னை போனதும். ஆனால் கண்ணன் புறப்பட்டு சென்னை சென்றபிறகு நீ பெங்களூர் போயிருக்கிறாய் என்ற விஷயம் அவனுக்கு எப்படித் தெரியப்போகிறது?

"இரண்டு தினங்கள் கழித்து ஊர் திரும்பினேன், நான் எதிர் பார்த்தபடியே காதல் பெருமூச்சை பெருகித அளவில் கொட்டி அவன் உனக்கு எழுதியிருந்த கடிதம் பங்களாவிலே பத்திரமாய் இருந்தது. கணக்கன் வாஞ்சிநாதன் என்னிடம் சொன்னதை நிஜமென அது ஊர்ஜிதப்படுத்தியது.

அதைப் படித்துப் பார்த்தேன். அன்று மட்டும் நீ என் பக்கத்திலே இருந்திருந்தால் பாளம் பாளமாக உன்னை வெட்டி எறிந்திருப்பேன். ஆனால் நீ இல்லாததும் ஒரு விதத்திற்கு நல்லதாகிவிட்டது.

என் மனம் சுக்கு நூறாகிவிட்டது. எனக்கு இனி வாழ்வில்லை என்று கசந்து கொண்டேன். மனதிலே மறையாத ஒரு வடுவை வைத்துக்கொண்டு வாழ்ந்தால் அதில் என்ன சுகம் இருக்கப்போகிறது? நான் சாகத்துணிந்தேன்.

"என்ன குற்றம் செய்தாய் நீ! உன்னை மாய்த்துக்கொள்ள?' என்றது என் மனச்சாக்ஷி. நான் செத்துவிட்டால் மானேஜர் கண்ணனுக்கு ஆனந்தம். உன் சாஸ்வதமான ஆசைக்கும் நான் இடமாக்கித் தந்தது போல ஆகும். நான் செத்து உங்கள் காதல் வாழ்வுக்கு இடம் தந்தால் என்னைப் பார்த்து உலகம் சிரிக்காதா?

கபடு செய்த கண்ணனைத் தீர்த்துவிட தீர்மானித்தேன். தீர்த்துவிட்டால் அதோடு தீருகிறதா? என் கைகளில் விலங்கு, கழுத்திலே சுறுக்கு; வேதனைப்பட்ட சாவு. நீ உயிரோடு இருந்து சுகப்பட விடவும் என் மனம் இடந்தரவில்லை. உன்னோடு குலவ யாரையும் விட்டு வைக்கவும் நினைக்கவுமில்லை. திடீர் சாவை நான் அனுபவித்து, துடிதுடித்துச் சாகும் துன்பத்தைக் கண்ணனுக்குத் தரச் சதி செய்தேன்.

ராதை! உன் சோர நாடகத்தைத் தெரிந்து. ஒரு நாளில்லை, ஒரு வாரமில்லை, ஒரு மாதகாலம் நெருப்பில் பட்ட புழுவாகத் துடித்தேன். உள்ளூரத் தீராத வியாதியால் துயருறும் சமயங்களில் தற்கொலை செய்துகொள்ள முயன்றதுண்டு. இப்போது இந்த ஆத்திரமும் சேர்ந்த பிறகு...? ஆத்திரத்தில் என்னை மட்டும் அழித்துக்கொள்ள விரும்பவில்லை. என்னை நீ வஞ்சித்தாய்; நானும் அதே வஞ்சனையைக் கையாண்டல்லவா உங்களிருவரையும் பழி வாங்க வேண்டும்? வஞ்சனையை வஞ்சனையால்தான் வஞ்சிக்க வேண்டும் ஒரு முடிவுக்கு வந்தேன்.

அந்த என் முடிவு முரட்டுத் தைரியத்தில் என்னை அறியாது எழுந்த ஆவேசம் அல்ல. சாந்தமாக, மிகவும் பொறுமையாகவே தான் தீர்மானித்தேன். என் மனதை நானே பல தடவைகள் தொட்டுப் பார்த்துக் கொண்டேன். ஆத்திர புத்தியில் நான் அவசரப்பட்டு எதுவும் செய்வதாக எனக்கு அது சொல்லவில்லை. உங்கள் கள்ளக்காதலரால் என் உயிரை மாய்த்துக்கொள்ளத்

துணியும் என்னைப் பைத்தியக்காரன் என்று நினைப்பாய். பைத்தியக்காரக் குடும்பத்தில் பிறந்த என்னையும் ஒரு சித்த சுவாதீனமற்றவனாய்த்தானிருப்பேன் என்று நம்புவாய்...ஆனால் ... ஆனால்.. என் மனைவியின் அவமானகரமான கள்ளக் காதல் என்னைப் பித்துக் கொள்ளியாக்கிவிட்டது.. வியாபாரத்தில் எதிர் பாராத நெருக்கடிகள் நேரும்போதும், வியாதியால் துன்புறும் போதும் நான் பல சமயங்களில் தற்கொலை செய்து கொள்ள வேண்டுமென்று துடிப்பேன்...அந்தத் தற்கொலை வெறி என் ரத்தத்தில் ஊறிப்போய்க் கிடந்தது. இப்போது என் தற்கொலை மூலம் உன் கள்ளக் காதலன் கண்ணனுக்கும் சாவைத் தேடிவிட முயன்றேன் அதோடு உனக்குத் துயரையும் பழியையும் தர விரும்பினேன்......அந்த வெறி என் தலைக்கேறியதும்...? வஞ்சக வலையைப் பரப்பிவிட ஆரம்பித்தேன். என்னை உன் கள்ளக் காதலன் கொன்றான் என்று தூக்குமேடைக்கு அனுப்பத் திட்டம் தயாரித்தேன்...

நான் சாகத் துணிந்த நாள் விடிந்தது. காலையில் எழுந்தேன் கார் விட்டு வைக்கப்பட்டிருந்த 'ஷெட்'டிற்குப்போனேன். காரை வெளியே எடுத்தேன். அலக்ஷியமாக, வேண்டுமென்றே சுவற்றில் காரை உராயவிட்டு மீண்டும் உள்ளே நிறுத்தினேன்.

வெளியே வந்தேன். ஷெட் வாசலில் ஒரு குடம் தண்ணீர் ஊற்றித் தரையை ஈரமாக்கிவைத்தேன். எதற்கென்று கேட்பாய். உன் காதலனின் கால் தடம் பதிய வேண்டாமா?

மேலும் கவனி. அதற்கு முன் இரவு நடுக்கூடத்தில் மேலே உயரத்தில் பொறுத்தப்பட்டிருக்கும் ஜன்னலை மூடவோ திறக்கவோ குஞ்சலத்தோடு கூடிய கயிறு இருக்கிறது பார், அந்தக் கனத்த குஞ்சலத்திற்குள் ஒரு கத்தியைச் சொருகி அதன் பிடி தெரியாமல் பட்டுத்துணியால் அதைச் சுற்றி, கத்தியின் பிடி கயிற்றின் நுனியாக இருப்பதுபோலக் கட்டிவிட்டேன். அதில் இரண்டொரு இடத்தில் கதவுக்கு அடிக்கும் பெயின்டைத் தடவி வைத்தேன் வீட்டுக் கதவுகளுக்கும் ஜன்னல்களுக்கும் இரவுக் கிரவே வர்ணம் அடித்தாகவேண்டும் என்று மில் மேஸ்திரிக்கு உத்திரவு போட்டேன். இதெல்லாம் பைத்தியக்காரத்தனமாகத் தோன்றலாம். இது எவ்வளவு புத்திசாலித்தனமானது என் பதைச் சந்தர்ப்பம் வரும்போது சொல்கிறேன்.

இப்பொழுது எல்லாமே தயார். கணக்கன் வாஞ்சிநாதனை உடனடியாக வீட்டில் வந்து சந்திக்கும்படி அதிகாலையிலேயே செய்தி அனுப்பினேன். சரியாக ஏழுமணிக்கு அவன் வந்து சேர்ந்தான்.

உன் ஆசைநாயகன் மானேஜர் கண்ணனுக்கும் டெலிபோன் செய்து, அவசரமாக அழைத்தேன். என்னவோ ஏதோ என்று பதறி அடித்துக்கொண்டு ஓடிவந்தான்.

கண்ணன் வந்தபோது ஹாலின் சோபாவில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். முதலில் சாதாரணமாகவே பேச்சைத் துவக்கினேன். பேச்சுக்கிடையே காற்றோட்டம் இல்லை என்பதைக் கூறி, அந்த ஜன்னல் கயிறை இழுத்து விடும்படி கண்ணனிடம் கூறினேன். அதன்படியே செய்தான். எனக்கு வேண்டிய முதல் காரியமும் முடிந்தது. அந்தக் கத்தியின் பிடியில், அதில் தடவியிருக்கும் வர்ணத்தில், அவன் கைரேகை பதிந்துவிட்டது!

மெதுவாக உன் பேச்சை ஆரம்பித்தேன். வாசல் வராந்தாவில் நிற்கும் கணக்கன் காதுகளுக்கு நான் ஆத்திரத்தில் கண்ணன்மீது சீறி விழுந்து கொண்டிருக்கிறேன் என்பது விழுமல்லவா? அதற்காக இரைந்தே பேசினேன். தான் ராதைக்கு எழுதிய கடிதம்என் கைக்கு அகப்பட்டு விட்டது என்று யூகித்துக் கொண்ட மானேஜர் கண்ணன் பிரமை பிடித்ததுபோல அசைவற்று நின்று கொண்டிருந்தான்.

எனக்கு அவனைப் பார்க்கபார்க்க ஆத்திரம்மேலிட்டது சோபாவை விட்டு எழுந்து நின்று கூச்சல் போட்டநான், நின்று கொண்டிருந்த கண்ணனை நோக்கி முன்னுக்கு நகர ஆரம்பித்தேன். நான் முன்னேறிச் செல்லச்செல்ல கண்ணன் பின்னுக்கு நகர்ந்து கொண்டே போனான். முடிவில் பெயிண்ட் அடிக்கப்பட்டகதவு தட்டுப்பட்டதும், அதற்கு மேல் நகர முடியாத அவன், கதவின் மேல் சாய்ந்து நின்றான்.

ஈரப் பெயிண்ட் அவன் உடைகளில் ஒட்டவேண்டும் என்பது தான் என் கோரிக்கை. இப்பொழுது அதுவும் முடிந்தது. கொலையைப்பற்றிப் போலீசில் ஆராயும்போது கதவின் பெயிண்ட் அழிந்திருப்பதைக் காண்பார்கள் அந்தவர்ணம் யார் மீது இருக்கிறதோ, அவன் தானே இலக்கானவன்? அந்தச் சாக்ஷியமும் தேடி வைத்து விட்டேன்

மேலும் நான் திட்டுவதால் எதிர்பார்த்தது விபரீதமாக முடிந்து விடுமோ என்பதற்காக நடந்துபோனதைச் சமாதானப் படுத்திக்கொள்பவன் போல பாசாங்கு செய்தேன். ஆத்திரத்தில் பேசிவிட்டதாகக்கண்ணனைச்சமாதானப்படுத்தினேன். அரைமணி நேரத்தில் புறப்பட இருக்கும் பெங்களூர் ரயிலைப்பிடித்து ஊர் போய் உன்னை உடனடியாக அழைத்து வந்து என்னிடம் சேர்ப்பித்தால்தான் என் மனம் ஒரு நிலைப்படும் என்பதுபோல அவனிடம் சொன்னேன். அவனும் சரிஎன்று ஒப்புக் கொண்டான்.

மறுபடியும் எனக்குவேறு ஒரு யோசனை தோன்றியது. பெட்டியைத்திறந்து ரூபாய் பத்தாயிரம் எடுத்து அவனிடம் கொடுத்தேன். நீ அவசரமாகக் கேட்டிருப்பது போலவும் உன்னிடம் சேர்ப்பிக்கும் படியும் கூறினேன். அதையும்வாங்கிக்கொண்டான்.

இந்தச் செய்கையின் நோக்கத்தையும் சொல்லிவிடுகிறேன். நான்வைத்த குறிதவறி. கணக்கன் வாஞ்சிநாதன் மீது சந்தேகம் ஏற்படுமானால் கண்ணன் தப்பித்துக் கொள்ளப்போதிய ஆதாரம் இருக்கிறது. அதற்கு நான் வழி கொடுக்க முடியுமா? மில்கணக்கில்

குறைகிற பணமானரூபாய் பத்தாயிரம் கண்ணன் வசம் இருந்தால் அது போலீஸாருக்கு எவ்வளவோ உதவியாக இருக்குமல்லவா? மூன்றாவது சாக்ஷியத்தையும் ஒரு வழியாய் ஜோடித்து விட்டேன்.'

இனி, கண்ணனை பெங்களூருக்கு அனுப்ப வேண்டியதுதான் பாக்கி, அவனை அவசரப்படுத்திக் கிளம்பச் சொல்வேன். ரயில் புறப்படக்குறுகிய நேரமே இருப்பதால் ஷெட்டிலிருந்துஎன் காரை எடுத்துக்கொண்டு ஸ்டேஷன் போய், அங்கு காரை நிறுத்திவிட்டு ரயிலேறும் படியும், டிரைவர்வந்ததும் அதைத் திரும்ப எடுத்துவரச் சொல்வதாகவும் யோசனை கூறுவேன். முட்டாள்! புறப்பட்டுவிடுவான்.

கண்ணனைச் சிக்கவைக்கத் திட்டம்முடிந்தது. உன்னை மட்டும் உல்லாசமாகத் திரியவிட்டுவிடுவேனு? அதற்கும் சூழ்ச்சி செய்தேன். முந்திய இரவு உன்னை டெலிபோனில் அழைத்துப் பேசினேன். முக்கியமான செய்தியைச் சொல்லி,' ஊர்வந்ததும் நேராகக் கண்ணனைப் பார்த்துவிட்டு பிறகு வீட்டுக்கு வா' என்று தகவல் தந்தேன். ஏனென்றுகேட்கிருயா? நீ ரயிலை விட்டு இறங்கி அவன் வீடுபோய்ச் சேருவதற்குள் அவன் தன் வீட்டைவிட்டுக் கிளம்பி என் பங்களாவிற்குவந்து சேர்வான். அதனால் நீங்கள் சந்திக்க வழியில்லை. அதன் முலம் கொலைக் குற்றத்திற்கு நீயும் உடந்தையாய் இருந்தாய் என்பதை அது சுட்டிக்காட்டுமல்லவா?

சாஷியங்கள் தேடிவைத்தாகிவிட்டன, போலீஸார் கேஸை நன்கு நடத்த ஏற்பாடுகள் செய்துவிட்டேன். இனிக் கடைசி வேலைபாக்கி. கயிற்றிலிருந்து கத்தியை என் கைரேகை படாமல் பிரித்தெடுப்பேன். இரண்டு கதவுகளுக்கும் இடையே கத்தியை வைத்துக் கதவை மூடுவேன் சாத்தப்பட்ட கதவு கத்தியைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளும்.

அப்புறம் என்னவா? கருகிப்போன என் ஹிருதயத்தை அதில் மோதவிட்டுக் கொள்ளப் போகிறேன்....!

ஆனல், ராதை! இந்த டைரியை நீ படிக்கும்போது உன் உள்ளம் துடிதுடிப்பதை ஆவிரூபத்தில் நான் திரிந்து கொண்டிருந்தால். நீ மருகிச் சாவதைப் பார்த்துப் பார்த்து உள்ளூரச் சிரித்து மகிழ்வேன். நானுமில்லாமல் உன் ஆசைக் கண்ணனும் இல்லாமல் உன் பருவ இளமை பாழாவதைப் பார்த்துப் பார்த்துப் பரவசமடைவேன். நீ செய்த சண்டாளத்தனத்திற்கு நான் செய்த வஞ்சனை ஈடாகவில்லையா?

உன் கணவன்,
ராமதுரை."

டைரியைப் படித்து முடித்ததும் பதறினர் சப்-இன்ஸ்பெக்டர் ஆர்தர். மோட்டர் சைக்கிளை எடுத்துக்கொண்டு விரைந்தார் இன்ஸ்பெக்டர் அருணகிரியிடம். டைரியை அவருக்கு முன்னல் மேஜைமீது விட்டெறிந்தார். "தர்மத்தைத் தலை குனியவைக்கும் இந்தக் கொலைவழக்கிற்காக அமைதியையும்

ஒழுங்கையும் நிலைநாட்ட நான் இஷ்டப்படவில்லை. இன்ஸ்பெக்டர்!'' என்று கூறிவிட்டு 'விர்'ரென வெளிக் கிளம்பி வீடு போய்ச் சேர்ந்தார் ஆர்தர்.

அந்நியே எதுவும் நடக்காததுபோல அலக்ஷியமாக அந்த டைரியைப் படித்துக் கொண்டிருந்தார் இன்ஸ்பெக்டர் அருணகிரி.

சப்-இன்ஸ்பெக்டர் ஆர்தர் வீடு வந்து சேர்ந்தபோது அவருக்கு தாவு ஜுரம். நடுங்கிப் பதைபதைத்தாள் ரோஸ்லின். "ரோஸி! என் கடமையில் இரண்டாந்தரமாக ஒரு பெண்ணின் பாவத்தைக் கட்டிக்கொண்டு விட்டேன். கர்த்தர் இனி என்னை மன்னிக்கவே மாட்டார். ரோஸி!'' என்று குமுறிக்கொண்டே கட்டிலில் தடாரென்று சாய்ந்தார் ஆர்தர்.

"நீ தவறு செய்யவில்லை ஆர்தர்!'' என்று சொல்லியபடியே உள்ளே வந்து கொண்டிருந்தார் இன்ஸ்பெக்டர் அருணகிரி.

"இறந்த ராமதுரையின் டைரியைப் படித்துப் பார்த்தேன். ஆர்தர். ஒப்புக்கொள்கிறேன். அதன்படியே தான் எல்லாம் நடந்திருக்க வேண்டும். உள்ளபடியே மானேஜர் கண்ணனும் ராதையும் நிரபராதிகள் என்று இப்பொழுது தெரியலாம். ஆனால் ஆர்தர், குற்றவாளிகளைக் கண்டுபிடித்து அவர்களுக்குத் தகுந்த தண்டனை வாங்கிக் கொடுப்பதே நம் கடமை. அதை நீ நிறைவேற்றிவிட்டாய்!.......

"கர்த்தரை நீ நம்புகிறாய். அதனால் உனக்குக் கடவுள் நம்பிக்கை சாகவில்லை என்பதை உணர்கிறேன். கடவுளை நம்பினால் தர்மம் தலைதூக்கி நிற்கிறது என்பது தான் அர்த்தம். சட்டம் தர்மத்தைத் தலைகுனிய வைக்க முயற்சித்தால் கடவுள் அதைக் கண்டு ஒரு போதும் சகித்திருக்க மாட்டார். தர்மத்தைச் சட்டம் தலைகுனிய வைத்துவிட்டதாகத் தடுமாறாதே, நீதி சில சமயங்களில் மயங்கி விட்டதுபோலத் தோன்றும், ஆனால் கர்மா அதைத் தெளிவு படுத்தி வைக்கும். பிறகு அது கொடுக்கும் தண்டனை ஒருபோதும் அநியாயமாக இருக்காது. நான் சொல்வதை நம்பு ஆர்தர்!'' என்று சமாதானப்படுத்தினார் அருணகிரி.

சமாதானப்படுத்தும் அருணகிரியின் முகத்தை ஏறிட்டுக்கூடப் பார்க்காமல் சுவரிலிருந்த படத்தைப் பார்த்தார் ஆர்தர். கர்த்தர் அப்பொழுதும் கருணையைப் பொழிந்து கொண்டுதானிருந்தார்.

"எதைச் சொல்லப் போகிறீர்கள்? நான் எப்படி நம்ப வேண்டும் என்கிறீர்கள்?" என்று சாந்தமாக அருணகிரியைப் பார்த்துக் கேட்டார் ஆர்தர்.

"பைத்தியக்காரப்பிள்ளை!'' என்று கடகடவென்று சிரித்தார் அருணகிரி. "சட்டம் என்பது எதற்காக வகுக்கப்பட்டிருக்கிறது தெரியுமா?'' என்று பெருமிதத்தோடு ஆர்தரைப் பார்த்துக் கேட்டார்.

"குற்றம் புரிந்தவர்களுக்குத் தண்டனை அளிப்பதற்காகவே ஏற்பட்டது!" என்ருர் ஆர்தர்.

"அப்படிச் சொல்லாதே ஆர்தர், நிரபராதிகள் எங்கே தப்பித் தவறி, மேலெழுந்தவாரியில் குற்றவாளியாக ஆக்கப்பட்டு விடுவார்களோ என்பதற்காகவே சட்டம் காவலாளிபோல கண் விழித்துப் பாதுகாத்து நிற்கிறது. அது கடுமையை மட்டும் தன்னுள்ளே கொள்ளவில்லை பார்க்கப் போனுல் அபரிமிதமான கருணையைத்தான் பொழிகிறது...

"ஆர்தர்! நியாயஸ்தல நடவடிக்கைதனை நீ கவனித்திருப்பாய்" ஒரு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டவுடன் 'சரிதான், என்று நீதிபதி உடனே வழக்கை எடுத்துக்கொண்டு விடுவதில்லை. குற்றச்சாட்டுக்குப்போதிய முகாந்திரங்கள் இருக்கிறதா என்பதை இருதரப்பு வாக்குமூலங்களைக் கொண்டும் ஆராய்ந்து குற்றப் பத்திரிகையைப் படித்து மேலே வழக்கு நடத்துவதா, அல்லது வழக்கைத் தள்ளிவிடுவதா என்று தீர்மானிக்கப்படுகிறது. பிறகு தான் வழக்கு பூர்வாங்க விசாரணைக்கு வருகிறது.

"அடுத்தபடியாக குற்றம் சாட்டுகிற தரப்பின் சாக்ஷிகள் விசாரிக்கப்படுகிருர்கள். எதிர்தரப்பும் சாக்ஷிகளைக் குறுக்கு விசாரணை செய்கிறது. இந்தச் சாக்ஷியங்களையும் குறிப்பிட்ட சம்பவக் கோர்வைகளையும் வெகு ஜாக்கிரதையாக நீதிபதி குறித்துக்கொள்வதோடு மட்டுமல்ல, பொதுமக்களிடையே கண்யமிக்கவர்கள் என்று கருதப்படும் பலர் நியாய தேவதையின் பிரதிநிதிகள் போலக் கூர்ந்து சிரத்தையோடு தப்பித்தவறிகூட தாம் தவறு செய்துவிடக்கூடாதே என்று பயந்து உன்னிப்பாய் நடவடிக்கைகளையும், அதனின்று கிடைக்கும் உண்மைகளையும் ஆராய்ந்துகொண்டிருப்பார்கள்.

"சாக்ஷி விசாரணை முடிந்ததும் குற்ற வழக்குப் பதிவுசெய்த வழக்கறிஞர், கைதிக் கூண்டிலே நிறுத்தப்பட்டிருக்கும் நபர் குற்றவாளிதான் என்பதற்கு சாக்ஷிகள் தரும் வாக்குமூலத்தையும் சந்தர்ப்பத்தையும் சுட்டிக்காட்டி விரிவான வியாக்யானம் தருகிருர். தன் கக்ஷிக்காரன் நிரபராதி என்பதற்கு எந்தெந்த சாக்ஷியங்கள் சாதகமாயிருக்கின்றன என்பதைக் குற்றவாளியின் சார்பாக ஆஜராகும் வக்கீல் அள்ளி அலசுகிருர். கவனமாகவும் கருத்தோடும் தீக்ஷண்யத்தோடும் கவனித்து வரும் நீதிபதி இருதரப்பின் வாதங்களையும் வைத்துக்கொண்டு' குற்றவாளிக்கு எதெது எதிரிடையாக நின்று குற்றச்சாட்டுகளுக்கு ருசுத்தருகிறது என்பதையும் அவனையே நிரபராதியாகக் காட்ட எதெது குறுக்கே நிற்கிறது என்பதையும் ஜூரிகளின் தீர்மானத்திற்காகவும் அவர்கள் ஒரு முடிவைச் சொல்ல உதவிக்காகவும் சவிஸ்தாரமாக பக்ஷபாதம் இல்லாமல் விளங்கச் சொல்கிருர். குற்றம் சாட்டப்பட்டவன் குற்றவாளிதானு இல்லையா என்பதை நிர்ணயிக்கக் கூடுகிருர்கள் ஜூரிகள்.

COMICS PDF TIMES

"அதைச் சொல்லத்தான் இவ்வளவு பீடிகையும் போட்டேன். என் பீடிகை பலனற்றுச் செத்துவிட்டதே என்று கருதுகிறாய். ஆனால் அதுதான் வேடிக்கை ஆர்தர்! இவ்வளவுக்குப் பிறகும் சொல்லுகிறேன், எனக்குக் கிடைக்க வேண்டிய தண்டனையைத்தான் மானேஜர் கண்ணன் பெற்றான்!'' என்று ஆரம்பித்தார் இன்ஸ்பெக்டர்.

"ஆர்தர்! சட்டம் என்பது நீதி தேவதையின் சாட்சாத் மெய்ப்பாதுகாப்பு என்று நான் சொல்லவில்லை. அது நீதி தேவதையின் படை வீரர்கள்போல. அரசியல் நிகழ்ச்சிகளில்கூட நீ பார்த்திருப்பாயே. படைவீரர்கள் அரசனையே எதிர்த்து வருவதும் உண்டு. அப்போது அரசனின் உயிரைக்காப்பாற்ற மெய்க்காப்பாளர்கள் உயிர் கொடுப்பார்கள். நீதி தேவதையின் ஆக்ஷியிலே வெய்க்காப்பாளனாக அந்தஸ்து வகிப்பது தர்மம் என்பதாகும், அதுபோல சட்டம் என்ற தேவதையின் ராணுவ வீரர்கள் கட்டுத்திட்டம் என்ற கடமையில் புத்தியைக்கடன் கொடுத்து விடுவதும் உண்டு. ஏன் அப்படி என்கிறாயா? சட்டத்தை நீதிதேவதை இயற்றவில்லை, நம்மைப்போன்ற சாதாரண மனிதர்களின் திட்டத்தினின்றும், ஆனால் அதி தீக்ஷண்யத்துடன் நிர்ணயிக்கப்பட்டதாகும். கனவிலும் கருத முடியாத கண்யமிக்கவர்கள்கூடத் தவறு செய்வதில்லையா? அப்படி இருக்கும்போது அவனது சிருஷ்டியிலிருந்து எழும்பி எல்லை வரம்பு கொண்டிருக்கும் சட்டம் தவறிவிடுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை, அப்படிப்பட்ட சமயங்களில் நீதியும் கடவுளும் இல்லையா என்று குற்றவாளியின் மனம் ஓலமிடும். அழிவும் முடிவு கிடைத்த ஒரே நிமிஷம்தான், அடுத்தகணம் 'வீண் பழி சுமத்தாதே குழந்தாய்' என்று தர்மம் குறுக்கிட்டு அவன் மனதிலே சாந்தி நிலவப் பாடுபடும். அதன்பிறகு 'எனக்கு இந்தத் தண்டனை வேண்டியதுதான்'' என்று அவனே மனமார முணுமுணுப்பான்!

''இது உன்க்கு வேடிக்கையாகத்தான் தோன்றலாம் ஆர்தர்! ஆனால் எனக்கு இது சகஜமாகிவிட்டது! எப்படி என்று கேட்கிறாயா?

"கொலையுண்ட ராமதுரையைக் கண்ணன் கொல்லவில்லை என்பதை முடிவு கூறப்பட்ட அன்றே நான் ஓரளவு தெரிந்து கொண்டேன். கண்ணனே மனமுடைந்து சொன்னான். நம்பத்தான் செய்தேன், என் மனம் நம்பவும் செய்தது. ஆனால் அதற்காக அநியாயமாக ஒரு உயிரை வாங்கிவிட்டோமே என்பதற்காக நான் கண்ணீர் சிந்தவில்லை. ஏன்? அவனுக்குக் கிடைக்க வேண்டிய தண்டனையை அவன் பெற்றிருக்கிறான் என்பதுதான் என் தீர்மானம்! அதை ஊர்ஜிதப்படுத்தியது அவன் கண்களிலிருந்து வழிந்த நீர் அநியாயத்தின் சந்நிதானத்திலேதான் பலியிடப்படுகிறோமே என்று வேதனைப்பட்டல்ல!

"விசித்திரமான ஒரு பேரக்கும் ஆவலும் எனக்கு உண்டு. நான் பதிவு செய்யும் கேஸ்களின்மூலம் தண்டனை அடைந்தவனை அவனை இறுதியான சிறைக்குக் கொண்டுபோகும் முன் தனித்துச் சந்திப்பேன்; மனம்விட்டுப் பேசுவேன். விதி ஒரு முடிவை நிர்ணயித்துவிட்ட இந்தச் சமயத்திலாவது, அவன் மனதைத் திறந்து எதையும் ஒளியாமல் சொல்லச் சொல்லுவேன். தண்டனை கிடைப்பதற்குமுன் ஒரேயடியாக இல்லை என்று சாதித்து வாதாடிய அவன் வாயிலிருந்தே 'செய்து உண்மைதான்' என்பான்: என் மனம் சாந்தியடையும். சில சமயங்களில் "ஐயோ! குறிப்பிட்ட இந்தக் குற்றத்தைச் சத்தியமாக நான் செய்யவே இல்லையே, கடவுளுக்குக்கூட ;நண்ணில்லையா?" என்ற கதறல்—குமுறல் கேட்பேன், என் மனம் சிணுங்கும். தன் மனதிலுள்ள ஆயாசத்தைக் கொட்டியபிறகு, ஒரு தன்னிலைக்கு வருவான். அப்பொழுதுதான் அவன் மனித மனம் மிளிர்ந்து சுடர்விடும். 'இந்தத் தண்டனை எஸ்க்கு வேண்டியதுதான், என்பான் முற்றும் துறந்த ஞானிபோல! என் மனமும் மலரும். குறிப்பிட்ட குற்றச்சாட்டு சம்பந்தப்பட்டவரை தான் நிரபராதியானாலும், 'முன்பு அதைச் செய்தேன், அப்படிச் செய்தேன், அந்தப்பாவம்தான் இப்பொழுது அனுபவிக்கிறேன்' என்று மனம் திறந்து சொல்வான். அவன் அப்பொழுது சட்டத்தைப் பழிக்கமாட்டான். நீதியைத் தூற்றமாட்டான்...

"இதுதான் உலகத்தை சிருஷ்டித்த இயற்கையின் கூத்து! அது உடனுக்குடன் பழிவாங்குவதில்லை: விட்டுப்பிடித்து, பிறகும் சகிக்காது போனால்தான் நீதிதேவதையைத் தூண்டுவாள். அவளது கட்டளைப்படி 'தர்மம்' என்ற வேவுகாரன் வலைவீசக் கிளம்புவான். அவனுக்கு தண்டனையளிக்க வேண்டும். அது தான் அவன் லக்ஷியம் 'பண்டம் ஓரிடம், பழியோரிடமா?' என்ற வேதாந்தத்தை அந்தத் தர்மம் சிந்திப்பதில்லை; ஜனங்களிடம் விட்டு விட்டுத் தன் காரியத்தைச் சாதித்துக்கொள்கிறது.

'இந்தத் தினுசில்தான் மானேஜர் கண்ணன் குற்றவாளியானான். உரிய தண்டனை பெற்றான்...

"தண்டனைபெற்றுக் கண்ணன் தூக்குமேடையை எதிர்பார்த்துச் சிறையில் இருந்த நாளில் ஒரு தரம் அவனைப் பார்க்கப் போயிருந்தேன். 'அநியாயமாக என் உயிரை வாங்க விட்டாயே பாபி!' என்று கத்திக் கீசுவானோ என்று எதிர்பார்த்தேன், ஆனால் அவன் கண்களிலே நிலவிய சாந்தம் இருக்கிறதே!—அவன் அப்போதுதான் கண்ணீரோடு ஒரு பெரிய உண்மையைச் சொன்னான். 'இன்ஸ்பெக்டர் ஸார்! சத்தியமாகச் சொல்லுகிறேன். ராமதுரையை நான் கொலை செய்யவே இல்லை, மனதால்கூட நினைத்தது கிடையாது. அப்படியிருந்தும் எனக்கு மரண தண்டனையா என்று அழமாட்டேன். இந்த உலகத்திலே பழியும் பாவமும் யாரையும் சும்மா விட்டு வைப்பதில்லை. இன்ஸ்பெக்டர், நான் ராமதுரையைக் கொல்லாவிட்டாலும் என்

ஆயுளில் மற்ெருரு உயிரை எடுத்திருக்கிறேன். சித்திரவதை செய்திருக்கிறேன். அந்தப் பாவம்தான் இந்த ரூபத்தில் என்னைச் சூழ்ந்து கொண்டுவிட்டது. இப்பொழுது என் மனம் குமுறவில்லை; நெஞ்சு துடிக்கவில்லை; கண்கள் நீரைச் சிந்தாது: உள்ளம் உருகாது நீ சாகவேண்டாம் என்று சிறையிலிருந்து என்னை வெளியே இழுத்து ஓட்ட முயன்ருல்கூட அதை ஏற்கமாட்டேன். நான் மனித ரூபத்தில் இருந்தாலும் அதன் குணங்கள் மறைந்து விட்டன" என்ருன். புழுங்கிய அவன் மனத்திற்கு தர்மதேவதை தன் அபூர்வ சக்தியால் ஆறுதல் கொடுத்து விட்டாள்!

"ஆர்தர்! கண்ணன் செய்த குற்றம் என்ன தெரியுமா? ராதையின் காதல் பிணைப்பு அறுந்த பிறகு எங்கிருந்தோ ஒரு பெண் அவனுக்கு மனைவியாக வந்து வாய்த்தாள். அவள் அழகில்லை. போதாததற்கு ராதையின் ஆசைத் துடிப்புகள் அவன் மனஸ்தைவிட்டு அகலாமல் இருந்தன. இந்த ஏக்கத்தில் அவனது மனைவி என்ன சுகமடைந்திருக்கப் போகிருள்? அழுது குமுறிக் குமுறி இளைத்தாள். கணவனின் அன்பு அப்பொழுதும் கிடைக்க வழியில்லை. இனி வாழ்ந்தென்ன என்ற முடிவுடன் கிணற்றிலே விழுந்து நிலையான ஒரு சாந்தியைத் தேடிக் கொண்டாளாம். அவள் தற்கொலை செய்து கொண்டாலும்கூட அந்த உயிர் அவனை விட்டுப் பிரிய எது காரணமாயிருந்தது? அந்தக் காரணத்துக்கு யார் கர்த்தாவாக இருந்தார்கள்? கண்ணன்! ஆனல் அது தற்கொலை என்று முடிந்துவிட்டதாம். உண்மையைச் சொல்லப்போனுல் கண்ணதான் தன் மனைவியைக் கொன்று கிணற்றில் தூக்கியெறிந்து விட்டான். அதைத் தற்கொலை என்று பெயராக்கிக் கொலைக் குற்றத்திலிருந்து அன்று தப்பி விட்டான். இன்று அதன் பலனை வேருெரு கேஸின் மூலம் அனுபவிக்கிருன், இப்பொழுது சொல், ஆர்தர், கண்ணனுக்குக் கிடைத்த தண்டனை சரிதானு இல்லையா என்பதை யோசித்துப் பார். அரசு அன்றே கொல்கிறது; தெய்வம் நின்று கொல்லும்!"

இன்ஸ்பெக்டர் அருணகிரியின் முகம் எவ்வளவு தெளிவோடு விளங்குகிறது என்பதைப் பார்த்துக்கொண்டே இருந்தார் சப்-இன்ஸ்பெக்டர் ஆர்தர்.

மெழுகுப் பொம்மைபோல சுவரிலே சாய்ந்து உட்கார்ந்து சுவாரஸ்யமாகக் கேட்டுக்கொண்டிருந்த ரோஸி, தன் கணவனின் முகத்தைப் பார்த்தாள். "இப்படித் திரும்புங்கள்" என்றவள், ஆர்தர் திரும்பியதும், "அப்பாவைச் சும்மாப் பேசவிட்டு அலுக்க அடிக்கிறீர்கள்!" என்ருள்.

'அப்பா!' என்று அருமையாக அழைக்கும் பெண்ணைப் பார்ப்பதுபோல இன்ஸ்பெக்டர் அருணகிரி கனிவுடன் பார்த்தார். ஆனல் அதுவரை இமைகொட்டாது ரோஸியையே பார்த்துக் கொண்டிருந்த ஆர்தர் எதையோ நினைத்துக் கொண்டவர்போல, "ஸார்!" என்ருர் மறுபடியும்.

"என்ன ஆர்தர்? இன்னுமா உன்னைவிட்டுச் சந்தேகம் அகலவில்லை?" என்றார் இன்ஸ்பெக்டர் நிமிர்ந்து பார்த்து.

"செய்யாத ஒரு குற்றத்திற்காக என் ரோஸியைச் சிறைக்கு அனுப்பி வைத்தேனே. அந்தப் பாவத்திற்கு நான் தண்டனை அடைந்தேனா?" என்றார்.

"ஏன் இல்லை?" என்று புன்னகை சொரிந்தார் அருணகிரி. "தண்டனை அடைந்து விட்டாய், ஆர்தர். சிறையில், ரோஸி மனம் துடிதுடித்தாள். அதே சமயம் தவறிழைத்து விட்டோமே என்று வருந்தி நீ துடிதுடித்துப் போய் நிம்மதியற்று உன் மனதை அலட்டிக் கொண்டு அமைதி கெட்டு அலையவில்லையா? அதற்கு அது ஈடாகிவிட்டது. போதும் போதாததற்கு அவளை மணந்து அதற்காகப் பிராயசித்தமும் செய்து தீர்த்துக்கொண்டு விட்டாய்! இனி எதற்காகத் தர்மம் தண்டனை தேடித்தரப் போகிறது?"

"அப்படியானால் ரோஸியின் மீது வீண் பழி சுமத்தி அவளைச் சிறைக்கனுப்ப வழிவகுத்த 'வின்சென்ட்' இன்று நிரபராதிபோல வெளியே நடமாடவில்லை?"

"தான் செய்த வஞ்சகத்திற்குப் பல காலாடிகளின் பூட்ஸ் காலால் அவன் பூச்சிபோல மிதித்துத் துவைக்கப்படவில்லையா? அதுதான் அவனுக்குக் கிடைக்கவேண்டிய தண்டனை. பிறகு என்ன?"

"ஆனால் ரோஸி சிறைத் தண்டனை அனுபவித்தது?"

"என்னைக் கேட்டால்? உன் ரோஸியிடமே கேளேன்......!" எனக் கூறி மடமடவெனச் சிரித்தார் இன்ஸ்பெக்டர் அருணகிரி.

"போதுமே!" என்று தன் தலையைத் தோள் பட்டையில் ஒரு இடி இடித்துக் கொண்டு, "சாவகாசமாக ராத்திரி சொல்லுகிறேன்; முதலில் 'அப்பா'வுக்கு வேறு ஹிம்சை எதுவும் கொடுக்காமல் அவரை வீட்டுக்கு அனுப்ப வழி பாருங்கள், தொண தொணத்தது போதும்!" என்று கொஞ்சலாகச் சிணுங்கியபடியே புன்னகை உதிர்த்துவிட்டு உள்ளே ஓடினாள் ரோஸி.

இன்ஸ்பெக்டர் அருணகிரி சிரித்தார். சப்-இன்ஸ்பெக்டர் ஆர்தர் சிரித்தார். மயங்கிக் கிடந்த நீதிகூடத் தெளிவு பெற்றுச் சிரித்துவிட்டது'

முற்றும்.

# துப்பறியும் மர்ம நாவல்கள்

பி. டி. சாமி எழுதியது

| | | ரூ. | பை |
|---|---|---|---|
| இரவுப் பாடகி | | 1 | 50 |
| கொல்லும் வயது பதினாறு | | 2 | 00 |
| விமானக் கொலை | | 2 | 00 |
| கணவன் கட்டிய தூக்குக் கயிறு | | 2 | 00 |
| பலிவாங்கும் பத்ரகாளி | | 3 | 00 |
| போதை ஊசி போடும் பேதை | | 2 | 50 |
| சந்திரமோகன் எழுதியது: | | | |
| எச்சரிக்கை 3o | | 2 | 50 |
| ராக்கெட் காதலர்கள் (விஞ்ஞான விசித்திர நாவல்) | | 2 | 00 |
| மர்மகொலை | சிரஞ்சீவி | 1 | 00 |
| பேய்வீடு | ,, | 2 | 50 |
| ரத்தப்பசி | ,, | 2 | 50 |
| மர்மத்தீவு | ,, | 2 | 50 |
| இறந்த மனிதரின் இறவாத உயிர் | எழுதியவர்: கார்த்திகேயன் | 1 | 50 |
| எத்தன் சாம்பாஜி | நாரா. நாச்சியப்பன் | 2 | 50 |
| பாஸ்கர விலாஸ் கொலை | அல்லிகாந்தன் | 2 | 50 |

## இளைஞர் நூலக வரிசை

| | | | |
|---|---|---|---|
| நான்கு மேதாவிகள் | அரு. ராமநாதன் | 0 | 80 |
| பட்சி சிம்மன் | மலர் மன்னன் | 0 | 80 |
| ஒட்டுக் குடுமி பட்டுசாமி | நாரா. நாச்சியப்பன் | 0 | 80 |
| மர்ம குதிரைகள் | மலர் மன்னன் | 0 | 80 |
| நீளமூக்கு நெடுமாறன் | நாரா. நாச்சியப்பன் | 0 | 80 |
| சின்னஞ்சிறு தேவதை | மலர் மன்னன் | 0 | 80 |
| டமாரக் குட்டி | பிரேமா சரஸ்வதி | 0 | 80 |

## பொன் மொழிகள் நூல் வரிசை

| | | | |
|---|---|---|---|
| பைபிள் | இயேசு நேசர் | 0 | 80 |
| புத்தர் | அரு. ராமநாதன் | 0 | 80 |
| மகாத்மா காந்தி | அரு. ராமநாதன் | 1 | 00 |
| மகாகவி பாரதியார் | அரு. ராமநாதன் | 1 | 00 |

பிரேமா பிரசுரம், 35–ஆற்காடு ரோடு, சென்னை—600 024,

தொலைபேசி எண் : 420325.